










# மே

# 2020

# நடப்பு நிகழ்வுகள்

©

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.எத்தனை மாநிலங்களின் நீர் பகிர்வு தொடர்பான சர்ச்சைக்கு தீர்வுகாண, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது?**

அ. இரண்டு

ஆ. மூன்று

**இ. நான்கு ☑**

ஈ. ஐந்து



❖ தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்ககளுக்கு இடையே காவிரியாற்று நீரைப்பகிர்வது தொடர்பான சர்ச்சைக்கு தீர்வுகாண்பதற்காக, இந்திய அரசு, கடந்த 2018ஆம் ஆண்டில் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

❖ அண்மையில், இதற்கு முன் நீர்வளம், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர்ப்பு அமைச்சகத்தின் கீழிருந்த இவ்வாணையம் அதிகாரப்பூர்வமாக ஜல் சக்தி அமைச்சகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த ஆணையத்துடன், கோதாவரி ஆறு மேலாண்மை வாரியம் & கிருஷ்ணா ஆறு மேலாண்மை வாரியம் ஆகியவை ஜல் சக்தி அமைச்சகத்தின் நீர்வளம், ஆறுகள் மேம்பாடு & கங்கை புத்துயிர்ப்புத் துறையின்கீழ் கொண்டுவரப்படுகின்றன.


**2.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், 2020ஆம் ஆண்டு நிலவரப்படி, அதிக எண்ணிக்கையிலானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. சத்தீஸ்கர் ☑**

ஈ. உத்தர பிரதேசம்




❖ அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், முன்னனுபவமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் மாநிலங்களின் பட்டியலில், சத்தீஸ்கர் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாடு முழுவதும் இந்தத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் மொத்தம் 77.85 இலட்சம் தொழிலாளர்களுள், 18.51 இலட்சம் தொழிலாளர்கள் சத்தீஸ்கரைச் சேர்ந்தவர்களாவர். அது சுமார், 24% ஆகும். மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 14 சதவீதத்துடன் ராஜஸ்தான் இரண்டாவது இடத்திலும், 12 சதவீதத்துடன் உத்தர பிரதேசம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

**3.எந்தப் பன்னாட்டு அமைப்புக்கு, இந்தியாவின் அடுத்த நிரந்தர பிரதிநிதியாக T S திருமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. உலக சுகாதார அமைப்பு

**ஆ. ஐக்கிய நாடுகள் அவை ☑**

இ. உணவு & வேளாண் அமைப்பு

ஈ. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு



- மூத்த இந்திய வெளியுறவு சேவையை அதிகாரியான T S திருமூர்த்தி, ஐக்கிய நாடுகள் அவையின் அடுத்த தூதராக அல்லது இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது, வெளியுறவு அமைச்சகத்தில் செயலராக (பொருளாதார உறவுகள்) பணியாற்றிவருகிறார். இம்மாதத்தில் பணி ஓய்வுபெறவுள்ள சையத் அக்பருதீனுக்கு பதிலாக அவர் இந்தப் பொறுப்பை ஏற்கவுள்ளார். இந்த நியமனத்திற்கு முன்னதாக, T S திருமூர்த்தி அவர்கள், இந்தியாவின் வெளிவிவகாரங்கள் தொடர்பான பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

**4. NIP தொடர்பான பணிக்குழு, சமீபத்தில், தனது அறிக்கையை மத்திய நிதி அமைச்சரிடம் சமர்ப்பித்தது. NIP'இல் 'I' என்பது எதைக் குறிக்கிறது?**

அ. முதலீடு

**ஆ. உட்கட்டமைப்பு ☑**

இ. தொழிற்துறை

ஈ. தன்னாட்சி



- தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பணிக்குழு (NIP) 2019–25 காலக்கட்டத்துக்கான தனது இறுதி அறிக்கையை, மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம், புது தில்லியில் வழங்கியது. இந்தப் பணிக்குழுவின் 2019–2025 காலகட்டத்துக்கான சுருக்க அறிக்கையை நிதியமைச்சர் கடந்த 2019 டிச.31 அன்று வெளியிட்டார். நாட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் ₹100 இலட்சம் கோடி செலவிடப்படும் என்று 2019–20 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது.

- தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பணிக்குழுவை உருவாக்குவதற்கு, ₹100 கோடி மதிப்புக்கும் மேற்பட்ட அனைத்து பெரிய திட்டங்களும் (கிரீன்பீல்டு அல்லது பிரவுன்பீல்டு, அமல்நிலையில் உள்ள அல்லது திட்டமிடல் நிலையில் உள்ள) சேர்க்கப்பட்டுள்ளன. 2020–25 நிதியாண்டு காலகட்டத்தில் ₹111 இலட்சம் கோடி மதிப்பில் முதலீடுகளை செய்யக்கூடிய கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டங்கள் தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பணிக்குழுவின் இறுதி அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**5. International Budget Partnership (IBP) நடத்திய ஒளிவுமறைவில்லா வரவுசெலவுத் திட்ட ஆய்வின்படி, வரவுசெலவுத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ. 53 ☑**

ஆ. 62

இ. 82

ஈ. 98

- International Budget Partnership (IBP) நடத்திய ஒளிவுமறைவில்லா வரவுசெலவுத்திட்ட ஆய்வினை சமீபத்தில் வெளியிட்டது. இது, வரவுசெலவுத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மையின் அளவை 0–100 என்ற அளவில் மதிப்பிடுகிறது. 87 மதிப்பெண்களுடன் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. இந்தப்

பட்டியலில், வரவுசெலவுத்திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் 117 நாடுகளுள் இந்தியா 53$_{ஆவது}$ இடத்தில் உள்ளது.

❖ இது, இந்தியாவின் மத்திய வரவுசெலவுத்திட்டத்தின் செயல்முறைக்கு 49/100 மதிப்பெண்களை வழங்கியுள்ளது. அதேவேளை, உலகளாவிய சராசரி 45 என்ற அளவில் உள்ளது. இந்த ஆய்வறிக்கை, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் விவாதிக்கப்படக்கூடிய வரவு செலவுத்திட்டத்துக்கு முந்தைய ஓர் அறிக்கையை வெளியிட வேண்டும் எனக் கூறுகிறது.

**6. "கோவில்பட்டி கடலை மிட்டாய்"க்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி அமைந்துள்ள மாவட்டம் எது?**

அ. திருநெல்வேலி

**ஆ. தூத்துக்குடி ☑**

இ. தென்காசி

ஈ. இராமநாதபுரம்



❖ தூத்துக்குடி மாவட்டம், "கோவில்பட்டி கடலை மிட்டாய்"க்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது. புவிசார் குறியீடுகளின் துணைப் பதிவாளர் இதனை அறிவித்தார். கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெல்லப்பாகுடன் வேர்க்கடலையைச்சேர்த்து, "கடலை மிட்டாய்" தயாரிக்கப்படுகிறது. நீண்டகாலம் கெடாமலிருக்கும் ஆற்றல் பெற்றுள்ளதால், இதனை பேரளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். மேலும், புவிசார் குறியீடு பெற்றுள்ளதால் இந்த இனிப்புவகை, தேசிய அளவிலும் பன்னாட்டளவிலும் வாடிக்கையாளர்களை பேரளவில் ஈர்க்கும்.

**7. "வங்கித்திட்டங்கள், எண்ணங்கள், புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி வலைதளம்" என்றவொன்ற தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

MSME
सूक्ष्म , लघु एवं मध्यम उद्यम
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES

❖ மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சரான நிதின் கட்கரி, காணொளிமூலம் "வங்கித்திட்டங்கள், யோசனைகள், புத்தாக்கம் & ஆராய்ச்சி வலைதளத்தை" தொடங்கிவைத்தார். இவ்வலைதளம்மூலம் மத்திய, மாநில, யூனியன் பிரதேச அரசுகளின் அனைத்துத் திட்டங்களையும் அணுகவியலும்.

❖ இந்தத் துறையின் யோசனைகள், புதிய எண்ணங்கள் மற்றும் ஆராய்ச்சிகளைப்பதிவேற்ற இதில் இடமுள்ளது. யோசனைகளைத் தெரிவிப்பதற்கு மட்டுமல்லாமல், அதனை மதிப்பிட்டு தரக்குறியீடு வழங்கக்கூடிய தனித்துவமான அம்சங்கள் இத்தளத்தில் உள்ளன. கூட்டு முதலீடு, அந்நிய பங்குதாரர் –களையும் இந்த வலைதளம் ஊக்குவிக்கும்.

**8.பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வுவாரியத்தின் அடுத்த தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ. அமிதாப் காந்த்

**ஆ. இராஜீவ் குமார் ☑**

இ. M S சாஹூ

ஈ. நிருபேந்திர மிஸ்ரா

❖ முன்னாள் நிதித்துறை செயலாளர் இராஜீவ் குமார், அண்மையில், பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வு வாரியத்தின் தலைவராக 3 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார். இவருக்கு முன்னர் இப்பதவியில் இருந்த, அண்மையில் குடியரசுத்தலைவர் இராம் நாத் கோவிந்தின் செயலாளராக நியமிக்கப்பட்ட கபில் தேவ் திரிபாதிக்கு பதிலாக இராஜீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வு வாரியம் என்பது மத்திய அரசுத்துறை நிறுவனங்களில் உயர் நிர்வாகப் பதவிகளை நியமிப்பது குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக பணியாளர், பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின்கீழ் இந்திய அரசால் அமைக்கப்பட்ட உயரதிகாரம் பெற்ற ஓர் அமைப்பாகும்.

**9.ஆந்திர மாநில அரசு தொடங்கியுள்ள, "ஜகனண்ணா வித்யா தீவேனா" திட்டத்தின் நோக்கம் என்ன?**



**அ. கல்லூரிக் கட்டணத்தை 100% திருப்பியளித்தல் ☑**

ஆ. பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்

இ. சிறுமிகளுக்கு இலவச கல்வி

ஈ. பள்ளிகளில் மதிய உணவு

❖ பொறியியல் உட்பட உயர்கல்வி பயிலும் மாணவர்களின் கல்விக்கட்டணங்கள் 100% திருப்பியளிக்கும் "ஜகனண்ணா வித்யா தீவேனா" என்னும் திட்டத்தை ஆந்திரப் பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது. இதற்காக ₹4,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முந்தைய அரசு செயல்பட்ட காலத்தில் மிச்சமிருந்த தொகையை வழங்குவதற்காக ₹1,880 கோடி நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின்மூலம், அம்மாநிலத்தைச் சார்ந்த பதினான்கு லட்சம் கல்லூரி மாணாக்கர் பயனுறுவர். திருப்பிச்செலுத்தப்படும் தொகையானது இக்கல்வியாண்டிலிருந்து 4 தவணைகளில், மாணாக்கரின் தாய்மார்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவுவைக்கப்படும்.

**10.ஜான்–ஜார்ஜ் நூவர் என்பவர் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளுடன் தொடர்புடையவராவார்?**



அ. உலக நலவாழ்வு நாள்

ஆ. உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க நாள்

**இ. உலக நடன நாள் ☑**

ஈ. உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள்

- நடனக்கலைஞர்களின் சேவையை கௌரவிக்கும் பொருட்டு UNESCO, சர்வதேச நடன கவுன்சிலுடன் இணைந்து உலக நடன நாளை ஏப்.29ஆம் தேதி கொண்டாடி வருகிறது. இது, நடனக்கலைஞர் ஜான் ஜார்ஜ் நூவர் (Jean–Georges Noverre) என்பவரின் பிறந்தநாளாகும்.
- பிரெஞ்சு நடனக்கலைஞரான இவர் பாலே நடனக்கலையில் சிறந்து விளங்கியவர். மக்களிடையே நடனத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச்செய்வதுடன் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள நடனத்திற்குரிய முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இந்தச் சிறப்பு நாளை பன்னாட்டு நாடக நிறுவனத்தின் நடனக்குழுமம் உருவாக்கியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு சிறந்த நடனக்கலைஞரை இக்குழுமம் தேர்ந்து, அவரின் செய்தியை இவ்வுலகுக்கு கூறுகிறது. இந்த ஆண்டுக்கான கருத்தை, தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த நடனக் கலைஞரான கிரிகோரி வுயானி மாகோமா வழங்கியுள்ளார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு கவுன்சில் தொடங்கிய COVID-19 நோய்த்தொற்றை மையமாகக்கொண்ட உடல்நலம் மற்றும் இடர் தொடர்பு குறித்த திட்டத்தின் பெயர் என்ன?**

அ. யாத்ரா

**ஆ. யாஷ் ☑**

இ. யக்னா

ஈ. வருண்

Department of Science & Technology, Government of India

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின்கீழ் செயல்படும் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு கவுன்சிலானது உடல்நலம் மற்றும் இடர் தொடர்பு குறித்த ஒரு திட்டத்தை, 'Year of Awareness on Science and Health' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம், உடல்நலம் குறித்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும், மக்களிடையே அறிவியல் மனநிலையையும் நலவாழ்வு நனவையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. COVID-19 நோய்த்தொற்றைச் சமாளிக்க சமுதாயத்தை சித்தப்படுத்துவதற்கான தீர்வுகளை வளர்ப்பதில் கல்வி, ஆராய்ச்சி, ஊடகங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை ஈடுபடுத்தவும் இந்தத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

**2.சமீபத்தில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட, "திட்ட கண்காணிப்புப் பிரிவு" என்பது எந்தத் தொழிலுடன் தொடர்புடையது?**

அ. வேதியியல் தொழிற்துறை

ஆ. உணவு பதப்படுத்தும் தொழிற்துறை

**இ. நிலக்கரி தொழிற்துறை ☑**

ஈ. தானியங்கு தொழிற்துறை



❖ நிலக்கரி சுரங்கங்களில் பணிகளை தொடங்குவதற்கு மத்திய & மாநில அரசு அதிகாரிகளிடமிருந்து தேவையான பல்வேறு அனுமதிகளைப்பெற, நடுவணரசு, அண்மையில், "திட்ட கண்காணிப்புப் பிரிவு" என்றவொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முடிவு, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு பெற்றோருக்கு அவர்களது சுரங்கப்பணிகளை சரியான நேரத்தில் தொடங்குவதற்கான ஒப்புதல்களைப்பெற உதவும். இதன்மூலம், இந்தியாவில் வணிகம் மேற்கொள்வது எளிமையாக்கப்படும். இது, நாட்டில் நிலக்கரி உற்பத்தியை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**3.இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில் தனது SLF-MF திட்டத்தின்கீழான பயன்களை நீட்டித்தது. இந்தத் திட்டத்தில் 'MF' என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Micro Finance

**ஆ. Mutual Funds ☑**

இ. Micro Funds

ஈ. Multiple Finance



❖ பரஸ்பர நிதியங்கள் மீதான பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கி ₹50,000 கோடி கடனுதவியை அறிவித்துள்ளது. பிரபல நிறுவனமான பிராங்க்ளின் டெம்பிள்டன், கடந்த மார்ச் மாத இறுதியில், கிட்டத்தட்ட 50% வரை வீழ்ச்சிகண்டது. தொடர் சரிவை அடுத்து, இந்நிறுவனம் தனது 6 கடன் திட்டங்களை நிறுத்துவதாக அறிவித்தது.

❖ இதையடுத்து, பொருளாதார வல்லுநர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, இந்திய ரிசர்வ் வங்கி பரஸ்பர நிதி நிறுவனங்களின் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்காக ₹50,000 கோடி கடனுதவி அளிக்கும், "Special Liquidity Facility for Mutual Funds (SLF–MF) திட்டத்தை அறிவித்துள்ளது. பரஸ்பர நிதி நிறுவனங்கள் தொடர்ந்து செயல்படுவதற்கு இந்த நிதி பெரிதும் உதவும் என்று கூறப்படுகிறது.

**4.எந்த நாடு, தனது "Partnership for Affordable Healthcare Access and Longevity (PAHAL)" திட்டத்தின் மூலம், இந்தியாவுக்கு $3 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளது?**

அ. ஐக்கிய பேரரசு

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஜெர்மனி

ஈ. ஜப்பான்



❖ 'Partnership for Affordable Healthcare Access and Longevity (PAHAL)' என்பது அமெரிக்காவின் USAID மற்றும் புது தில்லியைச் சார்ந்த IPE குளோபல் நிறுவனத்திற்கும் இடையிலான ஒரு கூட்டு திட்டமாகும். COVID–19 நோய்த்தொற்றின் பரவலைக் கையாள்வதற்காக ஏற்கனவே $5.9 மில்லியன் அமெரிக்க டாலர்களை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. தற்போது அதனோடு சேர்த்து $3 மில்லியன் டாலர் நிதியுதவியை கூடுதலாக வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. PAHAL திட்டத்தின்மூலம், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டத்தின்கீழ்வரும் ஏழைகளுக்கும் மருத்துவ உதவி கிடைக்கும்.


**5. 1960 மே 1 முதல் நடைமுறைக்குவந்த மும்பை மறுசீரமைப்புச் சட்டத்தின் விளைவாக மகாராஷ்டிர மாநிலத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட மற்றொரு மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. கர்நாடகா

ஈ. கோவா



❖ 1960ஆம் ஆண்டு மே 1 முதல் நடைமுறைக்குவந்த மும்பை மறுசீரமைப்புச் சட்டம், அப்போதைய பம்பாய் மாகாணத்தை மொழியின் அடிப்படையில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் என இரண்டு தனித்தனி மாநிலங்களாகப் பிரித்தது. மராத்தி மற்றும் கொங்கனி பேசும் மக்கள் மகாராஷ்டிராவின் ஒருபகுதியாக மாறினர், அதேவேளையில் குஜராத்தி மற்றும் கச்சி மொழி பேசுபவர்கள் குஜராத்தின் ஒருபகுதியாக மாறினர். ஆகையால், ஒவ்வோர் ஆண்டும் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தின் மாநிலம் உருவான நாளாக மே 1 கொண்டாடப்படுகிறது.

**6.அதானு சக்ரவர்த்தியின் பணிமூப்பு ஓய்வை அடுத்து, அடுத்த பொருளாதார விவகாரச் செயலாளராக அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்டவர் யார்?**



அ. இராஜேஷ் வர்மா

**ஆ. தருண் பஜாஜ் ☑**

இ. பிரீத்தி சுதன்

ஈ. அரவிந்த்குமார் சர்மா

❖ பொருளாதார விவகாரங்கள் துறைச்செயலராக இருந்த அதானு சக்ரவர்த்தி ஏப்ரல் 30ஆம் தேதியுடன் ஓய்வுபெற்றதை அடுத்து, புதிய செயலராக தருண் பஜாஜ் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். 1988ஆம் ஆண்டு இ.ஆ.ப பிரிவைச்சேர்ந்த தருண் பஜாஜ், இதற்கு முன்பு கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து பிரதமர் அலுவலகத்தில் கூடுதல் செயலராகப் பணியாற்றினார். அதற்குமுன் நிதியமைச்சகத்தின்கீழ் இயங்கும் பொருளாதார விவகாரங்கள் துறையின் இணைச்செயலராக பணியாற்றினார். தவிர, நிதிச்சேவைகள் துறையில் இணைச்செயலர், இயக்குநர் ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

**7.இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் நடத்திய ஓர் அண்மைய ஆய்வின்படி, 2020 ஏப்ரலில் அதிக வேலையின்மை விகிதத்தை பதிவுசெய்த மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. பீகார்

❖ இந்திய பொருளாதார கண்காணிக்கும் மையம் நடத்திய ஓர் அண்மைய ஆய்வின்படி, இந்தியாவின் வேலையின்மை விகிதம் 14.8 சதவீத புள்ளிகள் அதிகரித்து 2020 ஏப்ரல் மாதத்தில் 23.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. மிகப்பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு, 49.8 சதவீதத்துடன் நடப்பாண்டு ஏப்ரலில் அதிக வேலையின்மை விகிதத்தை பதிவுசெய்துள்ளது. இந்த விகிதம், நடப்பாண்டு மார்ச்சில் 6.3 சதவீதமாக இருந்தது. தமிழ்நாட்டை அடுத்து ஜார்கண்ட் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் உள்ளன. அதேவேளை, பஞ்சாப், சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானாவில் இந்த விகிதம் மிகக்குறைந்த அளவே காணப்படுகிறது.

**8.பொது முடக்கத்தின்போது, இரயில்வே அமைச்சினால் இயக்கப்படும் சிறப்பு ஷ்ராமிக் இரயில்கள்மூலம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அழைத்துவந்த முதல் மாநிலம் எது?**



**அ. ஜார்க்கண்ட் ☑**

ஆ. கேரளா

இ. உத்தரபிரதேசம்

ஈ. இராஜஸ்தான்

❖ நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் சிக்கித்தவிக்கும் தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களை அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அழைத்துவருவதற்காக இந்திய இரயில்வே, "சிறப்பு ஷ்ராமிக் இரயில்"களை அறிமுகப்படுத்தியுள்ளது. தெலுங்கானாவிலிருந்து இராஞ்சிக்கு புறப்பட்ட முதல் ஷ்ராமிக்

இரயில்மூலம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அழைத்துவந்த முதல் மாநிலமாக ஜார்க்கண்ட் திகழ்கிறது. சமீபத்தில், கேரள மாநிலத்திலிருந்து 1,200 புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு மற்றொரு சிறப்பு இரயில் ஒடிசாவின் புவனேசுவருக்கு புறப்பட்டது.

**9. COVID–19 பெரும் பரவலுக்கு இடையே, எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் சட்டமன்ற மேலவைத் தேர்தல்களை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது?**

அ. ஜார்க்கண்ட்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஜம்மு & காஷ்மீர்

❖ மகாராஷ்டிராவில் உள்ள சட்டமன்ற மேலவைக்கான தேர்தல்களை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் சமீபத்தில் அனுமதி வழங்கியது. முதலமைச்சர் உத்தவ் தாக்கரே மாநில சட்டமன்றத்தின் ஈரவைகளிலும் உறுப்பினராக இல்லை. ஆயினும் அவர், மே 27ஆம் தேதிக்கு முன்னதாக ஏதேனும் ஒரு அவைக்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். காலக்கெடுவான மே 27'க்கு முன்னதாக தேர்தல்களை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஒன்பது இடங்களுக்கான தேர்தல் செயல்முறை, COVID–19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**10.மணிப்பூரைச் சார்ந்த தங்ஜம் தபாலி சிங் என்பவருக்கு, 'Order of Rising Sun' வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதை நிறுவிய நாடு எது?**

அ. ஐக்கிய இராச்சியம்



**ஆ. ஜப்பான் ☑**

இ. சவூதி அரேபியா

ஈ. ஜெர்மனி

❖ மணிப்பூரைச் சார்ந்த மருத்துவரும், மணிப்பூர் சுற்றுலா மன்றத்தின் நிறுவனருமான தங்ஜம் தபாலி சிங்குக்கு, ஜப்பான், 'Order of Rising Sun – Gold and Silver Rays' விருதை வழங்கியுள்ளது. இந்தியாவில் ஜப்பானைப்பற்றி நன்கு புரிந்துகொள்ள உதவியதற்கும், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை ஆழப்படுத்தியதற்குமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த விருதை ஜப்பானிய பேரரசர் மீஜி 1875'இல் நிறுவினார். ஜப்பானிய கலாசாரம், சூழல் பாதுகாப்பு மற்றும் பன்னாட்டு உறவுகளை மேம்படுத்துவதில் பங்களிக்கும் தனிநபர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.உழவர்களை விநியோகச் சங்கிலியுடன் இணைப்பதற்காக அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கழகம் (CSIR) தொடங்கியுள்ள திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. கிசான் ரத்

**ஆ. கிசான் சபா ☑**

இ. கிசான் சுரக்ஷா

ஈ. கிசன் சம்ரிதி

❖ புது தில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கழகத்தின் (CSIR) மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம், 'கிசான் சபா' செயலியை உருவாக்கியுள்ளது. விநியோகச் சங்கிலி மற்றும் சரக்குப் போக்குவரத்து மேலாண்மை முறையுடன் விவசாயிகளை இணைப்பதற்கு இந்தச்செயலி உதவுகிறது. உழவர்கள், போக்குவரத்து நிறுவனங்கள், சேவை வழங்குவோர் பூச்சி மருந்துகள், விற்பனையாளர், பதனக்கிடங்கு மற்றும் சேமிப்புக்கிடங்கு உரிமையாளர்கள், மண்டி விற்பனையாளர்கள், நுகர்வோர் பெரிய சில்லரை விற்பனை கடைகள், மின்னணு வணிக அங்காடிகள், நிறுவன வாங்குவோர் மற்றும் சம்பந்தப்பட்ட இதர நிறுவனங்களை இந்தச் செயலி இணைக்கிறது.

**2. 2020 மே மாத நிலவரப்படி, எத்தனை மாநிலங்கள், "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தில் இணைந்துள்ளன?**

அ. 5

ஆ. 8

இ. 10

**ஈ. 17 ☑**

17

❖ "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" என்ற திட்டத்தில் உத்தர பிரதேசம், பீகார், பஞ்சாப், ஹிமாச்சலப பிரதேசம், தாத்ரா நகர் ஹவேலி மற்றும் டாமன், டையூ என மேலும் ஐந்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் சேருவதற்கு மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் இராம்விலாஸ் பஸ்வான் ஒப்புதல் அளித்துள்ளார்.

❖ இந்தத்திட்டத்தில் சேருவதற்கு ஆந்திர பிரதேசம், கோவா, குஜராத், ஹரியானா, ஜார்க்கண்ட், கேரளா, கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், தெலங்கானா, திரிபுரா ஆகிய பன்னிரண்டு மாநிலங்கள் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளன. தேசிய அளவில் / மாநிலங்களுக்கு இடையில் குடும்ப அட்டைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தில், 17 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 60 கோடி தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டப்பயனாளிகளுக்கு உதவிகரமாக இருக்கும். தற்போது பயன்படுத்தும் குடும்ப அட்டையின்மூலம் இந்த 17 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் வழங்கப்படும் உணவு தானியங்களை எந்த நியாயவிலைக்கடையிலும் அவர்களால் வாங்கவியலும்.

**3. 'பாரத் சந்தை' என்னும் தேசிய மின்னணு வணிகச்சந்தையை தொடங்கவுள்ள இந்திய கூட்டமைப்பு எது?**



அ. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII)

**ஆ. அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு (CAIT) ☑**

இ. இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கங்கள் கூட்டமைப்பு (FICCI)

ஈ. தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கம் (NASSCOM)

❖ அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பானது (CAIT) சமீபத்தில், 'BharatMarket' என்னும் ஒரு தேசிய மின்னணு வணிகச்சந்தையை தொடங்கப்போவதாக அறிவித்தது. உற்பத்தியாளர்களிடம் தொடங்கி கடைநிலை நுகர்வோர் வரை போக்குவரத்து வசதி மற்றும் விநியோகச் சங்கிலிகளில் சேவைகளை வழங்கப்பெறும் தொழில்நுட்ப பங்காளிகளுடன் இணைந்து, அனைத்து சில்லறை வர்த்தகர்களையும் சந்தையுடன் இணைப்பதை இந்தத் தளம் நோக்கமாகக்கொண்டுள்ளது.

**4.தொழில்மயமாக்கல் சகாப்தத்தின்போது, தொழிலதிபர்களின் உழைப்புச்சுரண்டலுக்கு எதிராக கிளர்ச்சி செய்தோர் எந்நாட்டினர்?**




அ. ஐக்கிய பேரரசு

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஜெர்மனி

ஈ. ஜப்பான்

❖ தொழில்மயமாக்கல் சகாப்தத்தின்போது, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தொழிலாளர்கள், உழைப்புச் சுரண்டலை மேற்கொண்ட முதலாளி வர்க்கத்தினருக்கு எதிராக ஒன்றாக கிளர்ந்தெழுந்தனர். நியாயமான ஊதியம், வேலைக்கு இடையே இடைவேளை மற்றும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு ஆகியவற்றை அவர்கள் கோரினர். 1886 மே 1 அன்று நடந்த இக்கிளர்ச்சி, மே தின கொண்டாட்டத்திற்கு வழிவகுத்தது. பன்னாட்டு தொழிலாளர் நாள் என்றும் அழைக்கப்படும் மே தினம் மே 1 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில், முதல் மே தினம், 1923 மே 1 அன்று சென்னையில் உள்ள ஹிந்துஸ்தானின் தொழிலாளர் கிசான் கட்சியால் கொண்டாடப்பட்டது.

**5.இலையுதிர்காலம் மற்றும் வசந்த காலத்தில் என ஆண்டுக்கு இருமுறை கொண்டாடப்படுகிற எந்தச் சிறப்பு நாள், மே 2 அன்று கொண்டாடப்படுகிறது?**



அ. பன்னாட்டு விண்வெளி விழிப்புணர்வு நாள்

**ஆ. பன்னாட்டு வானியல் நாள் ☑**

இ. பன்னாட்டு புவி நாள்

ஈ. பன்னாட்டு இயற்கை நாள்

❖ பன்னாட்டு வானியல் நாளானது ஆண்டுக்கு இரண்டு முறை, இலையுதிர் மற்றும் வசந்த காலத்தில் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டு வானியல் நாள், மே 2 & செப்.26 அன்று கொண்டாடப்படுகிறது.

❖ வடக்கு கலிபோர்னியா வானியல் சங்கத்தின் தலைவர், கடந்த 1973ஆம் ஆண்டில் முதல் வானியல் நாள் கொண்டாட்டத்தை ஏற்பாடுசெய்திருந்தார். பேரண்டம் குறித்தும் வானியல் துறையைப்பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளைக்கொண்டாடுவதன் நோக்கமாகும்.

**6. "Prof. B. B. Lal–India Rediscovered" நூலின் நூற்றாண்டு பதிப்பு, மின்னூல் வடிவில் வெளியிடப்பட்டது. பேராசிரியர் B.B. லால் தொடர்புடைய துறை எது?**



அ. தொற்றுநோயியல்

**ஆ. தொல்லியல் ☑**

இ. அறிவியல் ஆராய்ச்சி

ஈ. இலக்கியம்

❖ மாபெரும் தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் B.B லால் அவர்களின் நூற்றாண்டையொட்டி, "Prof. B. B. Lal–India Rediscovered" என்ற தலைப்பிலான மின்னூலை புது தில்லியில் மத்திய கலாசாரத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் வெளியிட்டார். இந்தப் புத்தகத்தை பேராசிரியர் B. B லால் நூற்றாண்டுக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாட்டுக் குழுவுடன் இணைந்து நூற்றாண்டு சிறப்புப் பதிப்பாக மத்திய கலாசாரத்துறை அமைச்சகம் தயாரித்துள்ளது. தொல்லியல் துறைக்கு அவராற்றிய ஈடிணையற்ற பங்களிப்புக்காக கலாசாரத்துறை அளிக்கும் அஞ்சலியாக இந்நூல் அமைந்துள்ளது.

**7. COVID–19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் நடந்த அவசரநிலை மெய்நிகர் G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**



அ. பியூஷ் கோயல்

ஆ. நிர்மலா சீதாராமன்

**இ. இரவிசங்கர் பிரசாத் ☑**

ஈ. பிரகாஷ் ஜவடேகர்

❖ COVID–19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள சவால்கள் குறித்து விவாதிப்பதற்காகவும் டிஜிட்டல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பன்னாட்டளவில் ஒருங்கிணைந்த முயற்சிகள் எடுப்பது குறித்து ஆலோசிப்பதற்காகவும் அவசரநிலை மெய்நிகர் G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சகர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் பிரதிநிதியாக மத்திய சட்டம் மற்றும் நீதி, தொடர்பியல் மற்றும் மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் கலந்துகொண்டார்.

❖ இந்தக்கூட்டத்தில், G20 டிஜிட்டல் அமைச்சர்கள் கொரோனா பெருந்தொற்றை கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் மக்களை பாதுகாக்கவும் டிஜிட்டல் மீடியத்தின் ஆற்றலை பெருமளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டனர். G20 டிஜிட்டல் பொருளாதார பணிக்குழு COVID–19'இன் அமைச்சர்கள் மாநாட்டு அறிக்கையானது கொரோனா பெருந்தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான ஒருங்கிணைந்த பன்னாட்டு டிஜிட்டல் முயற்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

**8. NASA'இன் செவ்வாய் உலங்குவானூர்தியின் புதிய அதிகாரப்பூர்வ பெயர் என்ன?**



அ. Intelligence

**ஆ. Ingenuity ☑**

இ. Brilliance

ஈ. Endeavor

❖ NASA'ஆல் நடத்தப்பட்ட, 'Name the Rover' கட்டுரைப் போட்டியில், அலபாமா உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஒரு இளைஞியின் கட்டுரை தேர்வுசெய்யப்பட்டுள்ளது, இது, செவ்வாய் கோளில் பறக்கவுள்ள NASA'இன் உலங்குவானூர்திக்கு பெயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. NASA அறிவித்தபடி, செவ்வாய் கோளில் பறக்கவுள்ள NASA'இன் உலங்குவானூர்திக்கான புதிய அதிகாரப்பூர்வ பெயர், 'Ingenuity'. முன்னதாக மார்ச்சில், ஊர்திக்கு, 'Preseverance' எனப் பெயரிடப்பட்டிருந்தது. இந்த உலங்குவானூர்தி, ஜூலை அல்லது ஆகஸ்டில் ஏவப்படும் 'Preseverance' ரோவர்மூலம் செவ்வாய் கோளுக்குச் செல்லும்.

**9.ஆயுஷ் அமைச்சகத்தின் கீழுள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் (AIIA), எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் காவல்துறையுடன் இணைந்து, 'ஆயுரக்ஷா' என்ற திட்டத்தை ஏற்பாடு செய்தது?**

அ. ஜார்க்கண்ட்

**ஆ. புது தில்லி ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஜம்மு & காஷ்மீர்

❖ மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அகில இந்திய ஆயுர்வேத மருத்துவ நிறுவனமும் தில்லி காவல்துறையும் இணைந்து தில்லியில், "ஆயுரக்ஷா" என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தன. COVID–19 தொற்று ஒழிப்பில் களத்தில் உள்ள தில்லி காவல்துறையினரின் பணிகளைப் பாராட்டும் வகையிலான இந்நிகழ்வில், "கொரோனா சே ஜங் தில்லி போலீஸ் கே சாங்" (கொரோனா நோய்த்தொற்றை எதிர்த்து போரிடுவோம், தில்லி காவல்துறையுடன் பாடுவோம்) என்ற விழிப்புணர்வு பரப்புரை நடத்தப்பட்டது. நீரிழிவு நோய், மனவழுத்தம், உயர் குருதி அழுத்தம் போன்ற நோயுற்ற நிலைமைகளைக்கொண்ட காவல்துறை அதிகாரிகள் AIIA'ஆல் அடையாளம் காணப்படுவார்கள்.

**10. "ஆறுகள் மேலாண்மையின் எதிர்காலம்" குறித்த 'IDEAthon'ஐ தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

இ. பழங்குடியினர் விவகார அமைச்சகம்

**ஈ. ஜல் சக்தி அமைச்சகம் ☑**

❖ COVID–19 தொற்று நெருக்கடி ஆறுகள் மேலாண்மைக்கான வருங்கால திட்டங்களை எவ்வாறு வடிவமைக்கும் என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள, "ஆறுகள் மேலாண்மையின் எதிர்காலம்" குறித்த

'IDEAthon' என்னும் ஆலோசனைகளை சொல்லும் போட்டியை, நீர்வள அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கமும் தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனமும் இணைந்து நடத்தின.

- இந்தப் பன்னாட்டு இணைய கருத்தரங்கில் கிட்டத்தட்ட ஐந்நூறு பேர் பங்கேற்றனர். பல்வேறு நாடுகள் & பன்னாட்டு அமைப்புகளை சேர்ந்தோர் நிபுணர் குழுவில் இருந்தனர். ஆறுகள் மேலாண்மையைப் பற்றிய கூடுதல் கவனத்தை ஈர்க்கவும், நகரங்களையும் ஆறுகளையும் ஒன்றோடொன்று இணைப்ப –தைப்பற்றி வலியுறுத்தவும் இந்த, 'IDEAthon'ஐ தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம் நடத்தியது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.காஷ்மீர் குங்குமப்பூவுக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது. உலகில் அதிகளவில் குங்குமப் பூவை உற்பத்தி செய்யும் நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. ஈரான் ☑**

இ. சவுதி அரேபியா

ஈ. தைவான்

❖ குங்குமப்பூ உற்பத்தியைப்பொறுத்தவரை ஈரான் உலகில் முதலிடத்தில் உள்ளது. காஷ்மீர் குங்குமப் பூவுக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றது. இது, ஜம்மு–காஷ்மீரின் கரேவா (உயர் நிலங்களில்) பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது. நீண்ட மற்றும் அடர்த்தியான சூல்முடிகள், இயற்கையான அடர் செந்நிறம் மற்றும் அதிகளவு குரோசின், சஃப்ரானல் மற்றும் பைக்ரோக்ரோசின் போன்றவை காஷ்மீர் குங்குமப்பூவின் தனித்துவமான பண்புகளாகும். கடல் மட்டத்திலிருந்து சராசரி 1,600 மீ முதல் 1,800 மீ உயரத்தில் வளர்க்கப்படும் உலகின் ஒரே குங்குமப்பூ வகை இதுவாகும்.

**2. 'உலக டூனா நாள்' 2020 மே 3 அன்று அனுசரிக்கப்பட்டது. டூனா சார்ந்த இனம் எது?**



அ. பறவை

**ஆ. மீன் ☑**

இ. பூச்சி

ஈ. ஊர்வனம்

❖ 'உலக டுனா நாள்' 2020 மே 3 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. டூனா, ஒமேகா–3 நிறைந்த ஒரு மீன் வகையைச் சார்ந்த இனமாகும். இவ்வகை மீன்களில் தாதுக்கள், புரதங்கள் மற்றும் வைட்டமின் B12 உள்ளிட்ட அதிக ஊட்டச்சத்துகள் இருப்பதால், அதிகப்படியான நுகர்வின் காரணமாக இவ்வினம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. கடந்த 2016 டிசம்பரில், ஐ.நா பொது அவையானது மே 3ஆம் தேதியை அன்று உலக டூனா நாளாக அறிவித்தது.

**3. 'சக்–ஹாவ்' என்னும் ஒரு கருப்பரிசி வகைக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது. இது, எந்த மாநிலத்தில் காணப்படுகிறது?**



அ. அஸ்ஸாம்

ஆ. சிக்கிம்

**இ. மணிப்பூர் ☑**

ஈ. அருணாச்சல பிரதேசம்

❖ மணிப்பூரைச் சார்ந்த 'சக்–ஹாவ்' என்னும் ஒருவகை கருப்பரிசிக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றது. 'சக்–ஹாவ்' என்பது நறுமணத்துடன் பசைத்தன்மை மிக்க ஒரு அரிசிவகையாகும். இது, மணிப்பூரில் அதிகளவில் பயிரிடப்படுகிறது.

- பாரம்பரிய மருத்துவர்களால் இது அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. அதன் நார்ச்சத்துமிக்க தவிட்டு அடுக்கு மற்றும் அதிக கச்சா நார்ச்சத்து ஆகியவற்றின் காரணமாக இதனைச் சமைப்பதற்கு மிக நீண்ட நேரமாகின்றது. மேலும், உத்தர பிரதேச மாநிலத்தின் நூற்றாண்டுகள் பழமையான கோரக்பூரின் டெர்ராகோட்டா பாரம்பரிய கலை வடிவத்துக்கும் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

**4.நகர்ப்புறவாசிகளுக்கு குறைந்தபட்சம் 120 நாட்களுக்கு வேலைவாய்ப்பு உறுதியளிப்பைத் தரும், 'முக்கிய மந்திரி ஷாஹரி ரோஜ்கர் உறுதியளிப்பு யோஜனா' என்பது எந்த மாநிலத்தின் திட்டமாகும்?**

அ. ஹரியானா

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. சத்தீஸ்கர்

- ஹிமாச்சல பிரதேச அரசானது, நகர்ப்புறவாசிகளுக்கு குறைந்தபட்சம் 120 நாட்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் அளிப்பதை நோக்கமாகக்கொண்ட, 'முக்கிய மந்திரி ஷாஹரி ரோஜ்கர் உறுதியளிப்பு யோஜனா' என்ற திட்டத்தை தொடங்க முடிவுசெய்துள்ளது. பணியமர்த்தப்படுவோருக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்படும் என்றும் அம்மாநில அமைச்சரவை அறிவித்துள்ளது. பல்வேறு மாநிலங்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேலான தொழிலாளர்கள் தற்சமயம் ஹிமாச்சல பிரதேசத்திற்குத் திரும்பியுள்ளதால், அவர்களின் பணி அனுபவத்திற்கு ஏற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**5.நடப்பாண்டு வழங்கப்படும் 25ஆவது நிக்கி ஆசியா பரிசுக்கு இந்திய பேராசிரியர் தலப்பில் பிரதீப் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நிக்கி ஆசியா பரிசினை, எந்த நாட்டைச் சார்ந்த ஓர் ஊடக நிறுவனம் உருவாக்கி வழங்கி வருகிறது?**

அ. தாய்லாந்து

ஆ. சிங்கப்பூர்

**இ. ஜப்பான் ☑**

ஈ. வியட்நாம்



- ஆசியாவில் நீடித்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் தனிநபர்களுக்கு நிக்கி ஆசிய பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விருதை ஜப்பானின் மிகப்பெரிய ஊடக நிறுவனங்களுள் ஒன்றான நிக்கி உருவாக்கி வழங்கி வருகிறது. பிராந்திய வளர்ச்சி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை மற்றும் கலாசாரம் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான விருது, மெட்ராஸ் ஐஐடி பேராசிரியரும், பத்மஸ்ரீ விருதாளருமான தலப்பில் பிரதீப் அவர்கட்கு இந்தியாவில் லிட்டருக்கு 2 பைசா செலவில் சுத்தமான தண்ணீரை வழங்கக்கூடிய நானோ தொழில்நுட்பத்தினாலான நீர் வடிப்பான்களை உருவாக்கியதற்காக வழங்கப்பட்டுள்ளது.

**6.** **மே.3 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் உலக பத்திரிகை சுதந்திர நாளுக்கான கருப் பொருள் என்ன?**

அ. Journalism without borders

**ஆ. Journalism without Fear or Favour ☑**

இ. Press needs real Freedom

ஈ. Press Freedom without Pressure




❖ உலக பத்திரிகை சுதந்திர நாளானது (World Press Freedom Day) ஒவ்வோர் ஆண்டும் மே 3 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. "Journalism without Fear or Favour" என்ற ஓர் உலகளாவிய பரப்புரையை UNESCO யுனெஸ்கோ ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் தொடங்கியது. உலக பத்திரிகை சுதந்திர மாநாடானது கடந்த 1983ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஏற்பாடு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, நெதர்லாந்து, இந்த மாநாட்டை அக்.18–20 வரை ஹேக்கில் நடத்தவுள்ளது. இம்மாநாடு, முன்னதாக, 2020 ஏப்ரலில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

**7.சமீபத்தில் காலமான லோக்பால் உறுப்பினரும் சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியுமானவரின் பெயர் என்ன?**

அ. K S நிசார் அகமது

ஆ. மேத்யூ அனிகுஷிகட்டில்

இ. குண்டனிகா கபாடியா

**ஈ. அஜய் குமார் திரிபாதி ☑**



❖ இந்திய லோக்பால் அமைப்பின் நீதித்துறை உறுப்பினர் நீதியரசர் அஜய்குமார் திரிபாதி (62) COVID–19 பாதிப்பால் புது தில்லி AIIMS மருத்துவமனையில் காலமானார். பாட்னா உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கிய அவர், கடந்த 2006'இல் பாட்னா உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமனம் பெற்றார். 2018'இல் சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அவர் பதவியேற்றார். கடந்த 2019'இல் இந்திய லோக்பால் அமைப்பின் நீதித்துறை உறுப்பினராக அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

**8.நடப்பாண்டின் (2020) UNESCO / கில்லர்மோ கேனோ பரிசுக்கு ஜினெத் பெடோயா லிமா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த விருது தொடர்புடைய துறை எது?**

அ. கட்டடக்கலை

ஆ. கலாசாரம்

**இ. இதழியல் ☑**

ஈ. அறிவியல்




❖ ஆண்டுதோறும் வழங்கப்படும் UNESCO / கில்லர்மோ கேனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசானது பத்திரிகை சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு பங்காற்றும் தனிநபர் / நிறுவனத்தை கௌரவிக்கிறது. கடந்த 1997ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த விருது, கொலம்பிய ஊடகவியலாளர் கில்லர்மோ கேனோ

இசாசாவின் பெயரால் வழங்கப்படுகிறது. உலக பத்திரிகை சுதந்திர நாளை முன்னிட்டு மே.3 அன்று தேதி இந்த விருது வழங்கப்படுகிறது.

❖ இந்த ஆண்டு, கொலம்பிய புலனாய்வு இதழாளர் ஜினெத் பெடோயா லிமா, UNESCO / கில்லர்மோ கேனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது படைப்புகள், நாட்டில் ஆயுதக்கிளர்ச்சி & பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் குறித்து கவனம் செலுத்துகின்றன.

**9.ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சலின் முதல் பாதிப்பு, எந்த இந்திய மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளது?**



அ. பீகார்

ஆ. ஜார்க்கண்ட்

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மணிப்பூர்

❖ சுமார் 2,500 பன்றிகளின் உயிரிழப்புக்கு காரணமான ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சலின் முதல் பாதிப்பு, அஸ்ஸாம் மாநிலத்தில் பதிவாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பன்றிகளை உடனடியாக கொன்றொழிப்பதற்கு மத்திய அரசு அனுமதியளித்திருந்த போதிலும் மாநில அரசு அதனை மேற்கொள்ளவில்லை. பன்றிக் காய்ச்சல் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவாது என்றும், அந்நோயைத் தடுப்பதற்கான மாற்று வழி ஒன்றை மாநிலம் மருத்துவத் துறை தயாரித்து வருவதாகவும் அம்மாநிலம் அறிவித்துள்ளது. சுமார் 21 இலட்சம் உள்நாட்டு பன்றிகளின் எண்ணிக்கையுடன் வடகிழக்கில் பன்றி இறைச்சி சந்தையில் அஸ்ஸாம் முன்னிலை வகித்துவருவது குறிப்பிடத்தக்கது.

**10. 1927ஆம் ஆண்டு இந்தியக் காடுகள் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின்மூலம், 'மரம்' பிரிவிலிருந்து நீக்கப்பட்ட தாவர இனம் எது?**



அ. சீமை ஆல்

ஆ. சீமைக்கருவேலம்

**இ. மூங்கில் ☑**

ஈ. வாழை

❖ 1927ஆம் ஆண்டு இந்தியக் காடுகள் சட்டத்தைத் திருத்தி, 2017ஆம் ஆண்டு இந்தியக் காடுகள் (திருத்தம்) சட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றியது. அது, மூங்கிலை 'மரம்' என்ற பிரிவிலிருந்து நீக்கியது. மேலும், கானிலிருந்து கொண்டுவரப்படும் வெட்டப்பட்ட / வீழ்ந்துகிடந்த மூங்கிலை, 'வெட்டப்பட்ட மரம்' எனக் கருதக்கூடாது எனவும் அறிவித்தது. அண்மையில், வடகிழக்கு பிராந்தியத்தின் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், காணொளிவழியில் மூங்கில் மாநாட்டில் உரையாற்றினார். நமது நாட்டின் COVID–19 நோய்த்தொற்றுக்குப் பிந்தைய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு மூங்கில் இன்றியமையாதது என அவர் அப்போது எடுத்துரைத்தார். பொது முடக்கத்துக்கு இடையே கடந்த ஏப்ரல்.16 முதல் மூங்கில் தொடர்பான நடவடிக்கைகளை செயல்படுத்த உள்துறை அமைச்சகம் அனுமதித்தது குறிப்பிடத்தக்கது.

# நடப்பு நிகழ்வுகள்

## 1. 'UV Blaster' என்ற புற ஊதா கிருமிநீக்க கோபுரத்தை உருவாக்கியுள்ள அமைப்பு எது?

அ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்

**ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ☑**

இ. பாரத மிகுமின் நிறுவனம்

ஈ. பாரத் மின்னணு நிறுவனம்

- நோய்த்தொற்று அதிகம் பாதிக்கக்கூடிய பகுதிகளில், வேதிக்கலப்பில்லாத துரித கிருமி நீக்கத்துக்கான புற ஊதா கிருமி நீக்க கோபுரத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு உருவாக்கியுள்ளது. "புற ஊதா வெடிப்பு" என்ற பெயருடைய இந்த உபகரணம், புற ஊதா அடிப்படையிலான கிருமி நாசினி ஆகும். இதனை, குருகிராமில் உள்ள நியூ ஏஜ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் & மெட்டீரியல்ஸ் என்னும் தனியார் நிறுவனத்தின் உதவியுடன், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் தில்லியைச் LASTEC எனும் முதன்மை ஆய்வுக்கூடம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

- இரசாயன முறையில் கிருமிநீக்கம் செய்யவியலாத ஆய்வுக்கூடங்கள் மற்றும் அலுவலகங்களில் உள்ள கணினிகள், சிறு பொறியமைப்புகள், மின்னணு சாதனங்கள் போன்ற தொழில்நுட்ப சாதனங்களின் மேற்பரப்புகளில் தொற்று நீக்குவதற்கு இந்தப் புற ஊதா உபகரணம் பயன்படும். மக்கள் அதிகமாகக் கூடும் வானூர்தி நிலையங்கள், வணிக வளாகங்கள், மெட்ரோ இரயில்கள், அலுவலகங்கள் போன்ற பகுதிகளில் இது சிறந்த முறையில் பயனளிக்கும்.

## 2. அசோசியேடட் பிரஸ்'இன் நிழற்படக்கலைஞர்களான தர் யாசின், முக்தார் கான் மற்றும் சன்னி ஆனந்த் ஆகியோர், அண்மையில் எந்த விருதைப் பெற்றதற்காக செய்திகளில் இடம்பிடித்தனர்?

**அ. நிழற்படத்திற்கான புலிட்சர் பரிசு ☑**

ஆ. டாய்ச் வெல்லே பத்திரிகை சுதந்திர விருது

இ. நிக்கி ஆசியா பரிசு

ஈ. UNESCO / கில்லர்மோ கேனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசு



- அமெரிக்க இதழாளர் ஜோசப் புலிட்சர் நினைவாக இதழியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு ஆண்டுதோறும் புலிட்சர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் செயல்படும் கொலம்பியா பல்கலைக்கழகத்தால் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான புலிட்சர் பரிசு பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதழியல், நாடகம், இசைத்துறையின் 23 பிரிவுகளில் புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டது. இதில், இதழியல் துறையின் நிழற்படப் பிரிவில் காஷ்மீரைச் சார்ந்த சன்னி ஆனந்த், முக்தார் கான், தர் யாசின் ஆகியோர் புலிட்சர் பரிசுக்கு தேர்வுசெய்யப்பட்டனர்.

- 370ஆவது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்ட பின்னர், காஷ்மீரில் நடந்த ஆர்ப்பாட்டங்கள், ஊரடங்கு உத்தரவு & மோதல்களின் சிறந்த புகைப்படத்திற்காக இம்மூவரும் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். அசோசியேடட் பிரஸ் பெறும் 54ஆவது புலிட்சர் பரிசு இதுவாகும். கடந்த ஆண்டு கதைகள், நிழற்படங்கள், காணொளி பிரிவில் இந்நிறுவனம் புலிட்சர் பரிசை வென்றது.

**3. 2020 மே மாதம் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் (NAM) காணொளிவழி உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?**

அ. Global Economy

**ஆ. United against COVID-19 ☑**

இ. Stakeholders for a Cohesive and Sustainable World

ஈ. Upholding the Bandung Principles

❖ COVID-19 நோய்த்தொற்றால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காக, அணிசேரா இயக்க (NAM) தொடர்புக்குழுவின் இணையதள மாநாடு மே.4 அன்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்துகொண்டார். "COVID-19 தொற்றுநோய்க்கு எதிராக ஒன்றிணைவோம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் 'NAM' தொடர்புக்குழுவின் மாநாடு, அந்த இயக்கத்தின் இப்போதைய தலைவரான அஜர்பைஜான் குடியரசின் அதிபர் இல்ஹாம் அலியேவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

❖ இம்மாநாட்டின் நோக்கம், இக்கொள்ளை நோயை ஒழித்துக்கட்டவும், COVID-19 தொற்றுக்கு எதிராக சர்வதேச ஒற்றுமையை மேம்படுத்துவது மற்றும் நாடுகள், சர்வதேச அமைப்புகளின் சக்திகளை ஒன்று திரட்டுவது ஆகியவை ஆகும். மேலும், இந்நிகழ்வில் பன்னாட்டு பன்முகத்தன்மை & அமைதிக்கான இராஜாங்கரீதியான நடவடிக்கைகள் ஆகியவையும் நினைவுகூரப்பட்டன.

**4.தலைமை எஃகு தொழிற்துறை அமைப்பான இந்திய எஃகு சங்கத்திலிருந்து வெளியேறியுள்ள எஃகு நிறுவனம் எது?**

அ. J S W ஸ்டீல்

**ஆ. TATA ஸ்டீல் ☑**

இ. ஆர்சலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல்

ஈ. ஜிண்டால் ஸ்டீல் & பவர் லிமிடெட்

❖ நாட்டின் முன்னணி எஃகு உற்பத்தியாளர்களில் ஒருவரான டாடா ஸ்டீல் சமீபத்தில் இந்திய எஃகு சங்கத்திலிருந்து தனது உறுப்புத்துவத்தை விலக்கிக்கொண்டது. டாடா ஸ்டீலின் தலைமை நிர்வாக அதிகாரியும் மேலாண்மை இயக்குநருமான இந்திய எஃகு சங்கத்தின் தலைவராகவும் இருந்த T V நரேந்திரனும் அந்தப் பதவியிலிருந்து விலகினார். JSW ஸ்டீல், இந்திய எஃகு ஆணையம் (SAIL), இராஷ்டிரிய இஸ்பத் நிகாம் லிட், ஜிண்டால் ஸ்டீல் & பவர் லிட் மற்றும் ஆர்சலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல் லிட் ஆகியவை இந்திய எஃகு சங்கத்தின் பிற உறுப்பினர்களாகும்.

**5. 2023ஆம் ஆண்டுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டு காமன்வெல்த் இளையோர் விளையாட்டுப் போட்டிகள், முன்பு எந்த நாட்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது?**

அ. கம்போடியா **ஆ. டிரினிடாட் & டொபாகோ ☑**

இ. கயானா ஈ. ஜமைக்கா

- 2021 காமன்வெல்த் இளையோர் விளையாட்டுப் போட்டிகள் என்பது இந்தப் போட்டிகளின் ஏழாவது பதிப்பாகும். இது, 2021 ஆக.1–7 வரை கரீபியன் நாடான டிரினிடாட் மற்றும் டொபாகோவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. COVID–19 தொற்று நெருக்கடி காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளும் 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

- 2021ஆம் ஆண்டு காமன்வெல்த் இளையோர் விளையாட்டுப் போட்டிகளும் 2023ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இவ்விரு உலக விளையாட்டுப் போட்டிகளும் இடையில் எந்த விதமான மோதல்களும் ஏற்படாமலிருப்பதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**6. COVID–19 தொற்றுநோய் சிகிச்சையில் ஒரு முக்கியமான படியாகக்கருதப்படும், "மோனோக்ளோனல் நடுநிலைப்படுத்தும் நோயெதிர்ப்புப்பொருளை" வெற்றிகரமாக தனிமைப்படுத்தியுள்ள நாடு எது?**



அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ. சீனா

**இ. இஸ்ரேல் ☑**

ஈ. இத்தாலி

- இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றுப்படி, இஸ்ரேலின் முக்கிய உயிரியல் ஆராய்ச்சி ஆய்வகமான இஸ்ரேல் உயிரியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (IIBR), 'மோனோக்ளோனல் நியூட்ரலைசிங் ஆன்டிபாடி' எனப்படும் ஒரு முக்கிய கொரோனா வைரஸ் நோயெதிர்ப்பியை தனிமைப்படுத்தியுள்ளதாக இஸ்ரேல் அண்மையில் அறிவித்தது. இந்நடவடிக்கை, COVID–19 தொற்றுநோயின் சாத்தியமான சிகிச்சை முறையின் குறிப்பிடத்தக்க படியாகக்கூறப்படுகிறது.

- இந்த நோயெதிர்ப்பியால் நோயாளிகளின் உடலுக்குள் நோயை உருவாக்கும் கொரோனா வைரஸை அழிக்கமுடியும் எனக்கூறப்படுகிறது. மோனோக்ளோனல் நோயெதிர்ப்பி (ஒரு செல்லிலிருந்து பெறப்பட்–டது) தனிமைப்படுத்தப்படுவது இதுவே முதல் நிகழ்வாகும். பிற பகுதிகளில், பலகோண நோயெதிர்ப்பி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

**7. வடகொரிய அதிபர் கிம் ஜாங் உனுக்கு 2ஆம் உலகப்போரின் நினைவுப்பதக்கத்தை வழங்கியுள்ள நாடு எது?**



அ. ஜெர்மனி

**ஆ. இரஷ்யா ☑**

இ. ஜப்பான்

ஈ. தென் கொரியா

- 2ஆம் உலகப்போரில் நாஜி ஜெர்மனியைத் தோற்கடித்த எழுபத்தைந்தாவது ஆண்டு வெற்றியைக் கொண்டாடும் வகையில், வடகொரியாவில், இரஷ்ய படைவீரர்கள் கொல்லப்பட்ட நினைவிடத்தைப் பாதுகாத்து வருவதற்காக வடகொரிய அதிபர் கிம் ஜாங் உனுக்கு இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் 2ஆம் உலகப்போரின் நினைவுப்பதக்கத்தை வழங்கி கௌரவித்துள்ளார்.

**8.உலகெங்கிலும் மே மாதத்தில் வரும் முதல் செவ்வாய்க்கிழமை எந்த நாளாக அனுசரிக்கப்படுகிறது?**

அ. உலக ஜாஸ் நாள்

ஆ. உலக நடன நாள்

**இ. உலக ஆஸ்துமா நாள் ☑**

ஈ. உலக புத்தாக்க நாள்

❖ இளைப்புநோய் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தவும், உலகெங்கிலும் இளைப்புநோயுடன் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் வரும் முதல் செவ்வாய்க்கிழமையில் உலக இளைப்புநோய் நாள் கடைபிடிக்கப்படுகிறது. இளைப்புநோய் என்பது நுரையீரலில் சுவாசப்பிரச்சனையை ஏற்படுத்தும் ஒரு நாட்பட்ட நோயாகும். இந்நோய் பொதுவாக இருமல், மார்பிறுக்கம், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள்மூலம் தோன்றும். "Enough Asthma Deaths" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**9. CKP கூட்டுறவு வங்கியின் உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கி இரத்துசெய்துள்ளது. இந்த வங்கியின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?**

அ. சென்னை ஆ. சண்டிகர்

**இ. மும்பை ☑** ஈ. வாரணாசி

❖ சமீபத்தில், CKP கூட்டுறவு வங்கியின் உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கி இரத்துசெய்தது. மும்பையை தலைமையிடமாகக்கொண்டுள்ள இவ்வங்கி, மும்பை மற்றும் தானே மாவட்டங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது. இவ்வங்கியின் நிதிநிலை பலவீனமடைந்த காரணத்தால், நாட்டின் ரிசர்வ் வங்கியால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த வங்கிக்கான புத்துயிரளிப்புத் திட்டமோ / வேறொரு வங்கியுடன் இணைப்பதற்கான யாதொரு திட்டமோ இல்லை என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

**10.ஆர்டிக் காலநிலை & சுற்றுச்சூழலைக் கண்காணிப்பதற்காக, 'Arktika–M' என்ற தொலையுணர்திறன் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ள நாடு எது?**

அ. சீனா

**ஆ. இரஷ்யா ☑**

இ. ஜெர்மனி

ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்



❖ இரஷ்ய விண்வெளி மையத்தின் அண்மைய அறிவிப்பின்படி, ஆர்டிக் காலநிலை & சுற்றுச்சூழலைக் கண்காணிப்பதற்காக இரஷ்யா தனது முதல் 'Arktika–M' செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த உள்ளது. இந்தச் செயற்கைக்கோளின் முதல் பதிப்பு உருவாக்கப்பட்டு, அது இந்த ஆண்டு ஏவுவதற்கு தயாராகவுள்ளது. அதேவேளையில், இரண்டாவது செயற்கைக்கோள் 2023ஆம் ஆண்டில் ஏவப்படும். தொலையுணர்திறன் செயற்கைக்கோளான, 'Arktika–M' புவியின் துருவப்பகுதி வானிலையைக் கண்காணிக்கும் & துல்லியமான வானிலை முன்னறிவிப்புக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.பிற நாடுகளில் சிக்கித்தவிக்கும் இந்திய குடிமக்களை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்காக இந்திய கடற்படை மேற்கொண்ட நடவடிக்கையின் பெயர் என்ன?**

**அ. சமுத்திர சேது ☑**

ஆ. வெல்கம் பேக்

இ. நேவி சேது

ஈ. சமுத்திர சக்தி

❖ வெளிநாடுகளிலிருந்து இந்திய குடிமக்களை அழைத்துவருவதற்காக தேசிய அளவிலான முயற்சியின் ஓர் அங்கமாக, 'சமுத்திர சேது', அதாவது கடல் பாலம் என்னும் செயல்பாட்டை இந்திய கடற்படை தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக, மாலத்தீவு குடியரசில் உள்ள மாலே துறைமுகத்துக்கு இந்திய கடற் படையின் ஜலஸ்வா, மகர் ஆகிய கப்பல்கள் பயணம் மேற்கொண்டுள்ளன.

❖ இந்தியகடற்படை கப்பல்கள்மூலம் அழைத்துவரப்படும் இந்தியர்களின் பட்டியலை மாலத்தீவில் உள்ள இந்திய தூதரகம் தயாரித்துவருகிறது. கப்பலின் திறன் மற்றும் மருத்துவ வசதிகளின் அடிப்படையிலும், COVID–19 நோய்த்தொற்று கட்டுப்படுத்துவதற்கான சமூக இடைவெளி விதிகளை பின்பற்றியும் இந்த நடவடிக்கை எடுக்கப்படும். அழைத்துவரப்படுபவர்கள், கேரளத்தின் கொச்சியில் தரையிறக்கப்படுவர்.

**2.** GARUD (Government Authorisation for Relief Using Drones) **தளத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. பாதுகாப்பு அமைச்சகம்

ஆ. உள்துறை அமைச்சகம்

**இ. உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம் ☑**

ஈ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

❖ COVID–19 நோய்த்தொற்று தொடர்பான பணிகளுக்காக (தொலையுணர் இயக்க விமான அமைப்பு) / ஆளில்லா கண்காணிப்பு விமானங்களை அரசு நிறுவனங்கள் பயன்படுத்துதற்கு நிபந்தனைகளுடன் அதிவிரைவாக விதிவிலக்கு அளிக்க வலைதளத்தை மத்திய உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து இயக்குநரகம் ஆகியவை தொடங்கியுள்ளன. டிரோன்களை பயன்படுத்துவதற்காக அரசின் அங்கீகாரம் (Government Authorisation for Relief Using Drones) என்பதன் சுருக்கமே GARUD ஆகும்.

❖ எந்தவொரு காரணத்தையும் தெரிவிக்காமல், இந்தப் பொது அறிவிக்கையின் வழிமுறையை மாற்றம் செய்யவோ, திரும்பப்பெறவோ அல்லது நீட்டிக்கவோ இந்திய அரசுக்கு முழு உரிமையுண்டு. இந்தப் பொது அறிவிக்கையின் வழிமுறைகளை மீறினால், நிபந்தனையுடனான விதிவிலக்கு செல்லாததாக மாற்றப்படும்; மேலும் உரிய சட்டத்தின்படி, தண்டனை விதிக்கப்படும்.

**3.நானோ அறிவியல் & தொழில்நுட்பத்தில் அறிவியல் & தொழில்நுட்பத் துறையின் நடப்பாண்டுக்கான (2020) "இளம் அறிவியலாளர் விருது" பெற்றவர் யார்?**



அ. சௌரவ் லோதா ☑


ஆ. தர் யாசின்

இ. முக்தர் கான்

ஈ. சன்னி ஆனந்த்

❖ மும்பை இந்திய தொழினுட்ப கழக கல்வி நிறுவனத்தில் மின் பொறியியல் துறைப்பேராசிரியர் சௌரவ் லோதாவுக்கு நானோ அறிவியல்–தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்காக நடப்பாண்டுக்கான (2020) "இளம் அறிவியலாளர் விருது" கிடைத்துள்ளது. இந்த விருதினை மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை உருவாக்கியுள்ளது. சிலிகான் & நானோ மின்னணு பாகங்களைக்கொண்டு டிரான்சிஸ்டர் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்ததைப் பாராட்டும் வகையில் இவ்விருது வழங்கப்படுகிறது. "வான்டர் வால்ஸ்" என்னும் பொருட்களைக்கொண்டு 2D அடிப்படையில் இக்கருவிகள் உருவாக்கப்படுகின்றன.

**4. COVID–19 நோய்த்தொற்றுக் காலத்தில் மூத்த குடிமக்களின் நலவாழ்வை உறுதிசெய்வதற்காக NITI ஆயோக் தொடங்கிய பரப்புரையின் பெயர் என்ன?**



அ. சுரக்ஷித் தாதா–தாதி & நானா–நானி அபியான் ☑

ஆ. மூத்தோர்களை கவனித்துக் கொள்ளுங்கள்

இ. தாதா மற்றும் தாதி பச்சாவ் அபியான்

ஈ. சுரக்ஷ சம்ரிதி அபியான்

❖ மும்பையைச் சார்ந்த பிரமல் அறக்கட்டளையுடன் இணைந்து NITI ஆயோக், "சுரக்ஷித் தாதா–தாதி & நானா–நானி அபியான்" என்றவொன்றைத் தொடங்கியுள்ளது. COVID–19 நோய்த்தொற்று காலத்தின் போது மூத்தகுடிமக்களின் நலவாழ்வை உறுதிசெய்வதில் இந்தப்பரப்புரை கவனம் செலுத்துகிறது. இது NITI ஆயோக்கால் அறிவிக்கப்பட்ட 25 முன்னேற விரும்பும் மாவட்டங்களில் வாழும் 29 இலட்சம் மூத்த குடிமக்களை உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖ தற்போது இத்திட்டம், 7 மாநிலங்களில் சோதனை அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், முதியோரின் உடல்நலம் மற்றும் வாழ்க்கை முறை குறித்த விழிப்புணர்வை இது உருவாக்கும்.

**5. 'தோமான்' என்பது எந்த நாட்டின் புதிதாக முன்மொழியப்பட்ட நாணயமாகும்?**



அ. வெனிசுலா

**ஆ. ஈரான் ☑**

இ. பொலிவியா

ஈ. மார்ஷல் தீவுகள்

❖ அண்மைய அறிக்கைகளின்படி, ஈரான் நாடாளுமன்றம் அதன் தேசிய நாணயத்தை ரியாலில் இருந்து தோமானுக்கு மாற்றுவதற்கு அனுமதிக்கும் மசோதாவை நிறைவேற்றியுள்ளது. அமெரிக்காவின் கடுமையான பொருளாதாரத் தடைகளின் பின்னணியில், 2017 முதல், ஈரானிய நாணயத்தின் மதிப்பு வெகுவாக சரிந்தது. அது, பெரும் பணவீக்கத்திற்கு வழிவகுத்தது. தற்போது இந்த மசோதாவின்கீழ், ஈரானிய அரசாங்கம் அதன் தற்போதைய நாணயமான ரியாலிலிருந்து 4 சுழியங்களைக் குறைக்கும்.

**6. பிரதம மந்திரி மக்கள் மருந்தகங்கள் (PMBJK), வாட்ஸ்அப்பில், மருந்துகளுக்கான ஆர்டர்களை ஏற்கத் தொடங்கியுள்ளன. எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் PMBJK செயல்படுகிறது?**



அ. குறு, சிறு & நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம்

ஆ. நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்

**இ. வேதியியல் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑**

ஈ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

❖ நாடடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள இந்நிலையில், மத்திய வேதியியல் மற்றும் உர அமைச்சகத்தின்கீழ் உள்ள பிரதம மந்திரியின் மக்கள் மருந்தகங்கள் வாட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றின்மூலம் வரும் மருந்து தேவை தொடர்பான உத்தரவுகளை ஏற்றுக்கொள்கின்றன. மேலும், இணையம்மூலம் பதிவேற்றப்பட்ட மருந்துகளின் அடிப்படையில், மருந்துகள் நோயாளிகளின் வீட்டு வாசலுக்கே சென்று வழங்கப்படுகின்றன. இந்நடவடிக்கை தொழினுட்பத்தைப் பயன்படுத்தி நோயாளிகள் மருந்துகளை எளிதில் கொள்முதல் செய்வதற்கு உதவுகிறது.

❖ பிரதமரின் மக்கள் மருந்தகங்களானது இந்திய மருத்துவத் துறையின்கீழ் செயல்படுகின்றன. தற்போது, நாட்டின் 726 மாவட்டங்களில் 6300 மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை, தரமான மருந்துகளை மலிவு விலையில் வழங்குவதை உறுதிசெய்கின்றன. இந்த மருந்துகள், சராசரியாக 50% – 90% வரை மலிவானவை.

**7.உச்சநீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பின்படி, SARFAESI சட்டத்தின்கீழ், எந்த வகை வங்கிகளையும் கொண்டுவரவியலும்?**

அ. மண்டல கிராமப்புற வங்கிகள்

**ஆ. கூட்டுறவு வங்கிகள் ☑**

இ. சிறு நிதி வங்கிகள்

ஈ. உள்ளூரக வங்கிகள்

The Cooperative Bank

❖ கடன் வாங்கியவர்கள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறும்போது, Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (SARFAESI) சட்டம், 2002 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை சொத்துக்களை ஏலம்விட அனுமதிக்கின்றது. உச்சநீதிமன்றம் வழங்கிய அண்மைய தீர்ப்பின்படி, வங்கியியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் கூட்டுறவு வங்கிகள், "வங்கி நிறுவனம்" எனக்கருதப்படும். எனவே, கூட்டுறவு வங்கிகளால் மேற்கொள்ளப்படும் கடன் வசூலிப்பு நடைமுறையைச் சேர்ப்பதற்காக SARFAESI சட்டம் மாற்றியமைக்கப்படவுள்ளது.

**8. 'Long March 5B' ஏவுகணை என்பது எந்த நாட்டின் முதன்மை ஏவுகணையாகும்?**



அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**ஆ. சீனா ☑**

இ. இரஷ்யா

ஈ. இஸ்ரேல்

❖ 'Long March 5B' என்பது சீனாவின் முதன்மை ஏவுகலமாகும். மேலும் இது, கடந்த 2016ஆம் ஆண்டில் முதன்முறையாக ஏவப்பட்ட வழக்கமான Long March 5 ஏவுகலத்தின் பிறிதொரு வகையாகும். இந்த ஏவுகலம், ஹைனான் தீவிலிருந்து ஒரு முன்மாதிரி குழுவைக்கொண்ட விண்கலத்தை ஏவியது. இப் புதிய தலைமுறை விண்கலம், ஏவப்பட்ட 488 வினாடிகளுக்குப் பிறகு அதன் தீர்மானிக்கப்பட்ட சுற்றுப் பாதையில் நுழைந்தது. இந்த வெற்றியானது, செவ்வாய் கோளுக்கு ஒரு சுற்றுகலனையும் ஓர் ஆய்வு ஊர்தியையும் அனுப்ப சீனாவுக்கு வழிவகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**9.ஆந்திர பிரதேச மாநில அரசின் YSR மத்ஸ்யகர பரோசா திட்டத்தின் பயனாளிகள் யார்?**



**அ. மீனவர் குடும்பங்கள் ☑**

ஆ. மீனவர்களின் பள்ளிசெல்லும் குழந்தைகள்

இ. மீனவர் குடும்பங்களில் உள்ள பெண்கள்

ஈ. தனித்து வாழும் மீனவர்கள்

❖ COVID–19 கொள்ளைநோய்க்கு மத்தியில் ஆந்திர பிரதேச மாநில அரசு YSR மத்ஸ்யகர பரோசா என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மீனவர் குடும்பத்திற்கும் அம்மாநில அரசாங்கம் ₹10,000 நிதியுதவியை வழங்கும். பொது முடக்க காலத்திலும், மீன்பிடித்தடைக்காலத்திலும் மீனவ சமூகத்திற்கு இது உதவும். கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கான நிதிநிவாரணமும் தலைக்கு, ரூபாய் நான்காயிரத்திலிருந்து ரூபாய் பத்தாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**10.நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**அ. ஆதிர் ரஞ்சன் சௌத்ரி ☑**

ஆ. மல்லிகார்ஜுன் கார்கே

இ. அனுராக் தாக்கூர்

ஈ. ரமேஷ் போக்ரியால் நிஷாங்க்

❖ காங்கிரசைச்சார்ந்த ஆதிர் ரஞ்சன் சௌத்ரி தற்போதுள்ள 30 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1921ஆம் ஆண்டில் மாண்டேகு–செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களின் விளைவாக இக்குழு முதன்முதலில் உருவாக்கப்பட்டது. 1950'க்குப் பிறகு, இந்தக் குழு ஒரு நாடாளுமன்றக்குழுவாக மாறியது. இது, மக்களவைத் தலைவரின் கட்டுப்பாட்டில் ஓர் அதிகாரப்பூர்வமற்ற தலைவரோடு செயல்பட்டது. கடந்த 1967ஆம் ஆண்டு முதல், இந்தக் குழுவுக்கானத் தலைவர் எதிர்க்கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. 11 உற்பத்தியாளர்களின் பான் மசாலாவை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும், சேமித்து வைப்பதற்கும் ஜார்க்கண்ட் ஓராண்டு காலத்திற்கு தடை விதித்துள்ளது. அவற்றில் உள்ள எந்தத் தீங்கு விளைவிக்கும் வேதிப்பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?**

அ. மெக்னீசியம் கார்பனேட் ☑

ஆ. மெக்னீசியம் குளோரைடு

இ. மெக்னீசியம் ஆக்சைடு

ஈ. சோடியம் கார்பனேட்



❖ ஜார்க்கண்ட் மாநில அரசானது அண்மையில் 11 உற்பத்தியாளர்களின் பான் மசாலாவை உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் ஓராண்டுக்கு தடை விதித்துள்ளது. பான் மசாலாவில் உள்ள மெக்னீசியம் கார்பனேட் என்ற தீங்குவிளைவிக்கும் வேதியின் நுகர்வைக் கட்டுப்படுத்துவதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேதி, புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது மற்றும் இதயத்திற்கு தீங்குவிளைவிக்கும் தன்மைகொண்டதாகும். மேலும், உணவுப்பாதுகாப்புச்சட்டம், 2006 விதிமுறைக –ளின்படி பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்ட வேதியாகும் இது. முன்னதாக, மகாராஷ்டிரா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களும் பான் மசாலாவுக்கு தடைவிதித்திருந்தன.


**2. 2020–21ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சுழியமாக இருக்கும் எனக் கணித்துள்ள பன்னாட்டு மதிப்பீட்டு நிறுவனம் எது?**

அ. S&P

ஆ. Moody's Investor Services ☑

இ. CRISIL

ஈ. Fitch Ratings



❖ இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் சுழிய நிலையை எட்டுமெனப் பன்னாட்டு தரக்குறியீட்டு நிறுவனமான மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சர்வீஸ் தனது மதிப்பீட்டில் தெரிவித்துள்ளது. கடந்த மாதம், 0.2 சதவீதமாக வளர்ச்சி இருக்கும் என இந்நிறுவனம் கணித்திருந்தது. இருப்பினும், வரும் 2021–22ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக ஏற்றம் காணும் என மூடிஸ் தெரிவித்துள்ளது. மிதமான கடன் அபாயத்தைக்குறிக்கும் 'Baa2' என்ற தரமதிப்பீட்டையும் அந்நிறுவனம் இந்தியாவுக்கு வழங்கியிருந்தது.

**3. இந்தியா இன்டர்நேஷனல் எக்ஸ்சேஞ்ச் லிட் (இந்தியா INX) என்பது எந்த இந்திய பங்குச்சந்தையின் துணை நிறுவனமாகும்?**

அ. National Stock Exchange of India (NSE)

ஆ. Bombay Stock Exchange (BSE) ☑

இ. Calcutta Stock Exchange

ஈ. United Stock Exchange of India

❖ மும்பை பங்குச்சந்தையின் இந்தியா INX மற்றும் தேசிய பங்குச்சந்தையின் NSE–IFSC ஆகிய இரு பன்னாட்டுச் சந்தைகளில், இந்திய ரூபாய்–அமெரிக்க டாலர் முன்பேர மற்றும் தேவையானதைத் தெரிவுசெய்யும் ஒப்பந்தங்களை (INR–USD Futures and Options contracts), காந்திநகரில் உள்ள குஜராத் பன்னாட்டு நிதித்தொழில்நுட்ப நகரத்தின் சர்வதேச நிதிச்சேவைகள் மையத்தில் (GIFT–IFSC) மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் காணொளிக் காட்சிமூலம் தொடங்கிவைத்தார். பன்னாட்டு நிதிச் சேவைகள் மையத்தின்மூலம் உலகளாவிய பங்களிப்பை இந்தியாவுக்கு இது பெற்றுத்தருவதோடு, இந்தியாவின் பன்னாட்டு நிதிச்சேவைகள் மையத்தை உலகத்தோடும் இணைக்கும்.

**4.வான்படை தளங்களின் உட்கட்டமைப்பு நவீனமயமாக்கலுக்காக இந்தியாவின் எந்த எரிசக்தி நிறுவனத்துடன் மத்திய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது?**

அ. பவர் கிரிட் கார்ப்பரேஷன்

**ஆ. டாடா பவர் ☑**

இ. JSW எனர்ஜி

ஈ. அதானி பவர்

TATA
TATA POWER

❖ இந்திய வான்படை, இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல் படைக்கான 37 விமான தளங்களின் கட்டமைப்பை நவீனமயமாக்க டாடா பவர் நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. சுமார் ₹1,200 கோடி மதிப்பிலானது இந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் பரிந்துரைக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்தார்.

❖ இந்திய வான்படையின் 30 விமானதளங்களை நவீனமயமாக்குவது உள்ளிட்ட விமானதள கட்டமைப்–புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்டத்தை அடிப்படையாகக்கொண்டு, இரண்டாவது கட்டம் செய–ல்படுத்தப்படுகிறது. முதற்கட்டத்தின்கீழ் விமானதளங்கள் நவீனப்படுத்தப்பட்டதன்மூலம், இராணுவம் மற்றும் பொது பயன்பாட்டாளர்கள் அதகளவில் பயனடைந்து வருகின்றனர்.

**5. நாடு முழுவதும் பயன்படுத்தப்படும் பெரும்பான்மையான சணல் பைகளை தயாரித்து வழங்குகிற இந்திய மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம்

**ஆ. மேற்கு வங்கம் ☑**

இ. ஒடிசா

ஈ. பீகார்



❖ நாடு முழுவதும் பயன்படுத்தப்படும் (முக்கியமாக உணவு–தானியங்களை சிப்பம் செய்வதற்கு) சணல் பைகளில் சுமார் 95 சதவீதத்தை மேற்கு வங்க மாநிலம் உற்பத்தி செய்கிறது. பொது முடக்கத்தின் காரணமாக சணற்பைகள் உற்பத்தியை அம்மாநிலம் நிறுத்தியுள்ளதால், இந்திய உணவுக்கழகம் சணற்பைகள் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.

❖ தற்போதைய இந்தக் கொள்முதல் பருவத்தில், ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட கோணிப்பைகள் மற்றும் நெகிழிப்பைகளில் உணவுதானியங்களை சிப்பம் செய்ய அரசு அனுமதித்துள்ளதாக மத்திய உணவு

அமைச்சர் இராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார். மேலும், சணற்பைகள் பற்றாக்குறையை மதிப்பிடுவதற்காக அமைச்சகத்தால் பணிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

**6.பன்னாட்டு இடம்பெயர்வு அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. ரோம்

ஆ. ஜெனீவா

**இ. கிராண்ட்-சாகோனெக்ஸ் ☑**

ஈ. நியூயார்க்

IOM UN MIGRATION

❖ பன்னாட்டு இடம்பெயர்வு அமைப்பு (IOM) என்பது அரசாங்கங்களுக்கும் புலம்பெயர்ந்தோருக்கும் இடம்பெயர்வது தொடர்பான சேவை மற்றும் ஆலோசனைகளை வழங்கும் அரசுகளுக்கிடையேயான ஓர் அமைப்பு ஆகும். இதன் தலைமையகம் சுவிச்சர்லாந்தின் கிராண்ட்–சாகோனெக்ஸில் உள்ளது.

❖ சமீபத்தில், ஐ.நா., இடம்பெயர்வு முகமையின் தலைமை இயக்குநர் அன்டோனியோ விட்டோரினோ வெளியிட்ட அறிவிப்பொன்றில், உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் சிக்கித் தவித்து வருகின்றனர். மேலும் அவர்கள், COVID–19 அபாயத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர். அனைத்து புலம்பெயர்ந்தோருக்கும் சுகாதார பராமரிப்பு கிடைக்கச் செய்யவேண்டும் என இம்முகமை அரசாங்கங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

**7. "இரண்டாம் உலகப்போரின்போது உயிரிழந்தவர்களுக்கான நினைவு மற்றும் நல்லிணக்கத்தை" ஒவ்வோர் ஆண்டும் ஐநா அவை எப்போது அனுசரிக்கிறது?**

அ. 1–2 மே

ஆ. 4–5 மே

**இ. 8–9 மே ☑**

ஈ. 11–12 மே




❖ ஒவ்வோர் ஆண்டும் மே 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில், ஐ.நா அவை இரண்டாம் உலகப்போரின்போது உயிரிழந்த மில்லியன் கணக்கானவர்களை நினைவுகூர்கிறது. இரண்டாம் உலகப்போர், ஐநா அவை உருவாக வழிவகுத்தது. உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் இந்நாட்கள், "இரண்டாம் உலகப்போரின்போது தன்னுயிரை ஈந்தவர்களுக்கான நினைவு மற்றும் நல்லிணக்க நேரம்" என்று அழைக்கப்படுகிறது. இது, கடந்த 2004'இல் ஒரு தீர்மானத்தின்மூலம் உருவாக்கப்பட்டது.

**8. பன்னாட்டு செஞ்சிலுவை சங்கத்தை நிறுவியதற்காக, அமைதிக்கான முதல் நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?**

**அ. ஹென்றி டுனன்ட் ☑**

ஆ. சல்லி புருதோம்

இ. வில்ஹெம் ராஞ்சென்

ஈ. ஜேக்கபஸ் வான் 'டி ஹாப்



❖ பன்னாட்டு செஞ்சிலுவை சங்கத்தை நிறுவியதோடு ஜெனீவா தீர்மானத்தை தொடங்கிவைத்ததற்காக சுவிச்சர்லாந்தின் ஹென்றி டுனன்டிற்கு அமைதிக்கான முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. உலக செஞ்சிலுவை சங்கம் அல்லது உலக செஞ்சிலுவை சங்கம் & செம்பிறை நாள் ஒவ்வோர் ஆண்டும் மே 8 அன்று கொண்டாடப்படுகிறது. இது, ஹென்றி டுனன்டின் பிறந்தநாளைக்குறிக்கிறது. அவர் நிறுவிய பன்னாட்டு செஞ்சிலுவை சங்கமானது உலக மக்களின் நலனுக்காக செயல்பட்டு வருகிறது.

**9. SARS–CoV–2 வைரஸை நடுநிலையாக்கக்கூடிய, "மனித மோனோக்ளோனல் நோயெதிர்ப்பிகள்" உருவாக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள அரசுக்குச் சொந்தமான நிறுவனம் எது?**

அ. அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம், CSIR ☑


ஆ. தேசிய S N போஸ் அடிப்படை அறிவியல் மையம்

இ. அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம்

ஈ. நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்

❖ அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகமானது தனது புதிய மில்லினியம் இந்திய தொழில்நுட்ப தலைமைத்துவ முன்னெடுப்புத் திட்டத்தின்மூலம் மனித மோனோக்ளோனல் நோயெதிர்ப்பிகளை உருவாக்குவதற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நோயெதிர்ப்பிகள், திறன்பெற்ற SARS–CoV–2 வைரசை நடுநிலையாக்கலாம் மற்றும் எதிர்கால SARS–CoV நோய்த்தொற்றுகளுக்கு எதிராகப்பயன்படுத்தப்படலாம். இந்நோயெதிர்ப்பிகளை உருவாக்கவுள்ள குழுவானது கல்வி நிறுவன –ங்களையும் தொழிற்துறைகளையும் கொண்டுள்ளது.

**10. 2020 மே.9 அன்று கடைப்பிடிக்கப்படும் உலக புலம்பெயர்ந்த பறவைகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**




அ. Love the Birds

ஆ. Birds connect our world ☑

இ. Birds transcend the Globe

ஈ. Birds are precious

❖ உலக புலம்பெயர்வு பறவைகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.9 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. "பறவைகள் நம் உலகத்தை இணைக்கின்றன" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்பில் புலம்பெயர்ந்த பறவைகளின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப்படுகிறது. முதன்முதலில் 2006ஆம் ஆண்டில் இந்த நாள் கொண்டாடப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. CSIR'இன் மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனமானது தனது FELUDA பரிசோதனைக் கருவியை வணிகமயமாக்குவதற்காக எந்த இந்திய நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது?**




அ. டெக் மஹிந்திரா

ஆ. லார்சன் & டூப்ரோ

**இ. டாடா சன்ஸ் ☑**

ஈ. விப்ரோ

❖ COVID–19 தொற்றினை உடனே கண்டறியும் கருவிக்கான தொழில்நுட்பத்தைக் கண்டறிவதற்காக நடுவணரசின் அறிவியல் தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகத்தின் (CSIR) ஆய்வகமான மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனமும் டாடா சன்ஸ் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின்கீழ், FELUDA எனப்படும் கருவித் தொழில்நுட்பத்தை டாடா நிறுவனத்துடன் பகிர்ந்துகொள்ள உரிமம் வழங்கப்படும்.

❖ COVID–19 தொற்றை ஒழிப்பதற்கான இந்தத் தொழில்நுட்பமும் முழுக்க முழுக்க இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்பாகும். பெருமளவில் பயன்படுத்தக் கூடியது. இது எளிதில் கையாளக்கூடியது. விலை மலிவானது.

**2.உலக நலவாழ்வு அமைப்பும் ஐ.நா அஞ்சல் முகமையும் எந்நோயை ஒழித்த ஆண்டு நினைவுநாளன்று ஒரு நினைவு அஞ்சல்தலையை வெளியிட்டன?**




அ. மலேரியா

ஆ. காலரா

**இ. பெரியம்மை ☑**

ஈ. தட்டம்மை

❖ உலக நாடுகளை அச்சுறுத்திவந்த பெரியம்மை, கடந்த 1980ஆம் ஆண்டு முற்றிலும் ஒழிக்கப்பட்டது. 40 ஆண்டுகள் ஆனதை நினைவுகூரும் வகையில், உலக நலவாழ்வு அமைப்பும், ஐக்கிய நாடுகளின் அஞ்சல் முகமையும் இணைந்து, அதற்காக நினைவு அஞ்சல்தலையை வெளியிட்டுள்ளன. இந்நோயை ஒழிப்பதற்கான உலகளாவிய முயற்சியை விரைவுபடுத்துவதற்காக, WHO'இன் பெரியம்மை ஒழிப்புத் திட்டம், கடந்த 1967ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த நினைவு அஞ்சல்தலை உலகத்தலைவர்கள், அமைப்புகள், கிராமப்புற மருத்துவப் பணியாளர்களின் பாத்திரங்களை நினைவுகூர்கிறது.

**3.இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) மத்திய வாரியத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்டவரும், அண்மையில் பொருளாதார விவகார செயலாளராகவும் பொறுப்பேற்றவர் யார்?**



**அ. தருண் பஜாஜ் ☑** ஆ. பிரீத்தி சுதன்

இ. அரவிந்த்குமார் சர்மா ஈ. ராஜேஷ் பூஷண்

- பொருளாதார விவகார செயலாளர் தருண் பஜாஜை இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) மத்திய வாரிய இயக்குநர்களுள் ஒருவராக மத்திய அரசு நியமித்துள்ளது. ஏப்ரல்.30 அன்று ஓய்வுபெற்ற அதானு சக்ரவர்த்திக்கு பதிலாக தருண் நியமிக்கப்பட்டுள்ளார். தருண் பஜாஜின் நியமனம் 2020 மே.5 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

- 1988ஆம் ஆண்டு ஹரியானா கேடர் இ.ஆ.ப அதிகாரியான பஜாஜ் கடந்த மே.1 அன்றுதான் பொருளாதார விவகாரத்துறை செயலாளராக பொறுப்பேற்றார். இவர் ஏற்கனவே பிரதமர் அலுவலகத்தில் கூடுதல் செயலாளராகவும், நிதித் துறையில் இணைச்செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்

**4.அண்மையில், சாலை மற்றும் உட்கட்டமைப்பு வரி மற்றும் சிறப்பு கூடுதல் கலால் வரி ஆகியவை நடுவணரசால் உயர்த்தப்பட்டன. இவையிரண்டில் எதுவொன்று அதிகாரப்பகிர்வின்மூலம் மாநிலத்துக்கு பிரித்தளிக்கப்படும்?**



அ. சாலை மற்றும் உட்கட்டமைப்பு வரி


**ஆ. சிறப்பு கூடுதல் கலால் வரி ☑**

இ. இவையிரண்டும்

ஈ. யாதொன்றுமில்லை

- ஓர் அண்மைய நடவடிக்கையாக, மத்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரிகளை முறையே லிட்டருக்கு ₹10 மற்றும் ₹13 ஆக உயர்த்தியுள்ளது. இந்த வரி உயர்வு, எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களால் உள்வாங்கப்படும் என்பதால் சில்லறை விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், சாலை மற்றும் உட்கட்டமைப்பு வரியை மத்திய அரசும் சிறப்பு கூடுதல் கலால் வரியை அனைத்து மாநிலங்களுக்கும் அதிகாரப்பகிர்வின்மூலம் 42% என்ற அளவுக்கு வழங்கப்படும். உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்ததோடு, பொது முடக்க காலத்தில் எண்ணெயின் தேவை குறைந்ததன் பின்னணியில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**5. மே.5 அன்று பிறந்தநாள் காணும் எந்த இந்தியக் கவிஞரால் வங்கதேசத்தின் தேசிய கீதமான, 'அமர் சோனா பங்களா' இயற்றப்பட்டது?**



அ. பக்கிம் சந்திர சட்டர்ஜி

**ஆ. இரவீந்திரநாத் தாகூர் ☑**

இ. அரவிந்த கோஷ்

ஈ. முன்ஷி பிரேம்சந்த்

- 1905ஆம் ஆண்டில் கர்சன் பிரபுவால் அறிவிக்கப்பட்ட முதல் வங்கப் பிரிவினையின்போது 'குருதேவ்' என்றும் அழைக்கப்படும் இரவீந்திரநாத் தாகூர், "அமர் சோனா பங்களா" பாடலை இயற்றினார். இந்தப் பாடல், பின்னர், தற்போதைய வங்கதேச விடுதலை இயக்கத்தின் எழுச்சிக்கு வழிவகுத்ததோடு அந்த நாட்டின் தேசீய கீதமுமாகவும் ஆனது. இந்தியாவின், "ஜன கண மன" உட்பட இரண்டு நாடுகளுக்கு தேசிய கீதங்களை இயற்றிய ஒரே நபராக தாகூர் உள்ளார். அவரது 159ஆவது பிறந்தநாள் மே.5 அன்று அனுசரிக்கப்பட்டது. தாகூரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், தேசிய நவீன கலைக்கூடம், ஒரு மெய்நிகர் சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்தது.

**6.இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகத்தின் (IAMAI) அண்மைய அறிக்கையின்படி, நாட்டின் எந்தப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான இணைய பயனர்கள் உள்ளனர்?**



அ. பெருநகரம்

ஆ. நகரம்

இ. புறநகர்

**ஈ. கிராமப்புறம் ☑**

- அண்மையில் இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகம் வெளியிட்ட, 'Digital In India' என்ற அறிக்கையின்படி, நகர்ப்புறங்களில் உள்ள பயனர்களுடன் ஒப்பிடுகையில் கிராமப்புறங்களில் அதிக அளவிலான இணைய பயனர்கள் உள்ளனர். கடந்த நவம்பர் மாதத்தில், மொத்தமுள்ள 504 மில்லியன் இணைய பயனர்களில், கிராமப்புறங்களில் மட்டும் 227 மில்லியன் இணைய பயனர்கள் இருந்தனர். நகர்ப்புறங்களில் இந்த எண்ணிக்கை 205 மில்லியனாக உள்ளது.
- ஆனால், இணையத்தில் செலவிடும் நேரத்தைப் பொறுத்தவரை நகர்ப்புற மக்கள் முதலிடத்தில் உள்ளனர். பெண் இணைய பயனர்களில் 21% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அது ஆண் பயனர்களைவிட (9%) அதிகமாக உள்ளது என்றும் இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

**7.எந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இராணுவப்பொறியியல் சேவையில் 9304 பதவிகளை அகற்ற பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது?**



**அ. Lt.Gen ஷெகத்கர் ☑**

ஆ. Lt.Gen மாதுரி கனித்கர்

இ. Lt.Gen P C திம்மயா

ஈ. Lt.Gen C P பொன்னப்பா

- இராணுவப்பொறியியல் சேவைப்பணியில் அடிப்படை மற்றும் தொழிலியல் பணியாளர்களுக்கான 9,304 பணியிடங்களை அகற்றுவதற்கான முதன்மைத் தலைமைப்பொறியாளரின் இராணுவ பொறியி–யல் சேவைப்பணிகள் திட்டத்துக்கு மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.
- Lt.Gen ஷெகத்கர் தலைமையிலான நிபுணர் குழுவினர், ஆயுதப்படையின் இராணுவப்பொறியியல் சேவைப்பணிகளில் போர்த்திறனை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு செலவினத்தை மறுசமன் செய்வதற்கான நடவடிக்கைகள் சார்ந்து செய்த பரிந்துரைகளை ஏற்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வருங்காலத்தில் சிக்கலான பணிகளை, திறம்படவும், சிக்கனமாகவும் கையாள, குறைந்த பணியாளர்களுடன் இராணுவப்பொறியியல் சேவைப்பணியை திறன்மிகுந்த அமைப்பாக மாற்றியமைப்பது இந்தப் பரிந்துரைகளின் நோக்கமாகும்.

**8.அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 58'இலிருந்து 59'ஆக உயர்த்தியுள்ள மாநில அரசு எது?**



**அ. தமிழ்நாடு ☑** ஆ. கேரளம்

இ. கருநாடகம் ஈ. பஞ்சாப்

❖ தமிழ்நாடு அரசு அண்மையில் மாநில அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 58'இலிருந்து 59'ஆக உயர்த்தியது. வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இந்த அரசாங்க உத்தரவு உடனடியாக அமலுக்கு வரும். இந்த உத்தரவு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும், மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பொருந்தும்.

**9. CARD திட்டம் என்பது கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?**

அ. தற்காலிக PDS அட்டை

**ஆ. COVID-19 பரிசோதனைக் கருவி ☑**

இ. தற்காலிக ஆதார் அட்டை

ஈ. மருத்துவர்களுக்கான முகக்கவசங்கள்



❖ NITI ஆயோக் மற்றும் உயிரித்தொழில்நுட்ப துறை ஆகியவை இணைந்து Consortium for Affordable & Rapid Diagnostics (CARD) என்றவொரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. கொரோனா வைரஸ் பரிசோதனைக் கருவிகளை உருவாக்குவதில் இந்தியாவின் திறனை அதிகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக்கொண்டுள்ளது. COVID-19 நோய்த்தொற்றுக்கு வரும் ஜூலை மாதத்திற்குள் குறைந்தது 10 மில்லியன் விரைவு நோயெதிர்ப்பு சோதனைகளை தயாரிப்பதே இதன் முதன்மை குறிக்கோளாகும்.

❖ இந்தியாவில் RT-PCR சோதனைக்கருவிகளை விரிவுபடுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள் -ளது. சீன நோயெதிர்ப்பு சோதனைகளைக் கருவிகளால் அடைந்த பெருஞ்சிக்கல்களுக்குப்பிறகு இந்த அறிவிப்பு வந்துள்ளது.

**10.ஆயுர்வேத தலையீடுகள் குறித்த மருத்துவ ஆராய்ச்சியைத் தொடங்குவதன் ஒருபகுதியாக, ஆயுஷ் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. ஆயுஷ் ரக்ஷா

**ஆ. ஆயுஷ் சஞ்சீவனி ☑**

இ. ஆயுஷ் சுரக்ஷா

ஈ. ஆயுஷ் சக்தி




❖ COVID-19 நிலைகள் தொடர்பான ஆயுஷை அடிப்படையாகக்கொண்ட 2 ஆய்வுகளையும், 'சஞ்சீவனி' செயலியையும் புது தில்லியில் மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சரும், கோவாவிலிருந்து காணொளிவழியில் பங்கேற்ற ஆயுஷ் இணையமைச்சரும் தொடங்கிவைத்தனர்.

❖ மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சகம், ஆயுஷ் அமைச்சகம் மற்றும் மத்திய அறிவியல், தொழிலக ஆராய்ச்சி மையம் (CSIR), இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழுமம் (ICMR) போன்ற தொழினுட்ப அமைப்புகள் & பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (UGC) ஆகியவை ஒருங்கிணைந்து இச்செயலியை உருவாக்கியுள்ளன. ஆயுஷ் அறிவுரைகளையும், நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளுதல், பயன்படுத் -துதல் மற்றும் பின்பற்றுபவர்கள் பற்றிய விவரங்களை அறியவும், COVID-19 பாதிப்பைத் தடுப்பதில் இவை எந்த அளவிற்கு செயல்படுகின்றன என்பதை அறியவும் 'சஞ்சீவனி' என்ற செயலி உதவும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.தொழிலாளர்களின் பணிநேரத்தை அதிகரிப்பதற்காக எந்தச் சட்டத்தின் விதிகள் மாநிலங்களால் தளர்த்தப்படுகின்றன?**



அ. நிறுவனங்கள் சட்டம்

**ஆ. தொழிற்சாலைகள் சட்டம் ☑**

இ. தொற்றுநோய்கள் சட்டம்

ஈ. தொழிற்சங்க சட்டம்

❖ பொதுமுடக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட தொழிலாளர்கள் பற்றாக்குறையை அடுத்து உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, கோவா உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் தொழிற்சாலைகள் சட்டம், 1948'இன் விதிகளை தளர்த்தியுள்ளன.

❖ இதன்மூலம், தொழிலாளர்களின் பணிநேரம் அதிகரிக்கப்படும். சமீபத்தில், ஒடிசா மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களின் தொழிலாளர் துறைகள், ஜூன் 30 வரை, பணியாளர்களின் பணிநேரம் தொடர்பான தொழிற்சாலைகள் சட்டம், 1948'இன் நான்கு பிரிவுகளிலிருந்து தங்கள் தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளித்தன. ஓர் அவசர சட்டத்தை இயற்றியதன்மூலம் தொழிலாளர் சட்டங்களின் முக்கிய விதிகளை உத்தரபிரதேச மாநிலம் மூன்றாண்டுகாலத்திற்கு நிறுத்தியுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட விலக்குகளுடன், முதலாளிகள், தலா 12 மணிநேர பணி சுழற்சி முறையில் தொழிலாளர்களை பணியமர்த்த முடியும்.

**2.இந்தியா தொடங்கிய, 'மிஷன் சாகர்' முயற்சி எத்தனை நாடுகளை உள்ளடக்கியுள்ளது?**



அ. 2

ஆ. 3

இ. 4

**ஈ. 5 ☑**

❖ COVID–19 தொற்றுகாலத்தில் மற்றவர்களுக்கு உதவிசெய்கின்ற இந்திய அரசின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்தியக் கடற்படைக்கு சொந்தமான கேசரி என்ற கப்பல், மாலத்தீவு, மொரிசியஸ், செசல்ஸ், மடகாஸ்கர், கொமொரோஸ் ஆகிய நாடுகளுக்கு உணவுப்பொருள்கள், HCQ மாத்திரைகள் உட்பட, COVID–19 தொடர்பான மருந்துகள், சிறப்பு ஆயுர்வேத மருந்துகள் & மருத்துவ உதவிக் குழுக்களுடன் புறப்பட்டுச் சென்றுள்ளது. நமது மண்டலத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற பிரதமரின் தொலைநோக்குத் திட்டத்திற்கு ஏற்ப (Security and Growth for All in the Region 'SAGAR' ) இந்த, 'மிஷன் சாகர்' உள்ளது.

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'COVID கவச் எலிசா' என்றால் என்ன?**



அ. தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆ. முகக்கவசம்

**இ. பரிசோதனைக் கருவி ☑** ஈ. கிருமிநாசினி

❖ COVID–19 தொற்று குறித்த நோயெதிர்ப்பிகளை கண்டறிவதற்காக, "COVID கவச் எலிசா" என்ற ஐஜிஜி எலிசா பரிசோதனை கருவியை உள்நாட்டிலேயே புனேவில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் தேசிய வைரஸ் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக, இது, கொரோனா (COVID) வைரசைக் கண்டறிவதற்கான SARS–CoV–2 human IgG ELISA (enzyme–linked immunosorbent assay) பரிசோதனைக்கருவியாகும். மத்திய சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, இந்தப் பரிசோதனைக்கருவியால் 2.5 மணிநேரத்தில் 90 மாதிரிகள் வரை சோதிக்க முடியும்.

**4.பாதுகாப்பு ஆராய்ச்சி புற ஊதா சானிடிசரை (DRUVS) உருவாக்கியுள்ள அமைப்பு எது?**



அ. DRDO ☑

ஆ. BHEL

இ. HAL

ஈ. BEL

❖ ஹைதராபாத்தைச் சார்ந்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஆய்வகமான இமரத் ஆராய்ச்சி மையம், தானியங்கி சுத்திகரிப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது. இது, பாதுகாப்பு ஆராய்ச்சி புற ஊதா சானிடைசர் (DRUVS) என அழைக்கப்படுகிறது. பணத்தாள்கள், மின்னணுப் பொருட்கள் மற்றும் தாட்களைச் சுத்தப்படுத்துவதற்காக UV–C வகையிலான ஒளியை இந்தச் சானிடிசர் பயன்படுத்துகிறது. தொடர்பற்ற செயல்பாடு இந்தச் சானிடிசரின் குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது. அது, தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்த உதவும்.

**5. காவல்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணியகமானது (BPRD) எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் ஓரமைப்பாகும்?**

Bureau of Police Research and Development
Ministry of Home Affairs
पुलिस अनुसंधान एवं विकास ब्यूरो, गृह मंत्रालय

அ. பாதுகாப்பு அமைச்சகம்


**ஆ. உள்துறை அமைச்சகம் ☑**

இ. சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

ஈ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

❖ காவல்துறையை நவீனமயமாக்குதல் என்னும் நோக்கத்துடன் ஒரு மதியுரையகமாக, கடந்த 1970ஆம் ஆண்டில், காவல்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப்பணியகம் (BPRD) உள்துறை அமைச்சகத்தின்கீழ் நிறுவப்பட்டது. பொதுமக்களிடையே இனவெறுப்பை பரப்புவதை நோக்கமாகக்கொண்ட போலிச் செய்திகளை அடையாளங்காண்பதற்கு புலனாய்வாளர்களுக்கும் காவல்துறைசார் அதிகாரிகளுக்கும் உதவுவதற்காக, அண்மையில், "Fake News and Disinformation: How to Spot and Investigate" என்ற தலைப்பில் 40 பக்க கையேட்டை BPRD வெளியிட்டது.

**6.அண்மையில் காலமான ஹரிசங்கர் வாசுதேவனுடன் தொடர்புடைய தொழில் எது?**



அ. விளையாட்டு வீரர்

**ஆ. வரலாற்றாசிரியர் ☑**

இ. சுகாதார பணியாளர்

ஈ. அரசியல்வாதி

❖ மூத்த இந்திய அறிஞரும் வரலாற்றாசிரியருமான ஹரிசங்கர் வாசுதேவன் COVID–19 (கொரோனா) நோய்த்தொற்றின் காரணமாக அண்மையில் காலமானார். பேராசிரியர் ஹரி வாசுதேவன் அவரது பணி ஓய்வுக்குப்பின், UGC ஓய்வுபெற்ற பேராசிரியராக வரலாற்றுத்துறை கல்கத்தா பல்கலையின் சீன மையத்தில் பணிபுரிந்தார். இரஷ்ய மற்றும் மத்திய ஆசிய வரலாற்றில் அவர் ஒரு முக்கியமானவராக கருதப்படுகிறார். இந்திய கலாசார அமைச்சகத்தின்கீழ் உள்ள மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆசிய ஆய்வுக்கழகத்தின் இயக்குநராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

**7. ஐ.நா உலக சுற்றுலா அமைப்பின் (UNWTO) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. பாரிஸ்

**ஆ. மாட்ரிட் ☑**

இ. நியூயார்க்

ஈ. ஜெனீவா

❖ உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) என்பது ஐக்கிய நாடுகளின் முகமையாகும். இது, நீடித்த மற்றும் உலகளவில் அணுகக்கூடிய சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு பொறுப்பாகும். இதன் தலைமையகம் ஸ்பெயினின் மாட்ரிட்டில் அமைந்துள்ளது. அண்மைய UNWTO உலக சுற்றுலா காற்றழுத்தமானி அறிக்கையின்படி, COVID–19 தொற்றுநோயால் 2020ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சுற்றுலா 60–80% குறையக்கூடும். இதன் விளைவாக $910 பில்லியன் முதல் $1.2 டிரில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் இழப்பு ஏற்படும். மேலும், 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பன்னாட்டுச் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் 22% வீழ்ச்சியை இது ஏற்படுத்தியுள்ளது என்றும் அவ்வறிக்கை கூறியுள்ளது.

**8. 1998'இல் பொக்ரானில் நடத்தப்பட்ட அணுசக்தி சோதனைகளின் சாதனையைக் குறிக்கும் வகையில், மே.11 அன்று இந்தியாவில் எந்தச் சிறப்பு நாள் கொண்டாடப்படுகிறது?**

அ. தேசிய அணுவாற்றல் நாள்

**ஆ. தேசிய தொழில்நுட்ப நாள் ☑**

இ. தேசிய அணுவாயுத நாள்

ஈ. பொக்ரான் நாள்



❖ கடந்த 1998ஆம் ஆண்டில் இராஜஸ்தானின் பொக்ரானில் இந்தியா தனது அணுசக்தி சோதனைகளை நடத்திய நாளைக்குறிக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் மே.11, இந்தியாவில் தேசிய தொழில்நுட்ப நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியா தனது முதல் அணுசக்தி பரிசோதனையை 1974'இல் "சிரிக்கும் புத்தர்" என்ற பெயரில் நடத்தியது. கடந்த 1998'இல் 'ஆபரேஷன் சக்தி' என்ற பெயரில், அடுத்த அணுசக்தி திட்டம் மேற்கொள்ளப்பட்டது. Dr. APJ அப்துல் கலாம், மே.11 அன்று அணுவாயுத பரிசோதனைகளை மேற்கொண்ட அறிவியல் குழுவுக்கு தலைமைதாங்கினார். தற்போது, அணுவாயுத திட்டத்தை வைத்திருக்கும் உலகின் எட்டு நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.

**9.சுரக்ஷா ஸ்டோர் என்பது எந்த மத்திய அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட முயற்சியாகும்?**

அ. உள்துறை அமைச்சகம்

**ஆ. நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ. நிதி அமைச்சகம்

ஈ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

❖ சுரக்ஷா ஸ்டோர் முயற்சியானது நுகர்வோர் விவகாரங்கள், உணவு & பொது விநியோக அமைச்சால் தொடங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதுமுள்ள மளிகைக்கடை உரிமையாளர்களுக்கு வணிகம் மேற்கொ –ள்ளும்போது பின்பற்றவேண்டிய பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு அறிவுறுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். அண்மையில், நுகர்வோர் விவகாரங்கள் துறையானது தொழினுட்ப துளிர் நிறுவனங்களான SafeJob & Seekify ஆகியவற்றுடன் கூட்டிணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.


**10. 'பிராணவாயு' என்பது எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ள சுவாச சுகாதார விழிப்புணர்வு திட்டமாகும்?**

அ. சென்னை

**ஆ. பெங்களூரு ☑**

இ. புது தில்லி

ஈ. ஹைதராபாத்




❖ பெங்களூரு நகர நிறுவனமான புருஹத் பெங்களூரு மகாநகர பாலிகே, நகரவாசிகளுக்கு சுவாச நலனைப்பற்றிய தன்பரிசோதனை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, "பிராணவாயு" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. குருதியில் குறைந்த உயிர்வளி அளவு உள்ளவர்கள், தொடக்க நிலையில் தங்களை தாங்களே பரிசோதனை செய்துகொள்வது குறித்து அறிவுறுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்கீழ், தன்பரிசோதனைபற்றி ஊடகங்களில் பல்வேறு விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

# நடப்பு நிகழ்வுகள்

**1.ஆரோக்கிய சேது செயலி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள புதிய வழிகாட்டுதல்களின்படி, அதிகபட்சம் எவ்வளவு நாட்களுக்கு இந்தச் செயலி தரவுகளைச் சேமிக்கும்?**

அ. 120

**ஆ. 180 ☑**

இ. 200

ஈ. 365

❖ 'ஆரோக்கிய சேது' செயலி பயன்பாட்டாளர்களின் தரவுகளைக் கையாள்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை நடுவணரசு வெளியிட்டது. அதன்படி, COVID-19 நோயாளிகள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களிடம் இருப்பிடம், தன்மதிப்பீடு, தொடர்புகள் ஆகிய தரவுகள் மட்டுமே சேகரிக்கப்படவேண்டும்.

❖ அதிகபட்சம் 180 நாட்களுக்குமேல் தரவுகளைச் சேமித்துவைக்கக்கூடாது. COVID-19 (கொரோனா) நோய்த்தொற்றால் பாதிக்கப்படாத நபர்கள், 'ஆரோக்கிய சேது' செயலி தொடர்பான பதிவுகளிலிருந்து தங்களது தரவுகளை நீக்குமாறு கோரிக்கை அனுப்பிய முப்பது நாட்களுக்குள் அவை நீக்கப்படும். இதுதொடர்பான நெறிமுறைகளை மீறுவோர் மீது பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் 51, 60 ஆகிய பிரிவுகள் மற்றும் இதர சட்டப்பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி, ஏழாண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க முடியும் என்று வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

**2. 'FIR ஆப்கே துவார் யோஜனா' என்றவொரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. உத்தரபிரதேசம்

ஆ. பஞ்சாப்

**இ. மத்திய பிரதேசம் ☑**

ஈ. மகாராஷ்டிரா

❖ மத்திய பிரதேச மாநில அரசானது போபாலில், 'FIR ஆப்கே துவார் யோஜனா' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டம், மாநிலம் முழுவதுமுள்ள 23 காவல் நிலையங்களில் சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்காக காவல் நிலையங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. அதற்குமாறாக அவர்கள் '100' என்ற எண்ணை அழைத்தால் போதுமானது. அதன்பின்னர், FIR பதிவுசெய்யத்தெரிந்த ஒரு தலைமைக்காவலருடன், 'டயல் 100' என்னும் வாகனம் புகார்தாரரின் வீடுதேடிச்சென்று புகார்களைப் பெற்றுக்கொள்ளும்.

**3.ஒடிசாவின் மத்தியப் பல்கலைக்கழக மாணாக்கர்களுக்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் தொடங்கியுள்ள தொலைபேசி உதவிச்சேவை மையத்தின் பெயர் என்ன?**

அ. சுரக்ஷா

**ஆ. பரோசா ☑**

இ. சக்தி

ஈ. ரக்ஷன்



❖ COVID–19 தொற்றுநோய் காரணமாக உருவாகியுள்ள நெருக்கடியான சூழலில், மாணவ சமூகத்தினர் தங்கள் துயரத்திலிருந்து விடுபடுவதற்காக, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் இரமேஷ் போக்ரியால் 'நிஷாங்க்' ஒடிசாவின் மத்தியப் பல்கலைகழக தொலைப்பேசி உதவிச்சேவை, 'பரோசா' மற்றும் அதன் தொலைபேசி உதவி எண்ணையும், '08046801010' புது தில்லியில் ஒரு இணைய மாநாடுமூலம் தொடங்கினார். ஒடிசாவின் அனைத்துப் பல்கலை மாணாக்கர்களுக்கும், "அறிவாற்றல், உணர்ச்சி மறுசீரமைப்பு சேவைகளை" (Cognitive Emotional Rehabilitation Services) வழங்குவதை இந்தத் தொலைபேசி உதவிச்சேவை நோக்கமாகக்கொண்டுள்ளது.

**4.மத்திய வேளாண் அமைச்சகத்தின் இலக்கின்படி, மே.15ஆம் தேதிக்கு முன்னர், எத்தனை சந்தைகள் e–NAM தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்?**

அ. 1000 ☑

ஆ. 2000

இ. 4000

ஈ. 8000

❖ மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், அண்மையில் கூடுதலாக 117 மொத்த விற்பனை சந்தைகளை மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (e–NAM) ஒருங்கிணைத்தார். இதன்மூலம், மே.15ஆம் தேதிக்கு முன்னதாக ஆயிரம் சந்தைகளை e–NAM தளத்துடன் இணைக்கும் வேளாண் அமைச்சகத்தின் இலக்குக்கு எதிராக தற்போது நாடு முழுவதும் இணைக்கப்பட்ட மொத்த மின்னணு சந்தைகளின் எண்ணிக்கை 962ஆக மாறியுள்ளது. e–NAM தளத்தில், வாங்குபவரோ (அ) வர்த்தகரோ நேரடியாக இடம்பெறாமல், தொலைநிலை ஏலம் மேற்கொள்ளும் வசதி மற்றும் மின்னணு முறையில் கட்டணஞ்செலுத்தும் வசதி ஆகியவை வழங்கப்படுகிறது.

**5.ஆசியா / ஓசியானியா மண்டலத்திற்கான Fed கோப்பை விருதை வென்ற முதல் இந்தியர் யார்?**



அ. லியாண்டர் பேஸ்

**ஆ. சானியா மிர்சா ☑**

இ. ரோகன் போபண்ணா

ஈ. பிரஜ்னேஷ் குன்னேஸ்வரன்

❖ டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, ஆசியா (அ) ஓசியானியா மண்டலத்திற்கான Fed கோப்பை இதயங்கவர்ந்தவருக்கான விருதை வென்ற முதல் இந்தியரானார். மொத்தம் பெறப்பட்ட 16,985 வாக்குகளில் 10,000'க்கும் மேற்பட்ட வாக்குகளை சானியா மிர்சா பெற்றார். இந்த, 'Fed Cup Heart' விருது, பன்னாட்டு டென்னிஸ் கூட்டமைப்பால் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. Fed கோப்பை தொடரில் நாட்டுக்காக துணிச்சலுடனும், அர்ப்பணிப்புடனும் செயல்படும் வீரர் / வீராங்கனை –களுக்காக வழங்கப்படுகிறது.

**6.இந்திய பாராலிம்பிக் குழுமத்தின் தலைவராக பொறுப்பேற்கவுள்ள இந்திய விளையாட்டு ஆளுமை யார்?**

அ. தேவேந்திர ஜஜாரியா

**ஆ. தீபா மாலிக் ☑**

இ. மாரியப்பன் தங்கவேலு

ஈ. வருண் சிங் பாட்டி



❖ மாற்றுத்திறனாளி தடகள வீராங்கனை தீபா மாலிக், இந்திய பாராலிம்பிக் குழுமத்தின் தலைவராக நீடிக்கும் வகையில் பன்னாட்டுப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். தேசிய விளையாட்டுக்கொள்கையின்படி, போட்டிகளில் பங்கேற்றுவரும் வீரர்/வீராங்கனைகள் விளையாட்டு கூட்டமைப்பு நிர்வாகிகளாகப் பணியாற்ற முடியாது. 2016ஆம் ஆண்டு நடைபெற்ற பாராலிம்பிக் குண்டு எறிதலில் வெள்ளி வென்ற சாதனையாளரான இவருக்கு 'அர்ஜுனா', 'பத்மஸ்ரீ', 'இராஜீவ் காந்தி கேல் இரத்னா' விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. அவர் இதுவரை, 58 தேசிய பதக்கங்களும் 23 பன்னாட்டு பதக்கங்களும் வென்றுள்ளார்.

**7.நடப்பாண்டு (2020) பன்னாட்டுச் செவிலியர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ. Nursing the World to Health ☑**

ஆ. Honour the Nurses

இ. Nurses are Warriors

ஈ. Nursing the Globe

❖ சிறந்த மருத்துவச் சேவைகளை வழங்குவதில் செவிலியர்களின் பாத்திரத்தை சிறப்பிக்கும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும் மே.12 அன்று உலக செவிலியர் நாள் கொண்டாடப்படுகிறது. "கைவிளக்கேந்திய காரிகை" என அழைக்கப்படும் புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையிலும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. உலக நலவாழ்வு அமைப்பு, 2020ஆம் ஆண்டை, "செவிலித்தாய்களின் ஆண்டு" என அறிவித்துள்ளது. "Nursing the World to Health" என்பது 2020ஆம் ஆண்டில்வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

**8. 'Champions' என்ற பெயரில் தகவல் மேலாண்மை அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ள அமைச்சகம் எது?**

அ. மனிதவள & மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சகம் www.champions.gov.in என்ற சாம்பியன்ஸ் இணையதளத்தைத் தொடங்கியுள்ளது. இது தொழில்நுட்ப அடிப்படையிலான கட்டுப்பாட்டறை மற்றும் மேலாண்மை நடைமுறையாக இருக்கும்.

- ❖ நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த நடைமுறை, தேசிய & உலகளாவிய சாம்பியன்ஸ் என்ற நிலையை நோக்கிய நகர்வில் குறு, சிறு & நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சகத்துக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

- ❖ 'CHAMPIONS' என்பது உருவாக்கம் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நவீன நடைமுறைகளை இணக்கத்துடன் பயன்படுத்தி தேசத்தை வலுப்படுத்துவது என்பதைக் குறிப்பதாக இருக்கிறது. எனவே இந்த நடைமுறை 'CHAMPIONS' என்று குறிப்பிடப்படுகிறது. சிறிய தொழில் பிரிவுகளின் குறைகளைத் தீர்த்து வைத்து, ஊக்குவிப்பு, ஆதரவு, உதவிகள் அளித்து, கைபிடித்துத் தூக்கிவிடும் செயல்பாடுகள் மூலம் அவற்றைப் பெரிய நிறுவனங்களாக ஆக்கவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த இணையதளம் செயல்படும். குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம் கையாளும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வுகாணும் இணையதளமாக இது இருக்கும்.

**9. ICMR'ஆல் நடத்த முன்மொழியப்பட்ட செரோ–கணக்கெடுப்பு, எந்த மாதிரியின் பிரதான சோதனையை உள்ளடக்கியது?**

அ. நாசி துணியால்

ஆ. தொண்டை துணியால்

**இ. குருதி ☑**

ஈ. சிறுநீர்

- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) இந்திய மக்களிடையே COVID–19 தொற்று பரவுவதை மதிப்பிடுவதற்காக மக்கள்தொகை அடிப்படையிலான செரோ–கணக்கெடுப்பை நடத்தவுள்ளது. ICMR புது தில்லி, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, இந்திய அரசு மற்றும் நோய்களுக்கான தேசிய மையம், மாநில சுகாதாரத்துறைகள், உலக நலவாழ்வு அமைப்பு (WHO) உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து இந்தியா ஒரு சமூக அடிப்படையிலான செரோ–கணக்கெடுப்பை நடத்துகிறது. இது, குருதி நீர்ப்பாயத்தை (blood serum) சோதனை செய்வதை உள்ளடக்குகிறது.

- ❖ 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 69 மாவட்டங்களில் இந்த ஆய்வு நடத்தப்படும் என்று சுகாதார ஆராய்ச்சி அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ICMR'இன் தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் மற்றும் சென்னையின் காசநோய்க்கான தேசிய ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இந்த ஆய்வை ஒருங்கிணைக்கின்றன.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "ஏர்லென்ஸ் மைனஸ் கொரோனா" என்றால் என்ன?**

அ. வளி தூய்மைப்படுத்தி

**ஆ. கிருமிநாசினி ரோபோ ☑**

இ. சிறப்பு முகக்கவசம்

ஈ. கிருமிநாசினி



- ❖ இந்திய தொழில்நுட்ப நிறுவனமும் (IIT) ஸ்டான்போர்ட் முன்னாள் மாணவர்கள் குழுவும் இணைந்து "Airlens Minus Corona" என்றவொரு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளன. இது, சோதனை மற்றும்

அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்து (NABL) சான்றிதழைப் பெற்றுள்ளது. இது, மருத்துவமனைகள் மற்றும் மக்கள் கூட்டம் மிக்க நெரிசலான பொதுவிடங்களுக்கு பயணித்து, நீர்சார்ந்த தொழில்நுட்பத்தின்மூலம் மேற்பரப்பு கிருமிகளை நீக்கம் செய்யும்.

- ஆல்கஹால் அல்லது புற–ஊதா அடிப்படையிலான முறையைப் போலன்றி இது, "Water Electro Activation" தொழில்நுட்பத்தின் அடிப்படையில் செயல்படுகிறது. மின்னேற்றஞ்செய்யப்பட்ட அல்லது அயனியாக்கம் செய்யப்பட்ட நீர்த்துளிகள், வைரசை, அதன் புரதங்களை அழிப்பதன்மூலம் கொல்கிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- சாதாரண நோய்க்கு வீட்டிலிருந்தவாறே ஆலோசனைபெறுவதற்காக, "இ–சஞ்சீவனி OPD" என்னும் இலவச காணொளி மருத்துவ ஆலோசனை திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், 1.55 இலட்சம் சுகாதார நிலையங்கள் இணைக்கப்பட்டுள்ளன. https://esanjeevaniopd.in என்ற உரலியில் இச்சேவையைப் பெறலாம்.




---

# நடப்பு நிகழ்வுகள்

**1. TVS குழுமமும் சுந்தரம் மருத்துவ அறக்கட்டளையும் இணைந்து, "சுந்தரம் வெண்டகோ" என்ற சுவாச உதவி சாதனத்தை உருவாக்குவதற்காக, கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளன?**



அ. AIIMS

ஆ. IISc

**இ. IIT மெட்ராஸ் ☑**

ஈ. IIT கௌகாத்தி

❖ TVS குழுமமும் சுந்தரம் மருத்துவ அறக்கட்டளையும் மெட்ராஸ் IIT நிறுவனத்துடன் இணைந்து, 'சுந்தரம் வெண்டகோ' எனப்படும் மலிவுவிலை மற்றும் தானியங்கி சுவாச உதவி சாதனத்தை உருவாக்கின. MIT–பாஸ்டன் போன்ற நிறுவனங்களின் வழிகாட்டுதலுடன் மெட்ராஸ் மருத்துவக்கல்லூரி மற்றும் காவிரி மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளுடன் இணைந்து இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனம், சுவாசிப்பதற்கு சிரமப்படும் நோயாளிக்கு செயற்கையாக சுவாசத்தை வழங்க உதவும். அதனை, தானாகச் சுருங்கி விரியும் ஒரு பையின் (AMBU bag) வாயிலாக அது மேற்கொள்கிறது.

**2. COVID–19 கொள்ளைநோய் எதிர்ப்பில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக, எந்த நாட்டின் தேசிய பொது சுகாதார நிறுவனம் $3.6 மில்லியன் நிதியுதவியை அறிவித்துள்ளது?**



அ. சீனா

ஆ. தென் கொரியா

இ. ஜெர்மனி

**ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ☑**

❖ அமெரிக்காவின் தேசிய பொது நலவாழ்வு நிறுவனமான நோய் கட்டுப்பாடு & தடுப்பு மையங்கள் (CDC), COVID–19 தொற்றுநோய் எதிர்ப்பில் இந்தியாவின் நடவடிக்கைகட்கு உதவுவதற்காக, $3.6 மில்லியன் டாலர்களை அளித்துள்ளது. SARS–COV–2 சோதனைக்கான ஆய்வகத் திறனை அதிகரிப்பதற்கான இந்தியாவின் முயற்சிகளை வலுப்படுத்தவும் ஆதரிக்கவும் இந்த ஆரம்பக்கட்ட நிதியுதவி உதவும். CDC இந்தியா திட்டம், தற்போதைய நெருக்கடி அவசரநிலையில் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப ரீதியிலான உதவிகளை வழங்கும்.

**3.இந்திய கலாசார உறவுகளுக்கான கழகம் (ICCR) என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் கீழியங்கும் ஒரு தன்னாட்சி மிகுந்த அமைப்பாகும்?**

அ. கலாசார அமைச்சகம் **ஆ. வெளியுறவு அமைச்சகம் ☑**

இ. உள்துறை அமைச்சகம் ஈ. சுற்றுலா அமைச்சகம்

Indian Council for Cultural Relations

❖ இந்திய கலாசார உறவுகள் கழகம் (ICCR) என்பது மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் கீழியங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். பிறநாடுகளுடன் கலாசார உறவுகளை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். அண்மையில், COVID–19 தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இந்திய மக்களிடையே நம்பிக்கையை ஊக்குவிக்கும் முயற்சிகளின் ஒருபகுதியாக, உஷா உதுப் மற்றும் ஜோ ஆல்வாரெஸ்

போன்ற புகழ்மிக்க இசைக்கலைஞர்களால் பாடப்பட்ட, "United We Fight" என்ற பாடலை ICCR வெளியிட்டது. இந்தப் பாடலை ஜோ ஆல்வாரெஸ் எழுதி இயற்றியுள்ளார்.

### 4.இந்திய அரசு அறிவித்த, "ஆத்ம நிர்பர் பாரத் அபியான்" சிறப்பு பொருளாதார தொகுப்பின் அளவு என்ன?

அ. 5 இலட்சம் கோடி

ஆ. 10 இலட்சம் கோடி

**இ. 20 இலட்சம் கோடி ☑**

ஈ. 50 இலட்சம் கோடி



- ❖ "ஆத்ம நிர்பர் பாரத் அபியான்" என்ற ₹20 இலட்சம் கோடி மதிப்பிலான சிறப்பு பொருளாதார தொகுப்பை சமீபத்தில் இந்திய பிரதமர் அறிவித்தார். நான்காம் கட்ட நாடடங்கிற்கு முன்னதாக அறிவிக்கப்பட்ட இது, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குப்விப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

- ❖ இத்தொகுப்பில் ஏழை மக்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்குதல் மற்றும் ஏழைப்பெண்கள் & முதியவர்களுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் உள்ளிட்ட ₹1.7 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டமும் அடங்கும். அது, பிரதமர் கரீப் கல்யாண் யோஜனா என்ற பெயரில் மார்ச்சில் அறிவிக்கப்பட்டது. ரிசர்வ் வங்கி அறிவித்த பணப்புழக்க நடவடிக்கைகள் மற்றும் வட்டிக்குறைப்புகளும் இதில் அடங்கும். நிலம், தொழிலாளர், பணப்புழக்கம் மற்றும் சட்டங்கள் குறித்தும் இந்த நிதித்தொகுப்பு கவனம் செலுத்தும் எனப் பிரதமர் கூறியுள்ளார்.

### 5.இந்தியாவின் எந்த அதிகாரப்பூர்வ குறியீடு, சமீபத்தில் 2020 மார்ச்சில் 16.5 சதவீதமாகக்குறைந்தது?

அ. நுகர்வோர் விலைக்குறியீட்டெண்

**ஆ. தொழில் உற்பத்தி குறியீடு ☑**

இ. மொத்த விலைக்குறியீட்டெண்

ஈ. நிகர தேசிய வருமானம்



- ❖ தொழில் உற்பத்தி குறியீடு என்பது மத்திய புள்ளிவிவர அமைப்பால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஒரு குறியீடாகும். உற்பத்தி மற்றும் மின்சாரம் போன்ற தொழிற்துறைகளின் வளர்ச்சி விகிதத்தை இது காட்டுகிறது. அண்மையில் வெளியிடப்பட்ட மார்ச் மாத குறியீடு, 16.7% குறைந்து 120.1 ஆக இருந்தது. 2018–19 தொழிற்துறை உற்பத்தி குறியீடு 3.8% வளர்ச்சியடைந்த நிலையில், கடந்த 2019–20 நிதி ஆண்டில் 0.7% பின்னடைவை சந்தித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**6.2021 பிப்ரவரி–மார்ச் மாதத்துக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ள FIFA U–17 மகளிர் உலகக்கோப்பைக்கான போட்டி நடைபெறவுள்ள நாடு எது?**

அ. பிரேசில் **ஆ. இந்தியா ☑**

இ. சீனா ஈ. ஜப்பான்

❖ FIFA U–17 மகளிர் உலகக்கோப்பைக்கான போட்டிகள் முதலில் இந்தியாவில் 2020 நவம்பர் 2 முதல் 21 வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தன. அது பின்னர், COVID–19 காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அண்மையில், FIFA U–17 மகளிர் உலகக்கோப்பைக்கான போட்டிகள், 2021 பிப்.17 முதல் மார்ச்.7 வரை மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக FIFA அறிவித்தது. இந்தப் போட்டிகள், முதலில் நவி மும்பை, கௌகாத்தி, ஆமதாபாத், கொல்கத்தா மற்றும் புவனேஸ்வர் ஆகிய 5 இந்திய நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டது.

**7.நாடடங்கிற்குப்பிறகு மறுபடியும் விளையாட்டுப்பயிற்சியைத் தொடங்குவதற்கான நடைமுறைகளை உருவாக்குவதற்காக, இந்திய விளையாட்டு ஆணையம் அமைத்த 6 பேர்கொண்ட குழுவின் தலைவர் யார்?**

**அ. ரோகித் பரத்வாஜ் ☑**

ஆ. ஜே ஷா

இ. முஷ்தக் அகமது

ஈ. Dr. நரிந்தர் துருவ் பத்ரா

❖ இந்திய விளையாட்டு ஆணையத்தின் (SAI) மையங்களில் மீண்டும் பயிற்சியைத் தொடங்க மத்திய விளையாட்டுத்துறை திட்டமிட்டுள்ளது. SAI பயிற்சி மையத்தை திறக்கும்போது COVID–19 பரவுவதை தடுப்பதற்கு எத்தகைய உயர்மட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பதை அறிந்து செயல்படுத்துவதற்கு வசதியாக SAI சார்பில் 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக, SAI செயலாளர் ரோஹித் பரத்வாஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ மீண்டும் பயிற்சி தொடங்கும் போது வீரர்கள், பயிற்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் பாதுகாப்பு விஷயத்தில் எத்தகையை கட்டுப்பாடுகளை விதித்து அதை நடைமுறைக்குக்கொண்டு வருவது என்பது குறித்தும், மையத்தின் பொதுவிடங்களில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, கிருமிநாசினி பயன்பாடு, மருத்துவ வழிகாட்டுதல்கள் உள்ளிட்டவை குறித்தும் இந்தக் குழு கலந்தாலோசித்து வரைவு அறிக்கை தயாரிக்கவுள்ளது. இந்தத் திட்ட அறிக்கை தயார்செய்யப்பட்டு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு பின்னர் அனுப்பிவைக்கப்படும்.

**8. 'சுவஸ்த்வாயு' என்னும் செயற்கை சுவாசக்கருவியைக்கொண்ட தேசிய விண்வெளி ஆய்வகங்கள் என்பது எந்த அமைப்பின் விண்வெளி ஆய்வகங்களாகும்?**

அ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO)

**ஆ. அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகம் (CSIR) ☑**

இ. இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO)

ஈ. இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL)

- ❖ அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகத்தின் (CSIR) ஓர் அங்கமான, பெங்களூருவில் உள்ள தேசிய வான்வெளி ஆய்வகம், COVID–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, முகக்கவசம் அடிப்படையில், செயற்கை சுவாசம் அளிக்கும் கருவியை வெறும் 36 நாட்களில் வடிவமைத்துள்ளது.

- ❖ நுண்கட்டுப்பாடு அடிப்படையிலான மிகவும் துல்லியமாக மூடப்பட்ட கட்டுப்பாட்டு முறையைக் கொண்ட இந்த அமைப்பு, காற்றை உயர்திறனுடன் வடிகட்டும் (HEPA) அமைப்புடன் உயிர்–இணக்கத்தன்மை கொண்ட, "முப்பரிமாண அச்சு மடுக்கு & இணைப்பு" கொண்டு கட்டமைக்கப்பட்டது. இந்தத் தனிப்பட்ட சிறப்பம்சங்கள், வைரஸ் பரவும் என்ற அச்சத்தைப்போக்க உதவும். COVID–19 தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை மருத்துவமனை வார்டுகள், தற்காலிக மருத்துவமனைகள், மருந்தகங்களில் வைத்து சிகிச்சை அளிக்க இது பொருத்தமானது.

**9.அண்மையில் புவிசார் குறியீடு பெற்ற தெலியா ரூமல் கைத்தறி துணியுடன் தொடர்புடைய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**



அ. ஜம்மு & காஷ்மீர் ஆ. ஹிமாச்சல பிரதேசம்

**இ. தெலுங்கானா ☑** ஈ. கர்நாடகா

- ❖ அண்மையில், ஜார்க்கண்டின் சோராய் கோவர் ஓவியம் மற்றும் தெலுங்கானாவின் தெலியா ரூமல் கைத்தறி துணி ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது. பழங்குடிப் பெண்களால் உள்நாட்டில் கிடைக்கக்கூடிய வெவ்வேறு வண்ணங்களைக்கொண்ட மண்ணைக்கொண்டு தீட்டப்ப –டுவதாகும் சோராய் கோவர் ஓவியம் என்னும் பாரம்பரிய கலை. இது பெரும்பாலும், ஜார்க்கண்டின் ஹசாரிபாக் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

- ❖ தெலியா ரூமல் கைத்தறி துணி என்பது சிக்கலான கையால் செய்யப்பட்ட பூவேலைப்பாடாகும். மேலும், தஞ்சாவூர் நெட்டி வேலைப்பாடு, பெரம்பலூர் மாவட்டத்தின் அரும்பாவூர் மரச்சிற்பங்களுக்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

**10.இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ. V. வித்யாவதி ☑**



ஆ. P K சர்மா

இ. I V சுப்பராவ்

ஈ. நிருபேந்திர மிஸ்ரா

- ❖ 1991ஆம் ஆண்டு கர்நாடக பிரிவு அதிகாரியான செல்வி V வித்யாவதி, சமீபத்தில், இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையின் (ASI) புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அமைச்சரவை நியமனக் குழுவின் உத்தரவின்படி, அவர் இந்திய அரசின் கூடுதல் செயலாளருக்கு இணையான பதவியில் பணியாற்றுவார். புது தில்லியை தலைமையிடமாகக் கொண்ட ASI'இன் முந்தைய தலைமை இயக்குநராக உஷா சர்மா பணிபுரிந்து வந்தார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.நிதியமைச்சரின் அறிவிப்பின்படி, எவ்வளவுக்கு குறைவான அரசு ஒப்பந்தப்புள்ளிகள் இனி பன்னாட்டு அளவில் வெளியிடப்படாது?**

அ. ரூ.100 கோடி

**ஆ. ரூ.200 கோடி ☑**

இ. ரூ.400 கோடி

ஈ. ரூ.1000 கோடி




❖ இந்திய பிரதமர் அறிமுகப்படுத்திய, "ஆத்ம நிர்பர் பாரத் யோஜனா" தொகுப்பின் விவரங்களை மத்திய நிதியமைச்சர் அறிவித்தார். இந்திய மற்றும் அயல்நாட்டு நிறுவனங்களுக்கு இடையே நியாயமற்ற போட்டி நிலவிவரும் இந்தச் சூழ்நிலையில், ₹200 கோடி வரையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பன்னாட்டு அளவில் வெளியிடப்படாது என அவர் அறிவித்தார். இந்த நடவடிக்கை குறு, சிறு & நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவும். மேலும், 'இந்தியாவில் தயாரிப்போம்' என்னும் திட்டத்திற்கும் ஆதரவாக இருக்கும். குறு, சிறு & நடுத்தர நிறுவனங்கள் உள்ளிட்ட வணிகங்களுக்கான ₹3 இலட்சம் கோடி அவசரகால நிதியையும் ஒதுக்கீடு செய்து அவர் அப்போது அறிவித்தார்.

**2.அண்மைய பொருளாதார ஆதரவுத் தொகுப்பில், DISCOM'களுக்கு (மின் விநியோக நிறுவனங்கள்) ஒதுக்கப்பட்ட நிதியளவு எவ்வளவு?**

அ. ரூ.50,000 கோடி

ஆ. ரூ.75,000 கோடி

**இ. ரூ.90,000 கோடி ☑**

ஈ. ரூ.1,00,000 கோடி



❖ மின்சார விநியோக நிறுவனங்களுக்கு ₹90,000 கோடி நிதியுதவி வழங்கப்படுவதாக நிதியமைச்சர் அறிவித்துள்ளார். மத்திய பொதுத்துறை மின்னுற்பத்தி நிறுவனங்கள், மின்கடத்தும் நிறுவனங்கள், சுயாதீன மின்னுற்பத்தியாளர்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களுக்கு செலுத்த இந்நிதி பயன்படுத்தப்படும். பொதுத்துறை நிறுவனங்களின் பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் கிராமப்புற மின்மயமாக்கல் கார்ப்பரேஷன் ஆகியவை மின் விநியோக நிறுவனங்கள் பெறத்தக்கவை –களுக்கு எதிராக சந்தையிலிருந்து சுமார் ₹90,000 கோடியை திரட்டுவதன்மூலம் பணப்புழக்கத்தை ஊக்குவிக்கும். இந்நிதிக்கு மாநில அரசுகள் உத்தரவாதம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.உலக பொருளாதார மன்றத்தால் (WEF) அண்மையில் வெளியிடப்பட்ட உலகளாவிய, "ஆற்றல் மாற்ற குறியீட்டில்" இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 70 **ஆ. 74 ☑**

இ. 78 ஈ. 82

WORLD ECONOMIC FORUM

❖ உலக பொருளாதார மன்றமானது சமீபத்தில் உலகளாவிய, "ஆற்றல் மாற்ற குறியீட்டை" வெளியிட்டது. ஆற்றல் அமைப்புகளின் தற்போதைய செயல்திறன் மற்றும் பாதுகாப்பான & நீடித்த ஆற்றல் அமைப்பு

மாற்றத்திற்கான அவற்றின் தயார்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தக் குறியீடு 115 நாடுகளை தரநிலைப்படுத்தியுள்ளது. முந்தைய ஆண்டைவிட இந்தியா இரண்டு இடங்கள் முன்னேறி 74ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. மேலும், அனைத்து முக்கிய அளவுருக்களிலும் முன்னேறியுள்ளது. ஆற்றல் மாற்ற குறியீட்டில் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக சுவீடன் முதலிடத்தில் உள்ளது. அடுத்த இரு இடங்களில் சுவிச்சர்லாந்தும் பின்லாந்தும் உள்ளன.

**4.நடப்பாண்டு (2020) ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாடு நடைபெறவுள்ள நகரம் எது?**

**அ. புனித பீட்டர்ஸ்பர்க் ☑**

ஆ. மாஸ்கோ

இ. பெய்ஜிங்

ஈ. புது தில்லி

❖ COVID-19 தொற்றுநோயின் பின்னணியில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) வெளியுறவு அமைச்சர்களின் காணொளிவழி உச்சிமாநாடு சமீபத்தில் நடைபெற்றது. இந்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தினார். இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், சீனா, பாகிஸ்தான், இரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட 8 உறுப்புநாடுகளை SCO கொண்டுள்ளது. இரஷ்ய நகரமான புனித பீட்டர்ஸ்பர்க்கில் 2020 ஜூலை மாதத்தில் நடைபெறவிருந்த SCO உச்சிமாநாடு திட்டமிட்டபடி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**5. "உலகளாவிய வனவள மதிப்பீடு – 2020" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. உலக உணவு திட்டம்

**ஆ. உணவு மற்றும் வேளாண் அமைப்பு ☑**

இ. பன்னாட்டு வேளாண் மேம்பாட்டு நிதியம்

ஈ. இயற்கைக்கான உலகளாவிய நிதியம்

❖ அமெரிக்க முகமையான உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) அண்மையில், "உலகளாவிய வனவள மதிப்பீடு – 2020 (FRA – 2020)" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. 1990–2020 வரையிலான காலகட்டத்தில், 236 நாடுகளின் நிலையை இந்த அறிக்கை ஆராய்கிறது.

❖ கடந்த முப்பதாண்டுகளில் உலகம் முழுவதும் வனப்பகுதி பெருமளவுக்கு குறைந்துவிட்டதாக இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. 2015–2020ஆம் ஆண்டில் வனப்பகுதி இழப்பு விகிதம் பத்து மில்லியன் ஹெக்டேராக குறைந்துள்ளது. இந்த விகிதம் 2010–2015ஆம் ஆண்டில் 12 மில்லியன் ஹெக்டேர்களாக இருந்தது. 1990ஆம் ஆண்டு முதல், உலகம், 178 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான காடுகளை இழந்துவிட்டது. அது, லிபியாவின் பரப்பளவுக்கு ஏறக்குறைய சமமாகும்.

**6. "பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தின் (PMEGP) செயல்படுத்தும் நிறுவனம் எது?**

அ. தென்னை நார் வாரியம்

ஆ. தேசிய சிறு தொழில்கள் கழகம் லிட்

**இ .காதி மற்றும் கிராமப்புற தொழிற்துறை ஆணையம் ☑**

ஈ. தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிறுவனம்

❖ MSME அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு சட்டபூர்வ அமைப்பான காதி மற்றும் கிராமப்புற தொழில்துறை ஆணையம் (KVIC), "பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தின்" செயல்படுத்தும் நிறுவனமாகும். உள்நாட்டு தயாரிப்புகளை ஆதரிப்பதாக இந்திய பிரதமர் அறிவித்த பின்னர், PMEGP திட்டத்தின்கீழ் திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை KVIC அறிவித்தது. சம்பந்தப்பட்ட முகமைகள், விண்ணப்பங்களை ஆராய்ந்து, 26 நாட்களுக்குள் வங்கிகளுக்கு அனுப்பவேண்டும். இக்கால அளவை, 15 நாட்களாக குறைக்கவும் KVIC அறிவுறுத்தியுள்ளது.

**7. CMIE'இன் அண்மைய ஆய்வின்படி, 2020 ஏப்ரலில் வேலையிழந்த 20–39 வயதுக்குட்பட்ட இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன?**

அ. 50 இலட்சம்

ஆ. 1 கோடி

இ. 2 கோடி

**ஈ. 6 கோடி ☑**



❖ இந்திய பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தின் (CMIE) ஓர் அண்மைய அறிக்கையின்படி, 20–39 வயதுக்குட்பட்ட 6 கோடி இந்தியத் தொழிலாளர்கள் ஏப்ரல் மாதத்தில் வேலையிழந்துள்ளனர். பொது முடக்கத்தின் காரணமாக 12 கோடிக்கும் அதிகமான பணிகள் இழக்கப்பட்டுள்ளன என்பது தெரியவந்தது. இவ்வறிக்கையின்படி, 20–29 வயதுக்குட்பட்ட 2.7 கோடிக்கும் மேற்பட்ட இளையோர் கடந்த மாதம் வேலையிழந்துள்ளனர். மேலும், 30–39 வயதுக்குட்பட்ட 3.3 கோடிக்கும் அதிகமானோர் வேலையிழந்துள்ளனர். 2019–20ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் 8.5% பேர் வேலை இழந்துள்ளனர். அதில், 20–24 வயதுக்குட்பட்ட இளம் தொழிலாளர்களும் (11%) அடங்குவர்.

**8. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு அதன், 'KITE விக்டர்ஸ்' அலைவரிசையினூடாக பயிற்சியைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. கர்நாடகா

**ஆ. கேரளா ☑**

இ. தெலுங்கானா

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ கேரள மாநில அரசு தனது 'KITE Victers' அலைவரிசையினூடாக தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியைத் தொடங்கியுள்ளது. பொதுக்கல்வி அமைச்சரும், ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தின் பேரிடர் அபாயக்குறைப்புத்தலைவருமானவர் இதன் தொடக்க வகுப்புகளில் உரையாற்றினார்.

- இப்பயிற்சி வகுப்பில் 81,000'க்கும் மேற்பட்ட தொடக்க மற்றும் மேல்நிலை ஆசிரியர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குமுன்பு, ஆசிரியர்களுக்கு, மெய்நிகர் வசதிகளைப் பயன்படுத்தி பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ், சமூக உணர்வு மற்றும் சமூக அறிவியல் குறித்த வகுப்புகள் நடத்தப்படும். இந்த அலைவரிசையைத் தவிர, இதன் நிரல்கள் KITE'இன் வலைத்தளம் மற்றும் KITE Victers அலைபேசி செயலி ஆகியவற்றிலும் கிடைக்கப்பெறும்.

**9. COVID-19 பாதிப்புகளை பரிசோதிப்பதற்காக இந்திய அரசு கொள்முதல் செய்துள்ள முதல் தானியங்கி சோதனை எந்திரத்தின் பெயர் என்ன?**

அ. CDC 6800

ஆ. COVID 6800

**இ. COBAS 6800 ☑**

ஈ. NCDC 6800



- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன், சமீபத்தில், COBAS 6800 என்ற அரசாங்கத்தால் வாங்கப்பட்ட முதல் பரிசோதனை எந்திரத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். இது, தேசிய நோய்க்கட்டுப்பாட்டு மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது, சுகாதார அமைச்சின் இந்திய சுகாதார சேவைகள் இயக்குநரகத்தின்கீழ் உள்ள ஒரு நிறுவனமாகும்.

- COBAS 6800 என்பது ஒரு முழுமையான தானியங்கி, நவீன எந்திரமாகும். இது, COVID-19 நோய்த் தொற்றுக்கான நிகழ்நேர PCR பரிசோதனையை மேற்கொள்கிறது. இதால், 24 மணி நேரத்தில் சுமார் 1200 மாதிரிகளைச் சோதனை செய்யவியலும். இது, நாட்டில் சோதனைத்திறனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10. 'HOPE' – Helping Out People Everywhere என்பது எந்த இந்திய மாநில அரசின் முன்னெடுப்பாகும்?**

அ. ஒடிசா

**ஆ. உத்தரகண்ட் ☑**

இ. பஞ்சாப்

ஈ. கேரளா

- உத்தரகண்ட் மாநில அரசானது அண்மையில், 'HOPE' – Helping Out People Everywhere என்ற பெயரில் வலைத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்த வலைத்தளம், அம்மாநில இளைஞர்கள் / பிற மாநிலங்களிலிருந்து திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்த தகவல்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளது. தொழிலாளர்கள் தாங்கள் பெற்றுள்ள திறன் குறித்த தகவல்களை அந்தக் குறிப்பிட்ட இணையதளத்தில் முதலில் பதிவேற்றவேண்டும். அதன் அடிப்படையில், அவர்கள் தங்களது சொந்த மாநிலத்திலேயே அவர்களின் தகுதிக்கு ஏற்ற பணிகளைக் கண்டறியவியலும்.

- சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஏற்கனவே அம்மாநில அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்ட முதலமைச்சர் சுவரோஜ்கர் யோஜனாவை செயல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், எந்த மாநிலத்தின் முதலமைச்சர், அம்மாநிலத்தின் சட்டமேலவைக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ. பீகார்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா

- மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் உத்தவ் தாக்கரே மற்றும் 8 வேட்பாளர்கள் அண்மையில் அம்மாநில சட்டமேலவையில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டனர். கடந்த ஆண்டு நவ.28 அன்று முதல்வராக பதவியேற்ற உத்தவ் தாக்கரே, 2020 மே.27'க்கு முன் அம்மாநில சட்டமன்றத்தின் ஈரவைகளிலும் உறுப்பினராக வேண்டும். பிற எட்டு வேட்பாளர்களுள் கவுன்சில் துணைத்தலைவர் Dr. நீலம் கோரே உள்ளிட்டோர் அடங்குவர். உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னர் அவர்கள் அதிகாரப்பூர்வமாக பதவியேற்றுக்கொள்வார்கள்.

**2.மலிவு விலை தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களுக்கு வெற்றிகரமாக காப்புரிமை பெற்றுள்ள மத்திய அமைச்சகம் எது?**



அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ. பாதுகாப்பு அமைச்சகம் ☑**

இ. ஜவுளி அமைச்சகம்

ஈ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம்

- இந்திய கடற்படையினரால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய, மருத்துவ தனிநபர் காப்பீட்டு கவசத்தை (PPE), விரைந்து மொத்த உற்பத்தி செய்வதன் ஒரு முக்கிய நடவடிக்கையாக, பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிவுசார் சொத்துக்களுக்கு காப்புரிமை பெற உதவும் அமைப்பு, மத்திய அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து காப்புரிமை கோரி பதிவுசெய்துள்ளது.

- இந்திய கடற்படையால் தயாரிக்கப்பட்டுள்ள, இத்தனிநபர் பாதுகாப்பு கவசங்கள், சந்தையில் கிடைக்கும் மற்ற தனிநபர் பாதுகாப்பு கவசங்களைவிட, அதிகளவு பாதுகாப்பு தரும் வகையிலான சிறப்பு துணியால் செய்யப்பட்டவை. பிற கவசங்களை விட, இக்கவசங்களில், "சுவாசித்தல்" மேலும் அதிகமாக உள்ளது. கடற்படைக்குச் சொந்தமான, மும்பையில் உள்ள கப்பல் பட்டறையில், பரிசோதனை அடிப்படையில் இந்தத் தனிநபர் பாதுகாப்பு கவசங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.ஐ.நா'இன், "உலக பொருளாதார சூழ்நிலை மற்றும் எதிர்கால வளவாய்ப்பு அறிக்கை"யின்படி, 2020ஆம் ஆண்டில், இந்தியாவின் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 3.2% **ஆ. 1.2% ☑**

இ. 0.2% ஈ. 4.2%

1.2%

- ஐ.நா அவையானது அண்மையில், 'உலக பொருளாதார நிலை & எதிர்கால வளவாய்ப்பு' அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020ஆம் ஆண்டில் 3.2% அளவுக்கு சரியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொது முடக்கத்தின் விளைவு காரணமாக 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 1.2%ஆக அதிகரிக்கும் என அவ்வறிக்கை மதிப்பிட்டுள்ளது.
- ஐ.நா., ஏற்கனவே கடந்த 2019ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி விகிதத்தை 4.1%ஆகக் கணித்திருந்தது. இந்தியா தனது வளர்ச்சி விகிதத்தை மெதுவாக மீட்டெடுத்து, 2021ஆம் ஆண்டில் 5.5 சதவீதத்தை எட்டும் என்றும் அந்த அமைப்பு கணித்துள்ளது.

**4.காணொளிவழி நடந்த G20 மெய்நிகர் வர்த்தக & முதலீட்டு அமைச்சர்கள் கூட்டத்தில், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**



அ. நிர்மலா சீதாராமன்

**ஆ. பியூஷ் கோயல் ☑**

இ. S ஜெய் சங்கர்

ஈ. அமித் ஷா

- காணொளிவழி நடந்த G20 மெய்நிகர் வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சர்கள் கூட்டத்தில், மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்றார். COVID-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக, 120'க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தியா மருத்துவப் பொருட்களை வழங்கியுள்ளது என்றும், அதில் 43 நாடுகள் அவற்றை மானியமாகப்பெற்றுள்ளன என்றும் அமைச்சர் கூறினார். டிஜிட்டல் தொழில்நுட்பங்கள்மூலம் இந்தியா மருத்துவ மற்றும் பொது சுகாதாரத்திறனை அவர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளது என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

**5.பொருளாதார ஆதரவுத்தொகுப்பில் காணப்பட்ட CAMPA நிதியுடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**



அ. நிதி அமைச்சகம்

ஆ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

**இ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ☑**

ஈ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

- வனமல்லாத பயன்பாடுகளுக்கு மாற்றிவிடப்பட்ட வன நிலங்களுக்கு ஈடாக காடுவளர்ப்பு நடவடிக்கை -களை மேம்படுத்தும் நோக்கில், சுற்றுச்சூழல், வன அமைச்சகத்தின்கீழ் காடுவளர்ப்புக்காக பெறப்படும் இழப்பீட்டு நிதிகளின் மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையம் (CAMPA) அமைக்கப்பட்டது. பொருளாதார ஆதரவுத் தொகுப்பில், 6000 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்கப்படும் என முன்மொழியப்பட்டுள்ளது. இந்நிதி, காடுவளர்ப்பு மற்றும் தோட்டப்பணிகள், வனப் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புறம், புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் பழங்குடியினர் / ஆதிவாசிகளின் பணிவாய்ப்புகளுக்கு மற்றும் பயன்படுத்தப்படும்.

**6. "இந்தியாவின் COVID–19 சமூகப்பாதுகாப்பு மீட்புத்திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக" $1 பில்லியன் அமெரிக்க டாலரை வழங்குவதாக அறிவித்துள்ள பன்னாட்டு அமைப்பு எது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. பன்னாட்டு செலவாணி நிதியம்

இ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ. புதிய வளர்ச்சி வங்கி

- இந்தியாவில், "COVID–19" நோய்த்தொற்றின் பாதிப்பிலிருந்து ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்காக உலக வங்கி மொத்தம் ₹7,588 கோடி ($1 பில்லியன் அமெரிக்க டாலர்) அளிக்கிறது. இதில், "COVID–19" தொற்றிலிருந்து காக்கும் சமூகப்பாதுகாப்புத் திட்டத்தை முடுக்கி விடுவதற்காக ₹5690.78 கோடி ($750 மில்லியன் அமெரிக்க டாலர்) பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அரசும் உலக வங்கியும் கையெழுத்திட்டன. இது, ஏழைகள் & எளிதில் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு உதவுவதற்காக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு துணைபுரியும்.

- இதன்மூலம், "COVID–19" தொற்று பாதிப்பிலிருந்து இந்தியா மீள்வதற்காக உலக வங்கி மொத்தம் ₹15,176 கோடி ($2 பில்லியின் டாலர்) அளிக்க உறுதிபூண்டுள்ளது. புதிதாக அளிக்கப்படும் உதவி இரு கட்டங்களாக வழங்கப்படும். 2020ஆம் ஆண்டு நிதியாண்டில் உடனடியாக ₹5690.78 கோடி ($750 மில்லியன் டாலர்) அளிக்கப்படுகிறது. அடுத்து, இரண்டாம் கட்டமாக ₹1,897.22 கோடி ($250 மில்லியன் டாலர்) 2021ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

**7.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Eventbot' என்பது என்ன?**

அ. கிருமிநாசினி ரோபோ

ஆ. மறையீட்டு நாணயம் (Cryptocurrency)

**இ. தீம்பொருள் (Malware) ☑**

ஈ. இயலி (Chatbot)



- இணையவெளித் தாக்குதல்களைத் தடுக்கும் தேசிய தொழில்நுட்பப்பிரிவான Computer Emergency Response Team of India (CERT–In) கருத்துப்படி, திறன்பேசிகளில் வங்கிச்சேவையைப் பயன்படுத்தும் ஆண்ட்ராய்டு பயனர்கள், 'Eventbot' என்ற புதிய தீம்பொருளால் பாதிக்கப்படக்கூடும். இந்தப் புதிய தீம்பொருள், பயனர்களின் தனிப்பட்ட & முக்கியமான தகவல்களைத் திருடுவதாகவும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இந்த டிரோஜன் வகை வைரஸ் தன்னை மெய்யான, 'MS Word' செயலி போன்று காட்டி பாதிக்கப்பட்டவரின் சாதனத்தில் நுழையக்கூடும் என்றும் அது எச்சரித்துள்ளது.

- இந்தத் தீம்பொருளை எதிர்த்து, நம்பத்தகாத மூலங்களிலிருந்து பயன்பாடுகளை பதிவிறக்கம் செய்ய வேண்டாம் என்று, CERT–In, பயனர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

**8.SAMARTH (நிறுவன வள திட்டமிடல்) என்ற மின்னாளுகை தளத்தை தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?**

**அ. மனிதவள & மேம்பாட்டு அமைச்சகம் ☑**

ஆ. MSME அமைச்சகம்

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

❖ மனிதவளத்துறை அமைச்சகமானது தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தின் தேசிய கல்வித்திட்டத்தின்கீழ் நிறுவனங்கள் வள திட்டமிடல் என்ற இணையதள செயல்பாட்டை உருவாக்கியுள்ளது. இந்தத்திட்டம், பல்கலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரமான திறந்த ஆதாரக்கட்டமைப்பாகும்.

❖ இது, பாதுகாப்பானது மட்டுமல்லாமல், அளவிடக்கூடியது மற்றும் பரிணாம செயல்முறையில் இயங்கும் தானியங்கி ஆகும். இது பல்கலைக்கழகம் (அ) உயர்கல்வி நிறுவனங்களில் ஆசிரிய, மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்கிறது. தற்போது, நிறுவனங்கள் வள திட்டமிடல், குருக்ஷேத்ராவின் தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் நோக்கம், நிறுவனத்தின் செயல்முறைகளை தன்னியக்கமாக ஆக்குவதாகும்.

**9.அண்மையில், இந்திய கடலோர காவல்படையால் தொடங்கப்பட்ட, 'சாஷே – Sachet' என்பது என்ன?**

அ. இடைமறிக்கும் படகு

**ஆ. கப்பல் ☑**

இ. நீர்மூழ்கிக்கப்பல்

ஈ. வெட்டுப்படகு



❖ மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் கடலோர காவல்படையின் கப்பல், "சாஷே" மற்றும் இரு இடைமறிக்கும் படகுகள் C 450 மற்றும் C 451 ஆகியவற்றை கோவாவிலிருந்து காணொளிக் காட்சி மூலம் நாட்டுக்கு அர்ப்பணித்தார். ICGS சாஷே கப்பலானது கடற்கரையிலிருந்து கடலில் தொலை தூரத்திற்கு கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும் கப்பல்களின் வரிசையில் முதல் கப்பலாகும்.

❖ முழுவதும் உள்நாட்டிலேயே அதாவது கோவா கப்பல் கட்டுந்தளத்தில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் –பட்ட இக்கப்பலில், உலகத்தரம்வாய்ந்த திசைகாட்டும் & தொடர்பியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டு உள்ளன. மொத்தம் 150 கப்பல்கள் மற்றும் படகுகள் மற்றும் 62 வானூர்திகள் என்னும் மைல்கல்லை இந்திய கடலோர காவல்படை எட்டியுள்ளது.

**10. "GOAL (Going Online as Leaders)" என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?**

**அ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் ☑**

ஆ. MSME அமைச்சகம்

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

- பழங்குடியினர் நல அமைச்சகம் பேஸ்புக்குடன் இணைந்து உருவாக்கியுள்ள "GOAL" (ஆன்லைனில் தலைவர்களாக செயல்படுதல்) என்னும் திட்டத்தை பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா தொடங்கிவைத்தார். GOAL திட்டமானது பழங்குடியின இளையோர்கட்கு டிஜிட்டல் முறையில் வழிகாட்டுதலைத் தரும்வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் முறையில் செயல்படும் இந்தத் திட்டமானது பழங்குடியின இளைஞர்களிடையே மறைந்துள்ள திறமைகளை வெளிப்படுத்தும் ஓர் உந்துசந்தியாக விளங்கும். மேலும், இது அவர்களின் ஆளுமையை வளர்ப்பதோடு அவர்களது சமூகத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கும் உதவும் வகையிலிருக்கும்.

- இந்தத்திட்டத்தின்கீழ், பழங்குடியின இளையோர்கள் 5000 பேர் (அவர்கள் "வழிகாட்டப்படுபவர்கள்" என்றழைக்கப்படுவர்) பல்வேறு துறைகள் & பிரிவுகளைச்சேர்ந்த நிபுணர்களால் ("வழிகாட்டுபவர்கள்" என்றழைக்கப்படுவர்) பயிற்சிபெறும் சிறந்த வாய்ப்பைப் பெறுவார்கள். வழிகாட்டப்படும் இளைஞர்கள் இரண்டு நபருக்கு ஒரு வழிகாட்டுபவர் இருப்பார். தொலைதூரப்பகுதிகளில் உள்ள பழங்குடியின இளையோர்கள், டிஜிட்டல் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி தங்கள் அவாக்கள், கனாக்கள் மற்றும் திறமைகளைத் தங்களுக்கு வழிகாட்டுபவருடன் பகிர்ந்துகொள்வார்கள்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளர்களின் தகவல் பரிமாற்றத்திற்கு ஏதுவாக உதடு மறைவற்ற முகக்கவசங்கள் தமிழ்நாட்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகை முகக்கவசங்கள், காதுகேளாதோர்கள் பிறருடன் தகவல் பரிமாற்றம் செய்யும்போது பிறரின் உதடு அசைவின்மூலம் உரையாடலை தெளிவாக அறிவதற்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்திய அரசுடனும் மேற்கு வங்க மாநில அரசுடனும் $145 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பன்னாட்டு அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி

**இ. ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி ☑**

ஈ. பன்னாட்டு செலவாணி நிதியம்

❖ ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியானது (AIIB) இந்திய அரசு மற்றும் மேற்கு வங்க மாநில அரசாங்கத்துடனான $145 மில்லியன் அமெரிக்க டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. மேற்கு வங்க மாநிலத்தின் தாமோதர் பள்ளத்தாக்கு பாசனப்பகுதியில் நீர்ப்பாசன சேவைகள் மற்றும் வெள்ளநீர் மேலாண்மை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு, $413 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகும். இது, மாநிலத்தின் ஐந்து மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 27 இலட்சம் விவசாயிகளுக்கு பயனளிக்கும்.

**2.அண்மையில் இந்திய கடற்படையில் பணிக்கு சேர்க்கப்பட்ட, 'INLCU L57' என்ற கப்பலைக்கட்டிய கப்பல் கட்டுந்தளம் எது?**

அ. L & T கப்பல் கட்டுந்தளம்

**ஆ. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் ☑**

இ. கொச்சின் கப்பல் கட்டுந்தளம்

ஈ. மசகன் கப்பல் கட்டுந்தளம்

❖ இந்திய கடற்படையில், "INLCU L57" என்ற நவீன இரக கப்பல் சேர்க்கப்பட்டது. இதற்காக, அந்தமான் & நிகோபார் தலைநகரம் போர்ட் பிளேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய கடற்படைத்தலைவர் Lt.Gen P S இராஜேஸ்வர் தொடங்கிவைத்தார்.

❖ அந்தமானில் இயக்கப்பட்ட, "INLCU L57" இந்திய கடற்படையில் இணைக்கப்படும் ஏழாவது கப்பலாகும். இது, முழுக்க முழுக்க இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல்கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்டது. இந்தியாவிலேயே முழுதும் உற்பத்தி செய்யப்பட்டது. இக்கப்பல் ஆயுதங்கள், தளவாடங்கள், பீரங்கிகளை ஏற்றிச்செல்வதற்கும் போர்க்காலங்களில் பயன்படுத்து –வதற்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தமானில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்த வகையான கப்பல்கள் கடல்சார் தேடுதல் பணிகள், பேரிடர்க் காலங்களில் பாதிக்கப்பட்டோரை அப்புறப்படுத்தி, பாதுகாப்பாக கொண்டுசெல்வது ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும்.

**3.அண்மையில், பாதுகாப்பு அமைச்சகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, "பாதுகாப்பு சோதனை உட்கட்டமைப்பு திட்டம்" செயல்படுத்தப்படுவதற்கான கால அளவு என்ன?**

அ. 3 ஆண்டுகள்

**ஆ. 5 ஆண்டுகள் ☑**

இ. 7 ஆண்டுகள்

ஈ. 10 ஆண்டுகள்

5

- ❖ உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் வானூர்தி உற்பத்திக்கும் ஊக்கமளிக்கும் வகையில், ₹400 கோடியில் "பாதுகாப்பு சோதனை உட்கட்டமைப்புத் திட்டத்தை" செயல்படுத்துவதற்கு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. இராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார். இதன்படி, உயர்தரமான பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத்திட்டம், ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

- ❖ இதன்படி, தனியார் பங்களிப்புடன் 6–8 வகையான சோதனை வசதிகள் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டம் உள்நாட்டிலேயே இராணுவப்பாதுகாப்பு சோதனை முறைக்கு வழியமைக்கும். அதன்பலனாக, இராணுவ உதிரி பாகங்களின் இறக்குமதி கணிசமாகக் குறையும். நாடு முழுக்க தற்சார்புடன் திகழும்.

**4. "Psycho–Social Impact of Pandemic & Lockdown & How to Cope With" என்ற தலைப்பில் கொரோனா ஆய்வுத்தொடரை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ. NCERT – தேசிய கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கழகம்

ஆ. CBSE – மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்

**இ. NBT – தேசிய நூல் அறக்கட்டளை ☑**

ஈ. IGNOU – இந்திரா காந்தி தேசிய பல்கலைக்கழகம்

- ❖ கொரோனா ஆய்வுகள் தொடரின்கீழ், தேசிய நூல் அறக்கட்டளை (NBT) வெளியிட்டுள்ள 7 நூல்களின் தொகுப்பின் அச்சு மற்றும் மின்–நூல்களை மத்திய மனிதவள அமைச்சர் ரமேஷ் போக்ரியால் நிஷாங்க் இணையவழியில் வெளியிட்டார்.

- ❖ 7 உளவியல் நிபுணர்கள், ஆலோசகர்கள் ஆகியோர் அடங்கிய கல்விக் குழுவை இந்திய தேசிய புத்தக அறக்கட்டளை (NBT) உருவாக்கியிருந்தது. கொரோனாவிற்கு பிந்தைய காலத்தின் தேவைகளுக்காக அனைத்து வயதினருக்கும் பொருந்தும்படியான பொருத்தமான நூல்களை வழங்குவது அதுகுறித்து ஆவணப்படுத்துவது என்பதற்காகவே இக்கொரோனா ஆய்வுத்தொடரை தேசிய புத்தக அறக்கட்டளை வடிவமைத்திருந்தது. "பெருந்தொற்றின் உளவியல் ரீதியான, சமூக ரீதியான தாக்கம் மற்றும் அதை எவ்வாறு எதிர்கொள்வது" என்பதில் கவனஞ்செலுத்தும் நூல்களின் முதல் துணைத்தொடராகும் இது.

**5. ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ், கிராமப்புற குடிநீர் வழங்கலில் உணரி–அடிப்படையிலான (sensor–based) சேவை விநியோக கண்காணிப்பு முறையை செயல்படுத்தவுள்ள மாநில அரசு எது?**

அ. பஞ்சாப்

ஆ. இராஜஸ்தான்

**இ. குஜராத் ☑**

ஈ. மத்திய பிரதேசம்

- ❖ நீராதார இயக்கத்தின்கீழ் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் துறையின் சேவை வழங்கும் முறையை கண்காணிக்க தொலையுணர் கருவி (sensor) அடிப்படையிலான முறையை செயல்படுத்த குஜராத் தயாராகியுள்ளது. சோதனை அடிப்படையில், ஏற்கனவே மாநிலத்தில் உள்ள 2 மாவட்டங்களில் இந்த முறை பின்பற்றப்பட்டுவருகிறது. இதன்படி, குடிநீர் விநியோக செயற்பாடுகள் கண்காணிக்கப்படுகிறது.

- அதாவது, கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் வழக்கமாக போதுமான அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறதா? மற்றும் குறிப்பிட்ட தரத்துடன் விநியோகம் செய்யப்படுகிறதா? என்பது குறித்து நீண்டகால அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. 2020–21ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிராமப்புறங்களில் 11.15 இலட்சம் குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்க குஜராத் திட்டமிட்டுள்ளது.

**6.அண்மையில் காலமான தேபேஷ் ராய், எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?**

**அ. இலக்கியம் ☑**

ஆ. அரசியல்

இ .விளையாட்டு

ஈ. வணிகம்



- மூத்த பெங்காலி எழுத்தாளர் தேபேஷ் ராய் தனது 84ஆம் வயதில் அண்மையில் காலமானார். பல்வேறு வங்காள மொழி நாளிதழ்களில் தீவிரமாக கட்டுரைகளை எழுதி வந்த இவர், தாராளவாதிகள் மீதான தாக்குதலுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றுள்ளார். "டீஸ்டா பரேர் பிரிட்டான்டோ" என்ற அவரது புதினத்துக்காக அவருக்கு சாகித்திய அகாதாமி விருது வழங்கப்பட்டது. "போரிசேலர் ஜோகன் மொண்டல்", "மனுஷ் குன் கோரே கெனோ" மற்றும் "சமை அசமயர் பிரிட்டாண்டோ" உள்ளிட்டவை அவரது புகழ்பெற்ற படைப்புகளாம்.

**7.பொருளாதார ஆதரவுத்தொகுப்பில், கடல்சார் & உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுக்கென அறிவிக்கப்பட்ட திட்டத்தின் பெயரென்ன?**

**அ. பிரதமர் மத்ஸய சம்பதா யோஜனா ☑**

ஆ. பிரதமர் சமுத்திர சம்பதா திட்டம்

இ. பிரதமர் மச்லி சம்பதா யோஜனா

ஈ. பிரதமர் சமுத்திர சம்ரிதி யோஜனா



- மத்திய அமைச்சரவை பிரதமரின் மத்ஸய சம்பதா திட்டத்தை (PMMSY) நடைமுறைப்படுத்த அனுமதி அளித்துள்ளது. இந்தியாவில் மீன்வளத்தொழிலில் நீடித்த மற்றும் பொறுப்புடைமையான வளர்ச்சிமூலம் நீலப்புரட்சியை ஏற்படுத்துவதற்கான இத்திட்டத்தில் இரண்டு முக்கியமான கூறுகள் உள்ளன. அவை., மத்திய பிரிவுத் திட்டம் மற்றும் மத்திய நிதியுதவித்திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தின் மொத்த முதலீட்டு மதிப்பு ₹20,050 கோடியாகும்.

- இந்தத் திட்டத்தின் செயலாக்க காலம் ஐந்தாண்டுகளாகும். அதாவது இந்தத் திட்டமானது 2020–2021 நிதியாண்டிலிருந்து 2024–2025 நிதியாண்டு வரை நடைமுறைப்படுத்தப்படும்.

**8. 'Operation Greens' என்பது எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு திட்டமாகும்?**

அ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

**ஆ. உணவுப் பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகம் ☑**

இ. MSME அமைச்சகம்



ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

❖ உணவுப் பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின்கீழ், கடந்த 2018ஆம் ஆண்டில் 'ஆபரேஷன் கிரீன்ஸ்' அறிமுகப்படுத்தப்பட்டது. அண்மைய பொருளாதார ஆதரவுத் தொகுப்பில், நாடு முழுவதும், அனைத்து காலங்களிலும் TOP பயிர்கள் என அழைக்கப்படும் தக்காளி (T), வெங்காயம் (O), உருளைக் கிழங்கு (P) ஆகியவற்றின் விலை ஏற்றத்தாழ்வின்றி கிடைப்பதை உறுதி அத்திட்டமானது அனைத்து பழம், காய்கறிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. மேலும், போக்குவரத்துக்கு 50% மானியமும், குளிர் சேமிப்பகங்கள் உட்பட சேமிப்பகங்களுக்கு 50% மானியமும் வழங்கப்படும்.

**9.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற இராபர்டோ அசெவெடோ, எந்தப்பன்னாட்டு அமைப்பின் தலைவர்?**

அ. பன்னாட்டு செலவாணி நிதியம்

ஆ. உலக வங்கி

**இ. உலக வர்த்தக அமைப்பு ☑**

ஈ. ஐக்கிய நாடுகள் அவை

❖ உலக வர்த்தக அமைப்பானது சமீபத்தில் அதன் தலைமை இயக்குநர் இராபர்டோ அசெவெடோவை 2020 ஆக.31 அன்று தனிப்பட்ட காரணங்களுக்காக பதவி விலக்குவதாக அறிவித்தது. ஜெனீவாவைச் சார்ந்த உலக வர்த்தக அமைப்பு (WTO) கடந்த 1995ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இவ்வமைப்பின் நிறுவு உறுப்பினர்களுள் இந்தியாவும் ஒன்றாகும். பன்னாட்டு ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளுக்கான விதிகளை உருவாக்குவதும், தடைகளை குறைப்பதன்மூலம் பன்னாட்டு வர்த்தகத்தை ஒழுங்குபடுத் –துவதுமே உலக வர்த்தக அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

**10. "Families in Development: Copenhagen & Beijing + 25" என்பது ஐ.நா அவையால் கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?**

**அ. பன்னாட்டு குடும்பங்கள் நாள் ☑**

ஆ. பன்னாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நாள்

இ. பன்னாட்டு புலம்பெயர்ந்தோர் நாள்

ஈ. பன்னாட்டு புலம்பெயர்ந்த குடும்பங்களின் நாள்

❖ உலகெங்கிலும் ஒவ்வோர் ஆண்டும் மே.15 அன்று ஐ.நா அவையால் பன்னாட்டு குடும்பங்கள் நாள் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டில் (2020) இந்நாள், 'Families in Development: Copenhagen & Beijing + 25" என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டு (2020) கோபன்கேகன் பிரகடனம் மற்றும் பெய்ஜிங் செயல்தளத்தின் 25ஆவது ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. பன்னாட்டுச் சமூகத்தால் குடும்பங்களுடன் இணைந்திருப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்காக கடந்த 1993ஆம் ஆண்டில் ஐ.நா பொது அவையால் இந்நாள் அறிவிக்கப்பட்டது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் சமீபத்தில் உருவாக்கப்பட்ட NMIS என்ற இணையவழி முகப்புப்பக்கத்தில், 'M' என்பது எதைக் குறிக்கிறது?**



அ. Maintenance

**ஆ. Migrant ☑**

இ. Ministry

ஈ. Movement

❖ புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நகர்வுகுறித்த தகவல்களைப்பதிவுசெய்யவும், மாநிலங்களில் சிக்கித் தவித்துவரும் அவர்கள் எளிதாக இடம்பெயரவும் உதவும் வகையில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் புலம்பெயர் தொழிலாளர் குறித்த தேசிய இணையவழி பதிவேட்டை (National Migrant Information System) உருவாக்கியுள்ளது. இந்த இணையதளம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்த தகவல்களை மைய அளவில் சேகரிக்கும் என்பதோடு அவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு எளிதாக செல்வதற்கு உதவிடும் வகையில் மாநிலங்களுக்கிடையிலான தகவல்பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கும் வழிவகுக்கும்.

**2.பன்னாட்டு ஒளி நாள் (International Day of Light) கொண்டாடப்படுகிற தேதி எது?**

International Day of Light 16 May

அ. மே 15

**ஆ. மே 16 ☑**

இ. மே 17

ஈ. மே 18

❖ நமது அன்றாட வாழ்வில் ஒளியின் பங்கைச் சிறப்பிக்கும் விதமாக ஐ.நா கல்வி, அறிவியல் & கலாசார அமைப்பானது (UNESCO) மே.16 அன்று பன்னாட்டு ஒளி நாளைக்கொண்டாடியது. நமது வாழ்வில் ஒளி அடிப்படையான தொழில்நுட்பங்களின் முக்கியப்பங்குகுறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும், UNESCO'இன் கல்வி, சமத்துவம் மற்றும் அமைதி ஆகிய இலக்குகளை அடையவும் உதவும் அறிவியல், தொழில்நுட்பம், கலை & கலாசாரத்தை உயர்த்துவதையும் இந்நாள் குறிக்கோளாகக்கொண்டுள்ளது. கடந்த 1960ஆம் ஆண்டில், புகழ்மிக்க இயற்பியலாளரும் பொறியாளருமான தியடோர் மைமனால், முதன்முதலாக லேசர்கற்றை உருவாக்கப்பட்டதன் நினைவையும் இந்நாள் குறிக்கிறது.

**3.அண்மையில், சமூக–ஊடக நிறுவனமான பேஸ்புக்கால் வாங்கப்பட்ட GIF தயாரிப்பு மற்றும் பகிர்வு வலைத்தளம் எது?**

GIPHY

அ. Gifmaker **ஆ. Giphy ☑**

இ. Easygif ஈ. Tenor

❖ சமூக ஊடக நிறுவனமான பேஸ்புக் அண்மையில் பிரபலமான GIF தயாரிப்பு மற்றும் பகிர்வு வலைத் தளமான GIPHY'ஐ வாங்கியது. பேஸ்புக் தனது புகைப்பட பகிர்வு செயலியான இன்ஸ்டாகிராமுடன் GIF நூலகத்தை ஒருங்கிணைக்க திட்டமிட்டுள்ளது. இணையத்தில் மிகவும் பிரபலமான GIF தயாரிப்பு &

பகிர்வு தளங்களில் ஒன்றான GIPHY, பயனர்கள் GIF'களை உருவாக்க, பகிர மற்றும் மறுவாக்கம் செய்ய அனுமதிக்கிறது. ஆப்பிள், டுவிட்டர், பின்ட்ரெஸ்ட் மற்றும் ரெடிட் உள்ளிட்ட பல்வேறு தளங்கள் GIF'களை வழங்க GIPHY'இன் API'ஐப் பயன்படுத்துகின்றன.

**4.நாடு முழுவதும் மே.16 அன்று சுகாதார அமைச்சகத்தால் அனுசரிக்கப்படுகிற சிறப்பு நாள் எது?**



அ. தேசிய இரத்த சோகை நாள்

**ஆ. தேசிய டெங்கு நாள் ☑**

இ. தேசிய உடல்குன்றும் நோய் நாள்

ஈ. தேசிய உடல் பருமன் நாள்

❖ ஒவ்வோர் ஆண்டும் மே.16 அன்று மத்திய சுகாதார அமைச்சகம் நாடு முழுவதும் தேசிய டெங்கு நாள் என அனுசரிக்கிறது. டெங்கு என்பது ஒரு வைரஸ் நோயாகும், இது ஏடிஸ் ஏஜிப்தி எனப்படும் ஒரு குறிப்பிட்ட கொசு கடிப்பதால் பரவுகிறது. இது பொதுவாக மழைக்காலங்களில் பரவுகிறது. இந்நோயைத் தடுப்பதற்காக பின்பற்றவேண்டிய நடவடிக்கைகளின் பட்டியலை மத்திய சுகாதார அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டது.

**5.இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 36ஆவது திருத்தம், எந்தப் பிராந்தியத்தை இந்தியாவின் முழுமையான மாநிலமாக மாற்றியது?**



அ. மணிப்பூர்

**ஆ. சிக்கிம் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. மிசோரம்

❖ சிக்கிம் பிரதமர் இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த 1975ஆம் ஆண்டில் சிக்கிமை இந்திய மாநிலமாக மாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தார். இதற்காக சிக்கிமில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 97.5% மக்கள் முடியாட்சியை ஒழிக்க வாக்களித்தனர். சிக்கிம், 1975 மே.16 அன்று இந்திய ஒன்றியத்தின் 22ஆவது மாநிலமாக மாறியது. இந்திய அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 36ஆவது திருத்தச்சட்டம் சிக்கிமை இந்தியாவின் முழுமையான மாநிலமாக ஆக்கியதோடு அரசியலமைப்பின் முதல் அட்டவணையில் அதன் பெயரையும் சேர்த்தது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், அம்மாநிலம், மே.16'ஐ சிக்கிம் மாநில நாளாகக் கொண்டாடிவருகிறது.

**6.சமீபத்திய பொருளாதார ஆதரவுத்தொகுப்பில், இந்தியா உலகளாவிய MRO மையமாக மாறப்போவதாக அறிவிக்கப்பட்டது. இதன் பின்னணியில், MRO தொடர்புடைய துறை எது?**



அ. கல்வித்துறை

**ஆ. வானூர்தித் துறை ☑**

இ .மின்துறை

ஈ. கனிம துறை

- அண்மைய பொருளாதார ஆதரவுத்தொகுப்பில், இந்தியாவை வானூர்திகளுக்கான உலகளாவிய பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் முழுமையான சோதனை (MRO) மையமாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக நிதியமைச்சர் அறிவித்தார். விமானக்கூறு பழுதுபார்ப்பு மற்றும் விமான வெளிக்கூடு பராமரிப்பு ஆகியவை மூன்றாண்டுகளில் ₹800 கோடியிலிருந்து ₹2,000 கோடியாக அதிகரிக்கவுள்ளதால், இந்தியா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முடிவுசெய்துள்ளது.

- உலகின் முக்கிய இயந்திர உற்பத்தியாளர்கள், எதிர்காலத்தில் இந்தியாவில் இயந்திர பழுதுபார்க்கும் வசதிகளை அமைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பொது–தனியார் கூட்டு (PPP) அடிப்படையில் மேலும் ஆறு வானூர்தி நிலையங்களை ஏலம்விடவுள்ளதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

**7.பொருளாதார ஆதரவுத்தொகுப்பின் ஒருபகுதியாக, எவ்வகை ஆட்சிப்பகுதிகளில் அமைந்துள்ள மின்சார விநியோக நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படவுள்ளன?**



அ. மலையக மாநிலங்கள்

ஆ. வடகிழக்கு மாநிலங்கள்

**இ. யூனியன் பிரதேசங்கள் ☑**

ஈ. கடலோர மாநிலங்கள்

- பொருளாதார ஆதரவுத்தொகுப்பின் ஒருபகுதியாக, யூனியன் பிரதேசங்களில் உள்ள மின் விநியோக நிறுவனங்கள் (DISCOM) தனியார்மயமாக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் முன்மொழிந்துள்ளார். தற்போதைய நிலவரப்படி, ரிலையன்ஸ் உட்கட்டமைப்பு நிறுவனத்தின் BSES மற்றும் TATA பவர் தில்லி விநியோகம் ஆகிய தனியார் DISCOM'களைக்கொண்ட ஒரே யூனியன் பிரதேசம் தில்லி ஆகும். முன்னதாக, மின்சாரச்சட்டம், 2003'இன் வரைவு திருத்தங்கள் அறிவிக்கப்பட்டன. அதில், மின்சார விநியோகத்தில் தனியார் பங்களிப்புக்கான முன்மொழிவு இருந்தது குறிப்பிடத்தக்கது.

**8.அமைதியாக ஒன்றிணைந்து வாழ்வதற்கான பன்னாட்டு நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ. மே 15

**ஆ. மே 16 ☑**

இ. மே 17

ஈ. மே 18

- பன்னாட்டுச் சமூகத்தினரிடையே அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் ஒற்றுமையை ஊக்குவிப்பதற்காக ஐ.நா பொது அவை மே.16ஆம் தேதி அமைதியாக ஒன்றிணைந்து வாழ்வதற்கான பன்னாட்டு நாள் என அறிவித்தது. ஒவ்வோர் ஆண்டும், மே.16 அன்று இந்தச் சிறப்பு நாள் கொண்டாடப்படுகிறது. 2000ஆம் ஆண்டு, 'அமைதி கலாசாரத்திற்கான பன்னாட்டு ஆண்டு' என்றும் 2001–2010 வரையிலான தசாப்தம் 'உலக குழந்தைகளுக்கான அமைதி மற்றும் வன்முறையற்ற கலாசாரத்திற்கான பன்னாட்டு தசாப்தம்' என்றும் அறிவிக்கப்பட்டது.

**9.நாட்டில் டிஜிட்டல் முறை கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில், இந்திய அரசாங்கத்தால் அண்மையில் தொடங்கப்பட்ட திட்டத்தின் பெயரென்ன?**



அ. வித்யா பாரதி

ஆ. PM e-வித்யா ☑

இ. பதே பாரத்

ஈ. படி இந்தியா

❖ நாட்டில் டிஜிட்டல் முறை கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக, ஆதரவுத்தொகுப்பின் ஒருபகுதியாக, மத்திய நிதியமைச்சர், 'PM e-வித்யா' என்ற திட்டத்தை தொடங்கினார். இந்த ஒருங்கிணைந்த திட்டத்தில் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்கும் தரமான மின்நூல்களை வழங்கும் DIKSHA (ஒரு நாடு – ஒரு டிஜிட்டல் தளம்) தளம்; 1 முதல் 12 வரை ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு பிரத்யேக கல்வி அலைவரிசை; சமூக வானொலி மற்றும் CBSE'இன் ஷிக்ஷா வாணி கருத்தொலி ஆகியவை அடங்கும். டிஜிட்டல் முறையில் அணுகக்கூடிய தகவலமைப்பில் (DAISY) உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளு–க்கான கல்விசார் தகவல்களும் இதிலடங்கும்.

**10. 2020 மே 17 அன்று கொண்டாடப்பட்ட உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Connect 2030: ICTs for the Sustainable Development Goals (SDGs) ☑

ஆ. Information and Communication embracing the world

இ. ICTs deployed during the pandemic

ஈ. ICTs: Vital for inclusive development

❖ இணையம் மற்றும் பிற தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாடுகளின் சாத்தியக் கூறுகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும், அவை சமூகம் மற்றும் பொருளாதாரத்திற்கு என்ன சேர்ப்பிக்கின்றன என்பது குறித்தும், டிஜிட்டல் வெளிக்கு அவை எவ்வாறு பாலமாக செயல்படுகின்றன என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி ஒவ்வோர் ஆண்டும் மே.17 அன்று உலகம் முழுவதும் உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக நாள் கொண்டாடப்படுகிறது.

❖ "Connect 2030: ICTs for the Sustainable Development Goals (SDGs)" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். முதல் உலக தந்தி மாநாட்டை நினைவுகூரும் விதமாகவும், பன்னாட்டு தொலைத்தொடர்பு சங்கம் உருவானதைக் குறிக்கும் விதமாகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.பிரதம மந்திரி பெஞ்சமின் நேதன்யாகு மற்றும் பென்னி காண்ட்ஸ் தலைமையிலான புதிய அரசாங்கம் அமையப்பெற்ற நாடு எது?**



அ. ஈரான்


ஆ. ஓமன்

**இ. இஸ்ரேல் ☑**

ஈ. ஈராக்

❖ இஸ்ரேல் நாடாளுமன்றம் அண்மையில் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு மற்றும் பென்னி காண்ட்ஸ் தலைமையிலான தனது புதிய அரசாங்கத்தை அமைத்தது. இஸ்ரேல், 500 நாட்களுக்கு மேலாக ஒரு நிலையான அரசாங்கமின்றி செயல்பட்டுவந்தது. இஸ்ரேலின் சட்டமியற்றுபவர்கள் நேதன்யாகு – பென்னி காண்ட்ஸின் கூட்டணிக்கு ஒப்புதல் அளித்துள்ளனர். பென்னி காண்ட்ஸ், நேதன்யாகுவின் முன்னாள் போட்டியாளராக இருந்தார். இந்த நடவடிக்கை, நாட்டின் மிகநீண்ட அரசியல் நெருக்கடியை முடிவுக்குக்கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**2.அண்மையில் கண்டறியப்பட்ட எந்த நுண்ணுயிரிக்கு டுவிட்டரின் பெயர் வழங்கப்பட்டுள்ளது?**



அ. பாக்டீரியா

ஆ. வைரஸ்

**இ. பூஞ்சை ☑**

ஈ. புரோட்டோசோவா

❖ மைக்கோ கீஸ் இதழில் அண்மையில் வெளியான ஓர் ஆய்வின்படி, ஆராய்ச்சியாளர்கள் டுவிட்டரில் ஒரு மரவட்டையின் படத்தைக் கண்டனர். அவ்வுயிரினத்தின் தலைக்கருகே சிறுசிறு புள்ளிகளை அவர்கள் கவனித்தனர். அதுபோன்றதொன்றை அமெரிக்காவின் மரவட்டைகளில் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை கண்டதில்லை.

❖ புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஒட்டுண்ணிப் பூஞ்சைக்கு, தற்போது, அதிகாரப்பூர்வமாக இலத்தீன் மொழியில் '*Troglomyces twitteri*' என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது. இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தில் காணப்படும் சில அமெரிக்க மரவட்டைகளில் இதுபோன்ற பூஞ்சையின் பல்வேறு மாதிரிகளை இந்தக்குழு ஏற்கனவே கண்டறிந்துள்ளது.

**3. COVID–19 தொற்றுநோய்க்குப்பிறகு மீண்டும் தொடங்கும் முதல் போட்டியான, 'பண்டெஸ்லிகா', எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?**

அ. கூடைப்பந்து

**ஆ. கால்பந்து ☑**

இ. மல்யுத்தம்

ஈ. ஹாக்கி

BUNDESLIGA

❖ ஜெர்மனியின் கால்பந்து அமைப்பான பண்டெஸ்லிகா, COVID–19 தொற்றுநோய்க்குப் பிறகு மீண்டும் தொடங்கும் முதல் போட்டியாகும். ஜெர்மன் கால்பந்து சங்கம், இந்தப்பருவத்தை ஜூன் 30'க்குள் முடிக்க திட்டமிட்டுள்ளது. போட்டிகளை நடத்துவதற்கான ஒப்புதலை ஜெர்மன் அரசாங்கம் பண்டெஸ்லிகா கூட்டமைப்பிற்கு அளித்துள்ளது. மார்ச்.13 அன்று, COVID–19 தொற்றுநோய் காரணமாக பண்டெஸ்லிகா போட்டிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன. போட்டிகள் அனைத்தும் பார்வையாளர்கள் எவருமின்றி நடத்தப்படும். மேலும் அவை தொலைக்காட்சிகளில் நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளன.

**4.அண்மையில், வங்காள விரிகுடாவில் உருவான அதிதீவிர சூறாவளியின் பெயரென்ன?**

அ. பானி

**ஆ. உம்பன் ☑**

இ. மகா

ஈ. நிசர்கா



❖ அண்மையில் வங்காள விரிகுடாவில் உருவான அதிதீவிர சூறாவளிக்கு, 'உம்பன்' எனப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பெயரை தாய்லாந்து வழங்கியுள்ளது. 'வானம்' என்பது அதன் பொருளாகும். கடந்த பல பத்தாண்டுகளில் இந்தியா எதிர்கொள்ளும் இரண்டாவது அதிதீவிர சூறாவளி இது எனக் கூறப்படுகிறது. தேசிய பேரிடர் மீட்புப்படையின் கருத்துப்படி, சாதாரண இந்தச் சூறாவளி கடுமையான அதிதீவிர சூறாவளியாக வலுவடைந்ததால், கிட்டத்தட்ட 1.1 மில்லியன் பொதுமக்கள் பாதிக்கப்படுவர். கடலோர ஒடிசா, மேற்கு வங்கம் மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் முழுவதும் கடுமையான மழை மற்றும் அதிவேகம் கொண்ட காற்று இதன்சமயம் இருந்தது.

**5. 'இராஜீவ் காந்தி கிசான் நியாய யோஜனா' என்பது எந்த இந்திய மாநிலத்தின் முன்னெடுப்பாகும்?**

அ. மணிப்பூர்

**ஆ. சத்தீஸ்கர் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. மிசோரம்

❖ இந்தியாவின் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் நினைவுநாளான மே.21 அன்று சத்தீஸ்கர் மாநில அரசு தனது இலட்சிய, 'இராஜீவ் காந்தி கிசான் நியாய யோஜனா'வை தொடங்கியது. இந்தத் திட்டம், மாநிலத்தின் கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும், COVID–19 தொற்றுநோயால் ஏற்பட்ட மந்தநிலையிலிருந்து அதனை மீட்பதற்குமான நோக்கத்தைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நேரடி பயன் பரிமாற்றத்தின்மூலம் ₹5100 கோடியை விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் அந்த மாநில அரசு செலுத்தவுள்ளது. நெல், சோளம் மற்றும் கரும்புசாகுபடி செய்த விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ₹10,000 வழங்கப்படும் எனவும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

**6.எவரின் தலைமையிலான நிபுணர்கள் குழுவின் பாதுகாப்பு சீர்திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது?**

அ. Lt.Gen D B ஷேகத்கர் ☑

ஆ. Lt.Gen சையத் அட்டா ஹஸ்னைன்

இ .Lt.Gen சுரிந்தர் சிங்

ஈ .Lt.Gen குர்மித் சிங்



❖ எல்லைப்புறக்கட்டமைப்பு தொடர்பாக Lt.Gen D B ஷேகத்கர் (ஓய்வு) தலைமையிலான நிபுணர்கள் குழு அளித்த மூன்று முக்கியப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு அமல்படுத்தியுள்ளது. எல்லைப்புறப் பகுதிகளில் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில், சாலைகள் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துதல், தொடர்பான பரிந்துரைகளாக இவை உள்ளன.

❖ எல்லைப்புறக்கட்டமைப்பு உருவாக்குதல் தொடர்பான விசயத்தில், எல்லைப்புற சாலைகள் அமைப்பின் அதிகபட்சத் திறனுக்கும் அதிகமான சாலை அமைக்கும் பணிகளை வெளிப்பணி ஒப்படைப்புமூலம் செயல்படுத்தலாம் என்று, அக்குழு அளித்த பரிந்துரையை அரசு அமல் செய்துள்ளது. ₹100 கோடிக்கும் மேலான மதிப்புள்ள அனைத்துப் பணிகளையும் செயல்படுத்துவதற்கு பொறியியல் கொள்முதல் ஒப்பந்த நடைமுறையைக் கட்டாயமாகப் பின்பற்றவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


**7. 2020 மே.17 அன்று அனுசரிக்கப்பட்ட உலக உயர் இரத்தவழுத்த நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Measure Your Blood Pressure, Control It, Live Longer ☑

ஆ. Eliminate Hypertension

இ. Global Hearts for Hypertension

ஈ. No more risk of Heart-attack




❖ உலக உயர் இரத்தவழுத்த நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.17ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. COVID–19 தொற்றுநோயால் நடப்பாண்டு (2020) உலக உயர் இரத்தவழுத்த நாளின் கொண்டாட்டத்தை 2020 அக்.17ஆம் தேதிக்கு உலக உயர் இரத்தவழுத்த கூட்டமைப்பு மாற்றி வைத்துள்ளது. "Measure Your Blood Pressure, Control It, Live Longer" என்பது நடப்பாண்டு (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். அதீத உயர் இரத்தவழுத்தம் என்றும் அழைக்கப்படுகிற இது மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு மற்றும் குருட்டுத்தன்மை ஆகியவற்றின் அபாயத்தை அதிகரிக்கும் ஒரு தீவிர மருத்துவநிலையாக உள்ளது.

**8.பன்னாட்டு அருங்காட்சியக நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ. மே 15

ஆ. மே 16

இ. மே 17

ஈ. மே 18 ☑



- சமுதாய உயர்வுக்கு அருங்காட்சியகத்தின் பங்களிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை பொதுமக்களுக்கு உணர்த்தவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் மே.18ஆம் தேதி அன்று பன்னாட்டு அருங்காட்சியக நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நிகழ்வுகள் அருங்காட்சியகங்களின் பன்னாட்டுப் பேரவையினால் (International Council of Museums, ICOM) ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன.
- "Museums for Equality: Diversity and Inclusion" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். பன்னாட்டு அருங்காட்சியக நாளைக் கொண்டாடும் வகையிலும், COVID–19'க்குப் பிந்தைய கலாசார அமைப்புகள் தொடர்ந்து நீடிப்பது குறித்த உரையாடல்களைத் தொடங்கும் வகையிலும், "அருங்காட்சியகங்களுக்கும், கலாசார வெளிகளுக்கும் புத்தாக்கம் ஊட்டுவது" என்பது பற்றிய இணையவழிக் கருத்தரங்கு ஒன்றுக்கு கலாசாரத் துறை அமைச்சகத்தின் அருங்காட்சியகம் மற்றும் கலாச்சார வெளிகளுக்கான மேம்பாட்டுத்துறை ஏற்பாடு செய்திருந்தது.

**9.கிரிக்கெட் பந்தை மெருகூட்டுவதற்கு, உமிழ்நீர் பயன்படுத்தப்படுவதை தடைசெய்ய பரிந்துரைத்த பன்னாட்டு கிரிக்கெட் கழகக் கிரிக்கெட் குழுவின் தலைவர் யார்?**

அ. மகேலா ஜெயவர்த்தனே

ஆ. ராகுல் டிராவிட்

**இ. அனில் கும்ப்ளே ☑**

ஈ. ஆண்ட்ரூ ஸ்ட்ராஸ்



- COVID–19 தொற்றுநோய்க்கு மத்தியில், பந்தை மெருகூட்டுவதற்கு உமிழ்நீர் பயன்படுத்தப்படுவதை தடை செய்ய, அனில் கும்ப்ளே தலைமையிலான பன்னாட்டு கிரிக்கெட் கவுன்சில் (ICC) கிரிக்கெட் குழு பரிந்துரைத்துள்ளது. ICC கிரிக்கெட் குழுமத்தின் தற்போதைய தலைவராக அனில் கும்ப்ளே உள்ளார். காணொளிக்காட்சி வழியாக ICC மருத்துவ ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், இத்தடையை அக்குழு பரிந்துரைத்தது. ஆயினும், பந்தை மெருகூட்டுவதற்கு வியர்வை பயன்படுத்துவது தடைசெய்யப்படவில்லை என்றும், ஆடுகளத்தில் சுகாதார நடவடிக்கைகள் மேம்படுத்தப்படவேண்டும் என்றும் அக்குழு அறிவித்துள்ளது.

**10. உலக AIDS தடுப்பூசி நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ. மே 15

ஆ. மே 16

இ. மே 17

**ஈ. மே 18 ☑**




- HIV தொற்று மற்றும் எய்ட்ஸை தடுப்பதற்கான தடுப்பூசியின் அவசரத் தேவை குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக ஆண்டுதோறும் மே.18 அன்று உலக எய்ட்ஸ் தடுப்பூசி நாள் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாள், "HIV தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு நாள்" எனவும் அழைக்கப்படுகிறது. ஆர்வலர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிவியலாளர்கள், சமுதாய உறுப்பினர்கள், உடல்நல வல்லுநர்கள் மற்றும் நோயை ஒழிப்பதற்காகவும், பாதுகாப்பான & திறமையான HIV தடுப்புக்கான வழிகளைக் கண்டறியும் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக இந்நாள் உள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்நாட்டின் அமைச்சரவை லிபுலேக், கலாபானி மற்றும் லிம்பியாதுரா ஆகிய இடங்களை உள்ளடக்கிய புதிய அரசியல் வரைபடத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. சீனா

**ஆ. நேபாளம் ☑**

இ. ஆப்கானிஸ்தான்

ஈ. தாய்லாந்து



❖ லிபுலேக், கலாபானி & லிம்பியாதுரா ஆகிய இடங்களை உள்ளடக்கிய புதிய அரசியல் வரைபடத்தை நேபாள நாட்டின் அமைச்சரவை அண்மையில் வெளியிட்டது. நேபாள வெளியுறவு அமைச்சர் பிரதீப் குமார் கியாவாலி, நேபாளத்தின் அதிகாரப்பூர்வ நில எல்லை வரைபடம், விரைவில் நில மேலாண்மை அமைச்சகத்தால் வெளியிடப்படும் என அறிவித்துள்ளார். இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையே உள்ள எல்லைப் பிரச்சனைக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இரு நாடுகளும் கலாபானியை தங்கள் பிரதேசத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கூறிவருகின்றன.

**2.புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக, "சரண் பாதுகா" என்னும் திட்டத்தை தொடங்கியுள்ள இந்திய மாநிலம் எது?**

அ. பஞ்சாப்

ஆ. சத்தீஸ்கர்

**இ. மத்திய பிரதேசம் ☑**

ஈ. உத்தரகண்ட்



❖ புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக, "சரண் பாதுகா" என்னும் திட்டத்தை மத்திய பிரதேச மாநில அரசு தொடங்கியுள்ளது. வெறுங்காலுடன் நடந்துசெல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பாதணிகளை வழங்குவதன்மூலம் அவர்களுக்கு உதவ இது முற்படுகிறது. இந்தூரில் உள்ள ஒரு காவல் நிலையத்திலிருந்து தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், மாநிலம் முழுவதும் மக்களின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. அம்மாநிலத்தில் நிகழ்ந்த பல்வேறு விபத்துகளில், புலம்பெயர் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதை அடுத்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**3.நகரங்களுக்கு வழங்கப்படும் குப்பையில்லா நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீட்டின்கீழ், நாட்டின் எத்தனை நகரங்களுக்கு, "5 நட்சத்திர குப்பையில்லா நகரம்" எனும் அடையாளம் வழங்கப்பட்டுள்ளது?**

அ. ச (4)

**ஆ. சூ (6) ☑**

இ. அ (8)

ஈ. கரு (15)



- 2019–20ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டின்படி, குப்பையில்லா நகரங்களின் நட்சத்திர தகுதிப்பட்டியலை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை (தனிப்பொறுப்பு) அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி வெளியிட்டார். அதன்படி, மொத்தம் 6 நகரங்கள் (அம்பிகாபூர், இராஜ்கோட், சூரத், மைசூரு, இந்தூர், நவி மும்பை) 5 நட்சத்திர தகுதியைப்பெற்றுள்ளன. 698 நகரங்கள் மதிப்பீட்டுக்கு தேர்வு செய்யப்பட்டு, கள மதிப்பீட்டின்படி, 141 நகரங்களுக்கு நட்சத்திர அந்தஸ்து தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- 65 நகரங்கள் 3 நட்சத்திர தகுதியும், 70 நகரங்கள் ஒரு நட்சத்திர தகுதியும் பெற்றுள்ளது. நகரங்களில் குப்பையில்லாத நிலையைப் பராமரிக்கவும், சுற்றுப்புறங்களை சுகாதாரமாக வைத்திருப்பதில் உயர் தரத்தை அடைவதை ஊக்குவிக்கவும் கடந்த 2018 ஜனவரி மாதம் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் இந்தத் தர மதிப்பீட்டுத் திட்டத்தை தொடங்கியது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற எஸ்டோனியா, லத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய மூன்றும் எந்தக் கண்டத்தில் அமையப்பெற்ற நாடுகளாகும்?**




அ. ஆப்பிரிக்கா

ஆ. தென்னமெரிக்கா

**இ. ஐரோப்பா ☑**

ஈ. ஆஸ்திரேலியா

- வட ஐரோப்பாவில் அமைந்துள்ள எஸ்டோனியா, லத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய 3 பால்டிக் நாடுகளும், 'பயணக்குமிழி – Travel Bubble' எனப் பெயரிடப்பட்ட மறு–இணைப்பு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளன. COVID–19 நோய்த்தொற்று காரணமாக அமலிலிருந்த ஊரடங்குக்குப் பிறகு, தங்கள் பொருளாதாரங்களை மீட்டுருவாக்கம் செய்வதற்காக இந்த 3 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இதனை தொடங்கியுள்ளன. குறைந்த மக்கள்தொகை கொண்ட இந்நாடுகள், ஒப்பீட்டளவில் COVID–19 நோய்த் தொற்றால் குறைவாக பாதிக்கப்பட்டுள்ளன.
- குழுவின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் வர்த்தக உறவுகளை புதுப்பிக்கவும், பயணம் மற்றும் சுற்றுலாத் துறையை மறுதொடக்கம் செய்யவும் இந்தப் 'பயணக்குமிழி' அனுமதிக்கும்.

**5.இந்திய நீரமைவு வரைவியலுக்கு ஆற்றிய பங்களிப்புக்காக, யாருக்கு கடந்த ஆண்டுக்கான (2019) அலெக்சாண்டர் டால்ரிம்பிள் விருது வழங்கப்பட்டுள்ளது?**



அ. R K S பதுரியா

**ஆ. வினை பத்வார் ☑**

இ. அசோக் குமார்

ஈ. கிருஷ்ணசாமி நடராஜன்

- இந்திய அரசின் தேசிய நீரமைவு வரைவாளரான துணை கடற்படை அதிகாரி வினய் பத்வாருக்கு 2019ஆம் ஆண்டுக்கான அலெக்சாண்டர் டால்ரிம்பிள் விருது வழங்கப்பட்டுள்ளது. இந்திய நீரமைவு வரைவியல் மற்றும் இந்தியப்பெருங்கடல் பகுதி முழுவதிலும் அவர் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க பங்களிப்புக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ உலகெங்கிலும் உள்ள நீரமைவு வரைவியல், வரைபடவியல் மற்றும் வழிசெலுத்தல் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவதில் பங்காற்றும் நபர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இது முதன்முதலில் 2006ஆம் ஆண்டில் இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகத்தால் ஆதரிக்கப்பட்ட UKHO'வுக்கு (UK நீரமைவு வரைவியல் அலுவலகம்) வழங்கப்பட்டது.

**6.ஜம்மு–காஷ்மீர் நிர்வாகத்தின் அறிவிப்பின்படி, இருப்பிடச்சான்று பெறுவதற்கு அங்கு குறைந்தபட்சமாக எவ்வளவு காலம் வசித்திருக்க வேண்டும்?**

அ. 10 ஆண்டுகள்

**ஆ. 15 ஆண்டுகள் ☑**

இ. 18 ஆண்டுகள்

ஈ. 20 ஆண்டுகள்

15

❖ 2020ஆம் ஆண்டு ஜம்மு–காஷ்மீர் இருப்பிடச் சான்றிதழ் (நடைமுறை) விதிமுறைகளை ஜம்மு–காஷ்மீர் அரசாங்கம் அறிவித்துள்ளது. சான்றிதழ்கோரி விண்ணப்பதாரர் மேல்முறையீட்டு ஆணையத்தை அணுகிய 15 நாளுக்குள்ளாக அவருக்கு சான்று வழங்கப்படும். அதன்படி, ஜம்மு காஷ்மீரில் குறைந்தது 15 ஆண்டுகள் வசித்தவர்கள் அல்லது காஷ்மீரில் ஏழாண்டுகள் படித்து 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியவர்கள் இருப்பிடச் சான்றிதழ் பெறமுடியும். அகில இந்திய பணியில் உள்ளவர்கள், காஷ்மீரில் 10 ஆண்டுகள் பணியாற்றியிருந்தால், அவர்களின் குழந்தைகளும் உள்ளூர்வாசிகளாக கருதப்படுவர்.

❖ தற்போது, மேற்கு பாகிஸ்தானிய ஏதிலிகள், தூய்மைப் பணியாளர்கள் & ஜம்மு–காஷ்மீருக்கு வெளியே திருமணவுறவுகொண்ட பெண்களின் குழந்தைகளும் இருப்பிடச் சான்றுபெற தகுதியுடையவர்கள்.

**7.இந்திய இரயில்வேயின் அதிஆற்றல்வாய்ந்த 12,000 குதிரைத்திறன்கொண்ட மின்சார தொடருந்துப் பொறியை தயாரித்த நிறுவனம் எது?**

அ. ஜெனரல் எலக்ட்ரிக்

**ஆ. ஆல்ஸ்டோம் ☑**

இ. சீமென்ஸ்

ஈ. பாம்பாடியர்



❖ பிகாரில் மாதேபுரா மின்சார இரயில் எஞ்சின் தயாரிப்புத் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட 12000 குதிரைத்திறன்கொண்ட முதல் இரயில் எஞ்சினை இந்திய இரயில்வே செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது. பண்டிட் தீனதயாள் உபாத்யாய இரயில்நிலையத்தில் இது செயல்பாட்டுக்கு வந்தது. இந்தச் சாதனையின்மூலம், அதிஆற்றல் குதிரைத்திறன்கொண்ட தொடருந்துப் பொறிகளை உள்நாட்டிலேயே தயாரிக்கும் வல்லமைகொண்ட ஆறாவது நாடாக இந்தியா இடம்பிடித்துள்ளது.

❖ இதனை பிரெஞ்சு இரயில் போக்குவரத்து நிறுவனமான ஆல்ஸ்டோமும், பீகாரில் உள்ள மாதேபுரா மின்சார இரயில் எஞ்சின் தயாரிப்புத் தொழிற்சாலையும் (MELPL) இணைந்து தயாரித்துள்ளன. MELPL என்பது பிரெஞ்சு நிறுவனமான ஆல்ஸ்டோம் & இந்திய இரயில்வே ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு நிறுவனமாகும்.

**8.இந்திய எஃகு சங்கத்தின் (ISA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ. திலீப் ஊமன் ☑**

ஆ. சஜ்ஜன் ஜிண்டால்

இ. C S வர்மா

ஈ. இலட்சுமி மிட்டல்



❖ இந்திய எஃகு துறையில் மூத்தவரும் ஆர்சலர் மிட்டல் நிப்பான் எஃகு இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரியுமான திலீப் ஊமன், இந்திய எஃகு சங்கத்தின் (ISA) தலைவராக பொறுப்பேற்றுள்ளார். முன்னதாக, TATA எஃகு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் T V நரேந்திரன், ISA தலைவர் பதவியை இராஜிநாமா செய்தார். அவசரகால வாரியக்கூட்டமானது அடுத்த ஈராண்டுகளுக்கு திலீப் ஊமனை தலைவராக ஒருமனதாக நியமிக்க முடிவுசெய்தது.

**9.அண்மைக்கிழக்கில் உள்ள பாலஸ்தீன ஏதிலிகளுக்கான ஐ.நா நிவாரணப்பணி (UNWRA) அமைப்பின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

அ. ஜெனீவா

ஆ. பாரிஸ்

இ. எருசலேம்

**ஈ. அம்மான் ☑**

❖ அண்மைக்கிழக்கில் உள்ள பாலஸ்தீன ஏதிலிகளுக்கான ஐ.நா நிவாரணப்பணி அமைப்பு (UNWRA) என்பது ஓர் ஐ.நா முகமையாமாகும். இது, பாலஸ்தீனிய ஏதிலிகளின் நிவாரணம் மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இதன் தலைமையகம் சோர்டானில் உள்ள அம்மானில் உள்ளது. சமீபத்தில், COVID–19 நெருக்கடிக்கு மத்தியில், ஐ.நா நிவாரணப்பணி அமைப்புக்கு இந்தியா $2 மில்லியன் அமெரிக்க டாலர் உதவியை வழங்கியது.

❖ அம்முகமையின் முக்கிய திட்டங்கள் மற்றும் சேவைகளை (குறிப்பாக கல்வி & உடல்நலம்) ஆதரிக்க இந்நிதி வழங்கப்படுகிறது. இந்தியா, UNWRA'வுக்கான தனது வருடாந்திர பங்களிப்பை 2016'இல் வழங்கிவந்த $1.25 மில்லியன் டாலர்களிலிருந்து 2019'இல் $5 மில்லியன் டாலர்களாக உயர்த்தியது.

**10.டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸஸ் என்பவர் எந்தப் பன்னாட்டு அமைப்பின் தலைவராவார்?**

அ. ஐக்கிய நாடுகள்

ஆ. உணவு & வேளாண் அமைப்பு

**இ. உலக நலவாழ்வு அமைப்பு ☑**

ஈ. உலக வர்த்தக அமைப்பு

❖ உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) தலைமை இயக்குநரான டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸஸ், அண்மையில், COVID–19 தொற்றுநோயைக் கையாள்வதுகுறித்து ஒரு சுயாதீன மீளாய்வை WHO தொடங்கவுள்ளதாக அறிவித்தார். இந்தியா உட்பட 120'க்கும் மேற்பட்ட நாடுகள் மீளாய்வு செய்யக்கோரி ஐரோப்பிய ஒன்றியம் தயாரித்த தீர்மானத்தை ஆதரித்துள்ளன.

# நடப்பு நிகழ்வுகள்

**1.மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, JEE & NEET போன்ற தேர்வுகளுக்கு மாதிரித் தேர்வுகளை வழங்கும் திறன்பேசி செயலியின் பெயரென்ன?**

அ. தேசிய மாதிரித் தேர்வு செயலி

**ஆ. தேசிய தேர்வுப் பயிற்சி ☑**

இ. தேசிய தேர்வு மையம்

ஈ. தேசிய தேர்வு கேந்திரம்

❖ தேசிய தேர்வுப் பயிற்சி (National Test Abhyas) என்னும் புதிய திறன்பேசி செயலியை மத்திய மனித வள மேம்பாடு அமைச்சர், இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' வெளியிட்டார். தேசிய தேர்வு முகமையின் ஆளுகையின் கீழுள்ள, வரவிருக்கும் JEE முதன்மை மற்றும் NEET போன்ற தேர்வுகளில் கலந்து கொள்வோர் மாதிரித்தேர்வுகளை எழுத வசதியாக தேசிய தேர்வு முகமையால் இச்செயலி வடிவமைக்–கப்பட்டது. இந்தச் செயலியை, தேசிய தேர்வு முகமை உருவாக்கியுள்ளது. தேர்வுகளை எந்தவித கட்டணமும் இல்லாமல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**2.தேசிய வேளாண் & ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ. கோவிந்தராஜூலு சிந்தலா ☑**

ஆ. அஜய் தியாகி

இ. சுபாஷ் சந்திர குந்தியா

ஈ. சந்தோஷ் குமார் கங்வார்

❖ தேசிய வேளாண் & ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) தலைவராக கோவிந்தராஜுலு சிந்தலாவை இந்திய அரசு நியமித்துள்ளது. அவர் ஓய்வுபெறும் காலமான 2022 ஜூலை வரையிலான அடுத்த இரு ஆண்டுகளுக்கு அவரை நியமித்து மத்திய அமைச்சரவை நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், NABARD வங்கியின் துணை நிர்வாக இயக்குநராக சாஜி K V'ஐ நியமிப்பதற்கும் அந்தக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**3.தேசிய பொருட்கள் & பங்குகள் பரிவர்த்தனை நிறுவனம் (NCDEX) அறிமுகப்படுத்தும் இந்தியாவின் முதல் வேளாண்–எதிர்காலம் குறித்த குறியீட்டின் பெயர் என்ன?**

**அ. AGRIDEX ☑**

ஆ. AGROINDEX

இ. NCAGRINDEX

ஈ. AGRIFUTURE

❖ தேசிய பொருட்கள் & பங்குகள் பரிவர்த்தனை நிறுவனம் என்பது மும்பையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் ஓர் இணையவழி பல்பொருள் பரிமாற்றகமாகும். நாட்டின் முதல் வேளாண்–எதிர்கால குறியீடான NCDEX AGRIDEX'ஐ அறிமுகப்படுத்தவுள்ளதாக NCDEX சமீபத்தில் அறிவித்தது.

- ❖ வேளாண் குறியீட்டு எதிர்கால ஒப்பந்தங்களில் ஏற்கனவே மாதிரி வர்த்தகத்தைத் தொடங்கியுள்ளதாக அப்பரிமாற்றகம் தெரிவித்துள்ளது. AGRIDEX என்பது NCDEX'இல் உள்ள பத்து வேளாண் உற்பத்திப் பொருட்களின் ஒரு தொகுப்பைக்குறிக்கிறது. மேலும் இது இந்தியாவின் வலுவான வேளாண்துறைக்கு ஓர் அளவுகோலாகவும் செயல்படும்.

**4.நடப்பாண்டு (2020) உலக தேனீக்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Bee Engaged ☑

ஆ. Bee Energetic

இ. Bees for SDGs

ஈ. Bees in Supply chain



- ❖ சுற்றுச்சூழலில் தேனீக்கள் மற்றும் பிற மகரந்தச் சேர்ப்பிகளின் பங்களிப்பை ஒப்புக்கொள்ளும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் மே.20 அன்று உலக தேனீக்கள் நாள் கொண்டாடப்படுகிறது. தேனீக்கள் மற்றும் அவற்றின் வாழிடங்களை பாதுகாக்கவும் மேம்படுத்தவும், அவற்றின் செழிப்பு மற்றும் பல்வகைமையை மேம்படுத்தவும், நீடித்த வளர்ச்சிக்கு தேனீக்கள் இருப்பின் ஆதரவை ஊக்குவிப்பதற்குமான வாய்ப்பை அரசாங்கங்கள், அமைப்புகள், உள்நாட்டு சமுதாய அமைப்புகள் மற்றும் அக்கறையுள்ள குடிமக்களுக்கு இந்நாள் வழங்குகிறது. 'Bee Engaged' என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாம்.

**5.பயனாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, ஆயுஷ்மான் பாரத் திட்டம் சமீபத்தில் எவ்வளவு பயனாளிகள் எண்ணிக்கையைக் கடந்துள்ளது?**

அ. 50 இலட்சம்

ஆ. 75 இலட்சம்

**இ. 1 கோடி ☑**

ஈ. 100 கோடி

- ❖ தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்ட அண்மைய அறிவிப்பின்படி, ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 1 கோடியைத் தாண்டியுள்ளது. ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB–PMJ) என்ற முதன்மை சுகாதார காப்பீட்டுத் திட்டம் 2018 செப்.23 அன்று இராஞ்சியில் தொடங்கப்பட்டது. தேசிய சுகாதார ஆணையத்தால் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், ஒவ்வொரு ஏழைக்குடும்பமும் மருத்துவமனைகளில் ஆண்டுக்கு ₹5 இலட்சம் மதிப்பிலான சிகிச்சைபெறும் மருத்துவ பாதுகாப்பை வழங்குகிறது. நாட்டின் 10.74 கோடி ஏழைமக்ககளுக்கு நிதிப் பாதுகாப்பை உறுதிசெய்வது இதன் இலக்காகும்.

**6. 2020–21ஆம் ஆண்டுக்கான உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) நிர்வாகக் குழுவின் தலைவராக பொறுப்பேற்கவுள்ளவர் யார்?**

அ. K K ஷைலஜா

**ஆ. ஹர்ஷ் வர்தன் ☑**

இ. பிரீத்தி சுதன்

ஈ. ரூபா சர்மா

❖ மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சர் Dr. ஹர்ஷவர்தன், 2020–2021ஆம் ஆண்டுக்கான உலக நலவாழ்வு அமைப்பின் நிர்வாகக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மெய்நிகர் முறையில் நடைபெற்ற நிர்வாகக்குழுவின் 147ஆவது அமர்வில் ஜப்பானின் Dr. ஹிரோகி நகாடானிக்குப் பதிலாக அவர் தேர்வுசெய்யப்பட்டார். WHO'இன் நிர்வாகக்குழுவானது சுகாதாரத்துறை தொடர்புடைய 34 நிர்வாகிகளைக்கொண்டுள்ளது; அதில் ஒவ்வொருவரும் ஓர் உறுப்புநாட்டைக் குறிக்கும் விதமாக உள்ளனர். தலைவர் பதவியானது பிராந்திய குழுக்களிடையே சுழற்சி முறையில் வழங்கப்படுகிறது.

**7.எந்தப் புகழ்பெற்ற திருக்கோவிலை முழுமையாக சூரியமின்னாற்றல்மயமாக்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது?**

அ. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில், தமிழ்நாடு

ஆ. தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோவில், தமிழ்நாடு

இ. பூரி ஜெகந்நாதர் திருக்கோவில், ஒடிசா

**ஈ. கோனார்க் சூரியன் திருக்கோவில், ஒடிசா ☑**



❖ ஒடிசாவில் உள்ள கோனார்க் சூரியன் திருக்கோவில் மற்றும் கோனார்க் நகரம் முழுவதையும் சூரிய மின்னாற்றல்மயமாக்க மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

❖ இந்தத்திட்டம், மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் நிறைவேற்றப்படுகிறது. சூரியசக்தி மரங்கள், சூரியமின்னாற்றலில் இயங்கும் குடிநீர்வழங்கும் நிலையங்கள், சூரியமின்னாற்றல் நிலையங்கள் போன்றவற்றை செயல்படுத்தும் 10 MW சூரியமின்னாற்றல் நிலையம் அமைக்கப்படும். மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் ₹25 கோடி செலவிலான இந்தத் திட்டம், ஒடிசாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையால் செயல்படுத்தப்படும்.


**8.மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ள மூத்த குடிமக்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டத்தின் பெயரென்ன?**

அ. பிரதமர் அடல் ஓய்வூதிய திட்டம்

**ஆ. பிரதமர் வயா வந்தனா திட்டம் ☑**

இ. பிரதமர் வய சம்ரிதி திட்டம்

ஈ. பிரதமர் மூத்த குடிமக்கள் திட்டம்




❖ மூத்த குடிமக்களுக்கான (60 வயதுக்கு மேற்பட்டவர்கள்) ஓய்வூதிய திட்டமான பிரதமர் வய வந்தனா திட்டத்தை, மத்திய அமைச்சரவை 2023 மார்ச் வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது. மூத்த குடிமக்களுக்கு வயது முதிர்வுகால வருமானத்துக்கு உறுதிசெய்யும் இத்திட்டம், கடந்த 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதிகபட்ச முதலீட்டு வரம்பு ₹15 இலட்சமாகவும் காப்பீட்டின் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் கடந்தமுறை 8% வருமானத்தை உறுதி செய்திருந்தாலும், இந்த ஆண்டு அந்தத்திட்டம் ஆண்டுக்கு 7.4% கொடுக்கும். மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டத்திற்கு ஏற்ப ஒவ்வோர் ஆண்டும் வட்டி விகிதம் மாற்றப்படும்.

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அவசரகால கடனளிப்பு உத்தரவாதத் திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ. வேளாண்மை

**ஆ. MSME ☑**

இ. தானியங்கு

ஈ. சேவை

❖ தகுதியுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்துறை நிறுவனங்கள் மற்றும் விருப்பமுள்ள முத்ரா கடனாளிகளுக்கு "அவசரகாலக் கடனளிப்பு உத்தரவாதத் திட்டம்"மூலம் ₹3 இலட்சம் கோடி வரையில் கூடுதல் கடனளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், தகுதியுள்ள குறு, சிறு & நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் விருப்பமுள்ள முத்ரா கடனாளிகளுக்கு ₹3 லட்சம் கோடி வரையில் கூடுதல் கடனுக்கு தேசிய கடனுத்தரவாத அளிப்பு நிறுவனம் (NCGTC), உத்தரவாதம் அளிக்கப்பட்ட அவசரகாலக் கடனளிப்பு ஏற்பாட்டின் மூலம், 100 சதவீதம் உத்தரவாதமளிக்கும்.

**10.எந்த மாநில அரசு, SIDBI'உடன் கூட்டிணைந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான தொடக்க நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. பீகார்

❖ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், அண்மையில், இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியுடன் (SIDBI) கூட்டிணைந்து, "உத்தரப்பிரதேச தொடக்க நிதி"யைத் தொடங்கினார். உ.பி மாநிலத்தில் துளிர் நிறுவனங்கள் உருவாக்கலை விரைவுபடுத்துவதற்காக ஏற்கனவே SIDBI உடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உ.பி மாநில அரசு கையெழுத்திட்டிருந்தது. முதல் தவணை ₹15 கோடியை SIDBI வங்கியிடம் அவர் ஒப்படைத்தார். புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அவர்களின் திறன்களின் அடிப்படையில் பணிகள் வழங்கப்படும். மேலும், துளிர் நிறுவனங்களை உருவாக்க அம்மாநிலத்தின் இளையோர் ஊக்குவிக்கப்படுவார்கள்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.வர்த்தகம் மற்றும் இணைப்பை மேம்படுத்துவதற்காக, 5 புதிய துறைமுகங்களை செயல்படுத்துவதற்கு, எந்த நாட்டுடனான ஓர் ஒப்பந்தத்தில் இந்தியா அண்மையில் கையெழுத்திட்டது?**

அ. இலங்கை

**ஆ. வங்கதேசம் ☑**

இ. தென் கொரியா

ஈ. ஜப்பான்



❖ வங்கதேசத்திற்கான இந்திய உயராணையர், டாக்காவில் வைத்து, வங்கதேச கப்பலமைச்சகத்துடன், 'உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து & வர்த்தகம் தொடர்பான நெறிமுறை'க்கான ஒரு பிற்சேர்க்கையில் கையெழுத்திட்டார். இருநாடுகளுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் பயணத்தை மேம்படுத்துவதற்காக ஐந்து புதிய துறைமுகங்கள் மற்றும் மேலும் இரண்டு புதிய நீர்வழிகளைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக இது கையெழுத்தானது.

❖ இந்திய–வங்கதேச உடன்படிக்கை வழிகள் 8'லிருந்து பத்தாக அதிகப்படுத்தப்படுவதோடு, ஏற்கனவே இருக்கும் வழிகளோடு புதிய வழிகளும் சேர்க்கப்படுகின்றன. புதிதாக சேர்க்கப்பட்ட துறைமுகங்களில், துலியன், மையா, கோலாகாட், சோனாமுரா மற்றும் ஜோகிகோபா ஆகியவை இந்தியாவில் உள்ளன, அதேவேளை, இராஜ்ஷாஹி, சல்த்கஞ்ச், சில்மாரி, தௌத்கண்டி & பகதூராபாத் ஆகிய துறைமுகங்கள் வங்கதேசத்தில் உள்ளன.

**2.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கார்மென் ரெய்ன்ஹார்ட், எந்த நிறுவனத்தின் புதிய தலைமைப் பொருளாதார நிபுணர் மற்றும் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. பன்னாட்டு செலவாணி நிதியம்

இ. உலக பொருளாதார மன்றம்

ஈ. ஆசிய அபிவிருத்தி வங்கி



❖ உலக வங்கியானது அண்மையில் பொருளாதார நிபுணர் கார்மென் ரெய்ன்ஹார்ட்டை அதன் புதிய துணைத்தலைவராகவும், தலைமைப் பொருளாதார நிபுணராகவும் நியமித்து அறிவித்தது. ஹார்வர்ட் பல்கலையில் பேராசிரியராக பணிபுரியும் கார்மென், உலக வங்கியின் கடன் வெளிப்படைத்தன்மை விவாதங்களுக்கு ஆலோசகராகவும் பங்களிப்பாளராகவும் உள்ளார். COVID–19 தொற்று மற்றும் அதன் பொருளாதாரத் தாக்கம் உள்ளிட்ட கொள்கை சவால்களில் பணியாற்றும் பன்னாட்டு செலவாணி நிதியத்தின் வெளிப்புற ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகவும் அவர் உள்ளார்.

❖ பொருளாதார வல்லுநர் கென்னத் ரோகாப் உடன் இணைந்து, "This Time is Different: Eight Centuries of Financial Folly" என்ற தலைப்பில் நூலொன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.


**3.தொடர்புத் தடமறியலுக்கான (contact–tracing) பயன்பாட்டு நிரலாக்க இடைமுகத்தை (API) எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து கூகிள் வெளியிட்டுள்ளது?**

**அ. ஆப்பிள் ☑**

ஆ. மைக்ரோசாப்ட்

இ. அமேசான்

ஈ. பேஸ்புக்



❖ தொடர்புத் தடமறியலுக்காக உருவாக்கப்பட்ட பயன்பாட்டு நிரலாக்க இடைமுகத்தை (API) ஆப்பிள் & கூகிள் ஆகிய நிறுவனங்கள் இணைந்து பொதுவெளிப் பயன்பாட்டுக்காக வெளியிட்டுள்ளன. இந்த API'கள், பொதுவில் கிடைக்கும் மென்பொருள் புதுப்பிப்புகள்மூலம் வழங்கப்படும். மேலும், பொதுச் சுகாதார அதிகாரிகளால் மட்டுமே இந்த API'களைப் பயன்படுத்தி தொடர்புத் தடமறியலுக்கான செயலிகளை உருவாக்கவியலும். அந்த நிறுவனங்களின் அறிவிப்பின்படி, இதுவரை 22 நாடுகள் API அணுகலைக் கோரியுள்ளன. தொற்றுநோயின் தாக்கம் முழுவதுமாக நிறைவடைந்ததும், தொடர்புத் தடமறியும் செயலிகள் இனி தேவைப்படாது என்ற சூழல் உருவானதும், அந்தக் குறிப்பிட்ட API'கள் அழிக்கப்படும் என்றும் அந்த நிறுவனங்கள் உறுதியளித்துள்ளன.

**4.இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அண்மைய தரவுகளின்படி, கடந்த மூன்றாண்டுகளில் எந்த வகை வங்கிகள் அதிக கடன் வழங்கலை மேற்கொண்டுள்ளன?**

அ. பொதுத்துறை வங்கிகள்

**ஆ. தனியார் துறை வங்கிகள் ☑**

இ. வெளிநாட்டு வங்கிகள்

ஈ. மண்டல கிராமப்புற வங்கிகள்



❖ இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய தரவுகளின்படி, வங்கிக்கடன் ஆண்டுக்கு ஆண்டு 6.52 சதவீதம் அதிகரித்து ₹102.52 டிரில்லியனாகவும், வங்கி வைப்பு 10.64% அதிகரித்து ₹138.50 டிரில்லியனாகவும் உள்ளது. தனியார் துறை வங்கிகள் மிக அதிகமான கடன் வழங்கலை மேற்கொண்டுள்ளன. மொத்த கடன் வழங்கலில் அவற்றின் பங்கு முறையே 2019, 2018 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் 35.7 %, 32 % மற்றும் 30 சதவீதமாக உள்ளது. 2019 டிசம்பரில், தொடர்ச்சியாக நான்காவது காலாண்டில் வங்கியின் கடன் வளர்ச்சி (ஆண்டுக்கு ஆண்டு) குறைந்துள்ளது என்பதையும் இந்தத் தரவு வெளிப்படுத்தியுள்ளது.

**5.எந்த இந்திய முன்னாள் பிரதமரின் நினைவுநாள், "பயங்கரவாத எதிர்ப்பு நாள் – Anti–terrorism Day" என அனுசரிக்கப்படுகிறது?**

**அ. இராஜீவ் காந்தி ☑**

ஆ. இந்திரா காந்தி

இ. அடல் பிகாரி வாஜ்பாய்

ஈ. மொரார்ஜி தேசாய்



❖ இந்திய முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் நினைவுநாள், நாடு முழுவதும், "பயங்கரவாத எதிர்ப்பு நாள்" என அனுசரிக்கப்படுகிறது. அவரின் 28ஆவது நினைவுநாள் மே.21 அன்று அனுசரிக்கப்பட்டது. 1991 இதே நாளில், தேர்தல் பரப்புரையின்போது சென்னைக்கருகே அமைந்துள்ள திருப்பெரும்புதூரில் அவர் படுகொலைசெய்யப்பட்டார். இராஜீவ் காந்தி தனது நாற்பதாம் வயதில் இந்தியாவின் ஆறாவது பிரதமராக பதவியேற்றதன்மூலம், இந்தியாவின் மிகவும் இளம்வயது பிரதமராக ஆனார்.

**6.அண்மையில் ஓய்வுபெறுவதாக அறிவித்த அரிட்ஸ் அடுரிஸுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

**அ. கால்பந்து ☑**

ஆ. கூடைப்பந்து

இ. F1 கார் பந்தயம்

ஈ. கோல்ப்



❖ அத்லெடிக் பில்பாவ் அணியைச் சேர்ந்த அரிட்ஸ் அடுரிஸ், அண்மையில் கால்பந்து விளையாட்டில் இருந்து தான் ஓய்வுபெறுவதாக அறிவித்தார். எதிர்காலத்தில் ஒரு தடகள வீரராக செயல்படுவதற்கு இடுப்புமாற்று சிகிச்சை தேவைப்படுவதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். பொதுவாக அத்லெடிக் பில்பாவ் என அழைக்கப்படுகிற அவ்வணி, ஒரு ஸ்பானிஷ் கால்பந்து அணியாகும். தற்போது அவர், 172 கோல்களுடன் அவ்வணியின் ஆறாவது இடத்தில் உள்ளார். 2016 ஐரோப்பிய சாம்பியன்ஷிப்பில் அவர், ஸ்பெயின் அணியைச் சார்ந்தவராக இருந்தார்.

**7. "பாதுகாப்பான துறைமுக விதிகளுடன்" தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. கப்பல் அமைச்சு

**ஆ. நிதி அமைச்சகம் ☑**

இ. பெருநிறுவனங்கள் விவகார அமைச்சகம்

ஈ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்




❖ "பாதுகாப்பான துறைமுகம்" என்பது மதிப்பீட்டாளர் அறிவித்த பரிமாற்ற விலையை எந்த ஆய்வும் இல்லாமல் வருமான வரி அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளும் நிபந்தனைகளைக் குறிக்கிறது. இந்த அம்சம் வரி செலுத்துவோருக்கு, குறிப்பாக சேவைத்துறையில் பயனளிக்கிறது.

❖ வருவாய் துறையின் (நிதி அமைச்சகம்) கீழியங்கும் ஓர் உச்சபட்ச அமைப்பான மத்திய நேரடி வரிகள் வாரியம் சமீபத்தில் பாதுகாப்பான துறைமுக விதிகளில் மாற்றங்களை அறிவித்தது. அறிவிப்பின்படி, AY (மதிப்பீட்டு ஆண்டு) 2017–18 முதல் 2019–20 வரை பொருந்தும் விகிதங்கள் அனைத்தும் AY 2020–21'க்கும் தொடர்ந்து பொருந்தும்.

**8.பொது முடக்கத்திற்குப் பின்னர் உள்நாட்டு வானூர்திகள் மீண்டும் தங்களின் சேவையைத் தொடங்கும் போது, 3 மாதங்களுக்கு இந்திய உள்நாட்டு வானூர்திகளின் கட்டணத்தை யார் நிர்ணயிப்பார்கள்?**

அ. பன்னாட்டு உள்நாட்டு வான்போக்குவரத்து அமைப்பு

ஆ. உள்நாட்டு வானூர்தி நிறுவனங்கள்

**இ. இந்திய மத்திய உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகம் ☑**

ஈ. பன்னாட்டு வானூர்தி நிறுவனங்கள்



- மத்திய வான் போக்குவரத்து அமைச்சகத்தின் ஓர் அண்மைய அறிவிப்பின்படி, பொது முடக்கத்திற்குப் பின்னர் உள்நாட்டு வானூர்திகள் மீண்டும் தங்களின் சேவையைத்தொடங்கும் போது, 3 மாதங்களுக்கு அவற்றின் கட்டணங்கள் அனைத்தும் அமைச்சகத்தாலேயே நிர்ணயம் செய்யப்படும். வழித்தடத்தின் அடிப்படையில் அரசாங்கமானது குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச பயணக்கட்டணங்களை ஈடுசெய்யும்.

- மேலும், பயணச்சீட்டின் விலைகள் பயணிகளுக்கு மலிவானதாகவும் விமான நிறுவனங்களுக்கு நிதி ரீதியாக சாத்தியமானவை என்பதையும் உறுதிசெய்யும். வானூர்திகளின் பயணகால அடிப்படையில் இவ்வழித்தடங்களை ஏழு குழுக்களாக அமைச்சகம் வகுத்துள்ளது. எந்தவொரு வானூர்தியிலும், 40% இருக்கைகள், பரிந்துரைக்கப்பட்ட மலிவு மற்றும் உயர்ரக விமானப் பயணக்கட்டண வரம்புகளுக்கு இடைப்பட்டதாக விற்கப்பட வேண்டும்.

**9. 'Open Skies' ஒப்பந்தத்திலிருந்து அண்மையில் விலகுவதாக அறிவித்த நாடு எது?**

அ. வட கொரியா

ஆ. இஸ்ரேல்

இ. சீனா

**ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ☑**



- 'Open Skies' ஒப்பந்தம் என்னும் முதன்மை பன்னாட்டு ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) விலகுவதாக சமீபத்தில் அறிவித்தது. 35 நாடுகள் கையெழுத்திட்ட இந்த ஒப்பந்தமானது, உறுப்பு நாடுகளின் மீது நிராயுதபாணியான கண்காணிப்பு விமானங்கள் பறந்துசெல்ல அனுமதிக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளை இரஷ்யா பலமுறை மீறியுள்ளது என்பதையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் நிர்வாகம் மேற்கோளிட்டுக்காட்டுகிறது.

- இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கான விதிமுறைகளின் அடிப்படையில், அடுத்த ஆறு மாதங்களில் அமெரிக்கா முறையாக விலகும் என எதிர்பார்க்கப்படுகிறது. NATO நட்பு நாடுகளும் பிற நாடுகளும் இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகவேண்டாம் என அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டுள்ளன.

**10.உலக உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான கலாசாரப் பன்முகத்தன்மை நாள் (World Day for Cultural Diversity for Dialogue and Development) கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

**அ. மே 21 ☑** ஆ. மே 20

இ. மே 18 ஈ. மே 19



❖ பல்வேறு கலாசாரங்களுக்கிடையிலான இடைவெளியை இணைக்கும் வகையில், ஆண்டுதோறும் மே.21 அன்று உலக உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான கலாசாரப் பன்முகத்தன்மை நாள் கடைபிடிக்–கப்படுகிறது. இது, கலாசார பன்முகத்தன்மையின் மதிப்பை புரிந்துகொள்ளவும் எப்படி ஒன்றிணைந்து வாழவேண்டுமென்பதை கற்றுக்கொள்ளவும் உதவுவதற்கான ஒரு நல்வாய்ப்பாக உள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் பமீனிலுள்ள புத்தர் சிலைகளை அழித்ததன் விளைவாக இந்நாள் உருவாக்கப்பட்டது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ மதுரை சந்திப்பு இரயில் நிலையத்திற்கு ISO 141001:2015 தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. சிறந்த சுற்றுச்சுழல் மேலாண்மை அமைப்புகளை கொண்டிருப்பதால் ISO தரச்சான்று அளிக்கப்பட்டுள்ளது. இரயில் இயக்கம், சமிக்ஞை, இரயில் நிலைய பராமரிப்பை சிறப்பாக கையாண்டதற்காக தரச்சான்று வழங்கப்பட்டது.




❖ தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை சீரமைக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வுசெய்ய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் இரங்கராஜன் தலைமையில் உயர்மட்டக்குழு அமைத்துள்ளது தமிழ்நாடு அரசு. இந்தக் குழு, தமிழக பொருளாதாரத்தை சீரமைக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வுசெய்து 3 மாதகாலத்தில் அறிக்கையைத் தாக்கல் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ திருவள்ளூர் மாவட்டத்தில் ₹385 கோடியில் அமையவுள்ள அரசு மருத்துவக்கல்லூரிக்கும், திருப்பூர் மாவட்டத்தில் ₹336 கோடியில் அமையவுள்ள அரசு மருத்துவக்கல்லூரிக்கும் முதலமைச்சர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.முதல் அதிகாரப்பூர்வ பன்னாட்டு தேயிலை நாளின் அனுசரிப்பைக் குறிக்கும் ஆண்டு எது?**



அ. 2017

ஆ. 2018

இ. 2019

**ஈ. 2020 ☑**

❖ முதலாவது பன்னாட்டு தேயிலை நாளானது, "Harnessing benefits for all from field to cup" என்னும் கருப்பொருளின்கீழ் 2020 மே.21 அன்று கடைப்பிடிக்கப்பட்டது. தேயிலை சாகுபடியை வேலைவாய்ப்பு & வருமானத்தின் முக்கிய ஆதாரமாக கொண்டிருக்கும் நாடுகளை இந்த நாள் ஒருங்கிணைக்கிறது. கடந்த ஆண்டு, இந்தியா, FAO அரசாங்கங்களுக்கு இடையேயான குழுவில் முன்வைத்த திட்டத்தின் அடிப்படையில், ஐ.நா பொது அவை, மே 21'ஐ பன்னாட்டு தேயிலை நாளாக அறிவித்தது. மெய்நிகராக கொண்டாடப்பட்ட முதல் பன்னாட்டு தேயிலை நாளின்போது FAO தலைவர் QU டாங்யூ பங்கேற்றார்.

**2.அரசாங்கத்தின் கொள்முதல் தொடர்பான திருத்தங்களின் காரணமாக GFR அண்மைச் செய்திகளில் இடம்பெற்றது. GFR என்பது எதைக் குறிக்கிறது?**

அ. Global Financial Rules

**ஆ. General Financial Rules ☑**

இ. Government Financial Rules

ஈ. Government Fiscal Rules

❖ ₹200 கோடிக்கும் குறைவான மதிப்புடைய பொருட்கள் மற்றும் சேவைகளை உள்நாட்டு நிறுவனங்க –ளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, பொது நிதியியல் விதிகள், 2017'இல் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. அண்மைய பொருளாதார ஆதரவுத்தொகுப்பில் அறிவிக்கப்பட்டபடி, ₹200 கோடி வரையிலான பன்னாட்டு கொள்முதல்கள் அனுமதிக்கப்படாது. அது, உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவங்களிடையே நியாயமற்ற போட்டியைக்குறைக்கும். கொள்முதல் வரம்பு போன்ற செலவுத்துறையால் அவ்வப்போது கூறப்படும் பரிந்துரைகளைக்கொண்டு GFR'இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

**3.மே 2020'இல் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிப்பின்படி, புதுப்பிக்கப்பட்ட ரெப்போ வீதம் என்ன?**

அ. 4.7%

ஆ. 4.5%

இ. 4.2%

**ஈ. 4.0% ☑**

❖ ரெப்போ வீதத்தை நாற்பது அடிப்படை புள்ளிகள் குறைத்து நான்கு சதவீதமாகவும், தலைகீழ் ரெப்போ வீதத்தை நாற்பது அடிப்படை புள்ளிகள் குறைத்து 3.35 சதவீதமாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI)

ஆளுநர் அறிவித்துள்ளார். முன்னதாக ஏப்ரல் மாதத்தில், ரெப்போ மற்றும் தலைகீழ் ரெப்போ வீதங்கள் முறையே 4.4% மற்றும் 3.75% என நிர்ணயிக்கப்பட்டிருந்தன. 2020 ஆக.31 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு அனைத்துவிதமான கடன்களை வசூலிக்கவும் அவர் தடை விதித்தார்.

**4.புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வணிகத்திற்காக ஒரு கூட்டு நிறுவனத்தை அமைக்க, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC), எந்தப் பொதுத்துறை நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?**

அ. NHPC Ltd

**ஆ. NTPC Ltd ☑**

இ. Power Grid Corporation

ஈ. NLC Ltd

❖ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வணிகத்திற்காக கூட்டு நிறுவனத்தை தொடங்க, மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனமான தேசிய அனல்மின் நிறுவனமும் (NTPC) பெட்ரோலியம் மற்றும் இயற்கைவாயு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு நிறுவனம் (ONGC) ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழிலில் இருநிறுவனங்களும் கால் பதிப்பதை அதிகரிக்க உதவும்.

❖ இந்த ஒப்பந்தத்தின்படி, NTPC மற்றும் ONGC ஆகியவை இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் கடலுக்குள் காற்றாலை மின்னாற்றல் கருவிகள் அமைப்பது மற்றும் இதர புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்கள் அமைப்பதுபற்றி ஆராயும். மேலும் நீடிப்புத்திறன், சேமிப்பு, இ–இயங்குதிறன் & ESG (சுற்றுச்சூழல்–சமூகம்–நிர்வாகம்) தொடர்பான திட்டங்களில் உள்ள வாய்ப்புகள் குறித்தும் இந்நிறுவனங்கள் ஆராயும்.

**5.ராயலசீமா இறைவைப் பாசனத் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளம்

இ. கர்நாடகா

**ஈ. ஆந்திர பிரதேசம் ☑**



❖ தேசிய பசுமைத் தீர்ப்பாயம், சமீபத்தில், முன்மொழியப்பட்ட ராயலசீமா இறைவைப் பாசனத் திட்டத்தை நிறுத்தி உத்தரவு பிறப்பித்தது. ராயலசீமா நீரேற்றுத் திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பொட்டிரெட்டிபாடு தலைமை சீராக்கி கால்வாய்கள் மேம்பாட்டுப்பணிகள் குறித்து ஆய்வுசெய்ய குழுவொன்றை தேசிய பசுமைத்தீர்ப்பாயத்தின் மண்டல அமர்வு அமைத்துள்ளது. இத்திட்டங்களுக்கு எதிராக தெலுங்கானா மாநில அரசு அண்மையில் கிருஷ்ணா ஆற்றுநீர் மேலாண்மை வாரியத்தில் புகாரளித்தது குறிப்பிடத்தக்கது.

**6.மத்திய சுற்றுச்சூழல் அமைச்சரால் தொடங்கப்பட்ட, உயிரியல் பன்முகத்தன்மையுடன் தொடர்புடைய உள்ளுறை பயிற்சித் திட்டத்தின் (Internship) பெயர் என்ன?**

**அ. உயிரியல் பன்முகத்தன்மை சமரக்ஷன் உள்ளுறைப் பயிற்சித் திட்டம் ☑**

ஆ. உயிரியல் பன்முகத்தன்மை சமாதான் உள்ளுறைப் பயிற்சித் திட்டம்

இ. உயிரியல் பன்முகத்தன்மை சம்ரிதி உள்ளுறைப் பயிற்சித் திட்டம்

ஈ. உயிரியல் பன்முகத்தன்மை சம்பூர்னா உள்ளுறைப் பயிற்சித் திட்டம்



- தேசிய உயிரியல் பன்முகத்தன்மைக் கழகம் (NBA) மற்றும் ஐ.நா வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் "உயிரியல் பன்முகத்தன்மைப் பாதுகாப்புப் பயிற்சித் திட்டம்" என்ற திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின்மூலம் 20 மாணவர்கள், ஓராண்டு காலத்திற்கு பட்டமேற்படிப்பு படிக்கவியலும்.
- உயிரியல் பன்முகத்தன்மைக்கான பன்னாட்டு நாளின் மெய்நிகர் கொண்டாட்டத்தின்போது அவர் இத் திட்டத்தை தொடங்கினார். "காற்று, மகரந்தச்சேர்க்கை மற்றும் நமது எதிர்காலத்தைப் பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வு அறிக்கை", "UNEP அருகிவரும் உயிரினங்கள் குறித்த அறிக்கை", "பல்லுயிர் பாதுகாப்புகுறித்த தொடரின் சிற்றேடு" மற்றும் "உறுப்புநாடுகளின் மாதிரி மாநாடு" உள்ளிட்ட பல்வேறு முக்கியமான ஆவணங்களையும் அவர் அப்போது வெளியிட்டார்.

**7.அண்மையச் செய்திகளில் இடம்பெற்ற திப்ரு–சைகோவா தேசிய பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. மேற்கு வங்கம்

ஆ. சிக்கிம்

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. அருணாச்சல பிரதேசம்



- அஸ்ஸாம் மாநிலத்தின் திப்ரு–சைகோவா தேசியப்பூங்காவினுள் ஹைட்ரோகார்பன்களை துளையிட்டு சோதனைசெய்வதற்காக சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து சூழல்சார் அனுமதிபெற்றுள்ளதாக ஆயில் இந்தியா லிட் அண்மையில் அறிவித்தது. பல சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பூங்கா மற்றும் உயிர்க்கோள இருப்புக்களில், திட்டத்தின் தாக்கம் குறித்து அச்சத்தை எழுப்பிய போதிலும், OIL அந்தக் கூற்றுக்களை மறுத்தது. ஹைட்ரோகார்பன் சோதனையானது அப்பூங்காவின் எல்லைக்குட்பட்ட ஏழு இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**8.நடப்பாண்டில் (2020) வரும் உயிரியல் பன்முகத்தன்மைக்கான பன்னாட்டு நாளின் (International Day for Biological Diversity) கருப்பொருள் என்ன?**

அ. Biological Diversity for SDGs

**ஆ. Our solutions are in nature ☑**

இ. Strategic Plan on Biodiversity

ஈ. Ecosystem Restoration Ahead



❖ பன்னாட்டளவில் உயிரியல் பல்வகைமைபற்றிய புரிதல் மற்றும் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் மே.22 அன்று பன்னாட்டு உயிரியல் பல்வகைமை (Biological Diversity) நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Our solutions are in Nature" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். இது நாம் சார்ந்திருக்கும் பல்லுயிர் வகைமை & நலம்மிக்க சுற்றுச் சூழல், நமது உணவு அமைப்புகள், ஊட்டச்சத்து, நலம் ஆகியன குறித்து அறிவூட்டும் விதமாகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும் உள்ளது.

**9. "எல்லோருக்கும் வேலை கிடைக்கும்" என்ற திட்டத்தைத் தொடங்கவுள்ள இந்திய மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. உத்தரகண்ட்

❖ "எல்லோருக்கும் வேலை கிடைக்கும்" என்ற திட்டத்தை மத்திய பிரதேச மாநிலம் தொடங்கவுள்ளது. இத்திட்டம், அம்மாநில தொழிலாளர்களுக்கு MNREGA பணியட்டைகளைக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத்திட்டம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தனது கவனத்தைச்செலுத்தும். மேலும், கிராமப்புற பெண்களுக்கு இலவசமான மற்றும் பாதுகாப்பான மகபேற்றை வழங்குவதற்காக, "தீதி வாகன சேவை" என்ற புதிய திட்டத்தை மத்திய பிரதேசத்தின் ஜாபுவா மாவட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது.

**10. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது இந்திய வானிலை ஆய்வுத்துறையின் சேவைகளை எந்தச் செயலியுடன் ஒருங்கிணைத்துள்ளது?**

அ. ஷஷக்த்

**ஆ. உமாங் ☑**

இ. சக்தி

ஈ. மைகவ்

❖ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது அண்மையில் இந்திய வானிலை ஆய்வுத் துறை சேவைகளின் ஏழு சேவைகளை, "உமாங்" செயலியில் ஒருங்கிணைத்துள்ளது. தற்போதைய வானிலை, நவ்காஸ்ட், நகரங்களுக்கான முன்னறிவிப்பு, மழையளவு தகவல், சுற்றுலா முன்னறிவிப்பு, எச்சரிக்கைகள் மற்றும் புயல் ஆகியவை அவ்வேழு சேவைகளாகும். UMANG (Unified Mobile App for New-age Governance) என்பது ஓர் ஒருங்கிணைந்த தளத்தினூடே அனைத்து சேவைகளையும் வழங்குவதற்காக, இந்திய அரசால் கடந்த 2017'இல் தொடங்கப்பட்ட திறன்பேசி செயலியாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1. "Special Drawing Rights" உடன் தொடர்புடைய பன்னாட்டு நிறுவனம் எது?**

அ. உலக வங்கி

**ஆ. பன்னாட்டு செலவாணி நிதியம் ☑**

இ. உலக பொருளாதார மன்றம்

ஈ. உலக வர்த்தக அமைப்பு

❖ இந்திய ரிசர்வ் வங்கியின் சமீபத்திய தரவுகளின்படி, நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு மே 15 முதல் வாரத்தில் $1.73 பில்லியன் டாலர்களாக உயர்ந்து $487.04 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது. அந்நிய செலாவணி இருப்புக்களின் இந்த அதிகரிப்பு, அயல்நாட்டு நாணய சொத்துக்களின் அதிகரிப்பு காரணமாக நிகழ்ந்துள்ளது. மேலும், பன்னாட்டு செலவாணி நிதியத்துடனான சிறப்பு பணமெடுப்பு உரிமைகளும் (SDR) $2 மில்லியன் டாலர்கள் உயர்ந்து $1.42 பில்லியனாக அதிகரித்துள்ளது. SDR என்பது பன்னாட்டு செலவாணி நிதியத்தால் (IMF) வெளியிடப்படும் ஒரு நாணய வெளியீடாகும்.

**2.குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக, 'ReSTART' எனப்படும் புத்துயிரளிப்பு தொகுப்பை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

அ. ஒடிசா

ஆ. இராஜஸ்தான்

இ. கேரளா

**ஈ. ஆந்திர பிரதேசம் ☑**

❖ ஆந்திர பிரதேச மாநில அரசானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புத்துயிர் தொகுப்பை, 'ReSTART' என்ற பெயரில் உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த செலவு ₹1,110 கோடியாகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அலகுகளுக்கு நிலுவையில் உள்ள அனைத்து சலுகைகளையும் செலுத்துதல், மும்மாத நிலையான கோரிக்கை கட்டணங்களை தள்ளுபடி செய்தல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நடப்புமூலதன கடன்கள் மற்றும் சிறந்த சந்தை அணுகல் ஆகியவை இந்தத் தொகுப்பின் முக்கிய அம்சங்களாகும்.

❖ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முன்னுரிமை சந்தை அணுகல் கொள்கையானது 25% அரசு கொள்முதலை, குறு & சிறு இரக தொழில் அலகுகளிலிருந்து மேற்கொள்வதை உறுதி செய்யும். முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு பணிக்குழுவும் தொழிற்துறை அமைச்சரின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

**3.நாடடங்கிற்குப்பின்னாக தொடங்க திட்டமிடப்பட்டுள்ள, 'ஹுனார் ஹாத்' முன்னெடுப்பின் கருப்பொருள் என்ன?**

அ. Go Vocal for Local

**ஆ. Local to Global ☑**

இ. Market Mantra

ஈ. Linking with Global Supply Chain



- ❖ கைவினைப்பொருள்கள், பாரம்பரியக்கலைப்பொருள்களுக்கான, "ஹுனார் ஹாத்", நாடு முழுவதிலும் உள்ள கலைஞர்களும், கைவினைஞர்களும் தங்களது திறமைகளை, ஆற்றல்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு தளமாக உள்ளது. கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த 5 மாதங்களாக இது நடைபெறவில்லை. "உள்ளூரிலிருந்து உலகிற்கு" என்ற கருப்பொருளுடன் இந்தக் கண்காட்சி, 5 மாதங்களுக்குப் பிறகு எதிர்வரும் 2020 செப்டம்பரில் தொடங்கவுள்ளது.

**4.போர்ப்ஸ் இதழின்படி, மேமாத நிலவரப்படி, உலகின் அதிக சம்பளம் வாங்கும் வீராங்கனை யார்?**



அ. செரீனா வில்லியம்ஸ்

**ஆ. நவோமி ஒசாகா ☑**

இ. P V சிந்து

ஈ. சிமோன் பைல்ஸ்

- ❖ போர்ப்ஸ் இதழின்படி, ஜப்பானிய டென்னிஸ் நட்சத்திரம் நவோமி ஒசாகா உலகிலேயே அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீராங்கனையாக உள்ளார். பரிசுத்தொகை மற்றும் ஒப்பதங்களிலிருந்து கடந்த 12 மாதங்களில் $37.4 மில்லியன் டாலரை அவர் ஈட்டியுள்ளார். மேலும், எந்தவொரு விளையாட்டு வீராங்கனையும் ஒரே ஆண்டில் ₹284 கோடியை இதுவரை ஈட்டியதில்லை. இதன்மூலம் இவர் புதிய சாதனை படைத்துள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு ₹225 கோடி வருமானம் பெற்ற தடகள வீராங்கனை மரியா ஷரபோவாவின் சாதனையை இதன்மூலம் நவோமி ஒசாகா முறியடித்துள்ளார்.

**5.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "நுண்–சீப்பு" என்பதுடன் தொடர்புடைய துறை எது?**



அ. மருத்துவம் மற்றும் வைராலஜி

**ஆ. இணையம் மற்றும் தகவல் தொடர்பு ☑**

இ. சுற்றுச்சூழல்

ஈ. அணு அறிவியல்

- ❖ ஆஸ்திரேலிய அறிவியலாளர்கள் குழு உலகின் மிகவிரைவான இணைய தரவு வேகத்தை ஓர் ஒளி மூலத்திலிருந்து விநாடிக்கு 44.2 டெராபிட் (Tbps) என்ற அளவில் பதிவுசெய்துள்ளது. நொடிக்கும் குறைவான நேரத்தில் 1000 HD திரைப்படங்களை பதிவிறக்கம் செய்ய இவ்வேகம் போதுமானதாகும். இந்தப் புதிய அதிவேக இணைய சேவை ஏற்கனவே இருந்த தகவல் பரிமாற்ற சாதனங்களில் உள்ள லேசர் ஒளிக்கற்றைகளுக்கு பதிலாக, 'Micro–Comb' எனப்படும் சிறுபொருளின்மூலம் பெறமுடிந்தது. இந்த முடிவானது உலகெங்கிலும், குறிப்பாக வளரும் மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளில் பிணைய இணைப்புகளின் திறனை விரிவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6.உலக கடலாமை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**



அ. மே 22

**ஆ. மே 23 ☑**

இ. மே 24

ஈ. மே 25

- ஒவ்வொரு ஆண்டும், உலக கடலாமை நாள் மே.23 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. நில ஆமை மற்றும் நீராமை மற்றும் அவற்றின் பாதிக்கப்படக்கூடிய வாழ்விடங்கள் குறித்து மக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

- 1990'இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஆமை மீட்பு என்ற இலாபநோக்கற்ற அமைப்பு, கடந்த 2000ஆம் ஆண்டு முதல் உலக ஆமை நாள் கொண்டாட்டத்திற்கு தலைமைதாங்குகிறது. 10 வகையான ஆமைகளைக் கொண்ட அபுதாபியின் அல்ஜன் வனவுயிரியல் பூங்கா, ஆமைகளைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

**7. COVID–19 தொற்றுநோய்க்கு மத்தியில் பம்பாய் உயர்நீதிமன்றத்தின் ஓர் அண்மைய தீர்ப்பின்படி, வாழ்வுரிமையின் ஒரு பகுதியாக இருக்கும் உரிமை எது?**

அ. நலவாழ்வு உரிமை

**ஆ. கண்ணியமான முறையில் அடக்கம் செய்வதற்கான உரிமை ☑**

இ. சமூக பாதுகாப்புக்கான உரிமை

ஈ. தொடர்புகொள்வதற்கான உரிமை

- கண்ணியமான முறையில் அடக்கம் செய்வதற்கான உரிமை என்பது வாழ்வுரிமையின் ஓர் அம்சமாக அங்கீகரிக்கப்படுவதாக பம்பாய் உயர்நீதிமன்றம் அண்மையில் குறிப்பிட்டது. COVID–19 தொற்றின் சூழலில், கண்ணியமான முறையில் அடக்கம் செய்வதற்கான உரிமையை எந்தவொரு நபருக்கும் மறுக்கமுடியாது என்று அவ்வுயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸானது இறந்தோர் உடலிலிருந்து பரவுவது குறித்து உலக நலவாழ்வு அமைப்பால் (WHO) எந்தவொரு அறிவியல் ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

**8.டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் குறித்து சில்லறை வணிகர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக, சாம்சங் இந்தியா எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?**

அ. அமேசான்

**ஆ. பேஸ்புக் ☑**

இ. கூகிள்

ஈ. ஆப்பிள்

- சாம்சங் இந்தியா தனது சில்லறை வணிகர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பங்களைத் தழுவுவதற்கும் இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற தளங்களைப் பயன்படுத்துவதற்கும் பயிற்சியளிப்பதற்காக பேஸ்புக் உடன் கூட்டிணைந்துள்ளது. இருநிறுவனங்களும் ஏற்கனவே எண்ணூறுக்கும் மேற்பட்ட சில்லறை வணிகர்களுக்கு பயிற்சியளித்துள்ளன. மேலும் எதிர்காலத்தில் மேலதிக பயிலரங்கங்களை அவை நடத்தவுள்ளன. இது, சாம்சங்கின் சில்லறை வணிகப் பங்காளர்களுக்கு, தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்வதற்கும் திறன்பேசிகள் பற்றிய தகவலறிதலுக்கு வாடிக்கையாளர்களுக்கும் உதவும்.

**9.அண்மையில் காலமான விளையாட்டு வீரர் ஆஷ்லே கூப்பருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ. கால்பந்து

ஆ. கூடைப்பந்து

**இ. டென்னிஸ் ☑**

ஈ. மட்டைப்பந்து

- ஆஸ்திரேலிய முன்னாள் டென்னிஸ் வீரர் ஆஷ்லே கூப்பர் (83) காலமானார். ஒற்றையர் பிரிவில் 1957, 58ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலிய ஓப்பன் பட்டங்களை வென்ற கூப்பர், பிறகு 1958ஆம் ஆண்டு விம்பிள்டன், US ஓப்பன் பட்டங்களையும் வென்றார். அதாவது 1958ஆம் ஆண்டு மட்டும் அவர் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதுவரை பதினொரு வீரர்கள் மட்டுமே ஓராண்டில் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்கள். இதுதவிர, இரட்டையர் பிரிவிலும் நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று மகத்தான வீரராக அவர் விளங்கினார். 1991'இல் பன்னாட்டு டென்னிஸ் வாழ்த்தரங்கத்தில் அவர் இணைக்கப்பட்டார்.

**10. COVID–19 தொற்றுக்கு எதிராக போராடுவதற்கான ஐ.நா.வின் முதல் 10 உலகளாவிய முயற்சிகளில் பட்டியலிடப்பட்டுள்ள, 'குடோல் – Khudol', எந்த மாநிலத்தில் செயல்படுத்தப்படவுள்ளது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. மணிப்பூர் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. பீகார்

- ஐ.நா அவை பொதுச்செயலரின் இளையோர் தூதரால், நடைமுறையில் உள்ள COVID–19 தொற்றுக்கு எதிரான ஒரு முழுமையான போராட்டத்திற்கான முதல் பத்து உலகளாவிய முயற்சிகளில் குடோல் முயற்சி பட்டியலிடப்பட்டுள்ளது.

- குடோல் (பரிசு என்று பொருள்) என்பது யா_அல்லின் ஒரு முன்முயற்சி ஆகும். அது, 2017ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இம்பால் சார்ந்த ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். நாட்டின் முதல் திருநங்கைகள் கால்பந்தணியை உருவாக்கியதற்காக இந்த அரசு சாரா நிறுவனம் அறியப்படுகிறது. LGBTQI+ சமூகம், HIV நோய் பாதித்த மக்கள் மற்றும் பிற நோயுற்றவர்களுக்கு உணவு மற்றும் நலவாழ்வு சேவைகளை வழங்குவது இந்தத் திட்டத்தில் அடங்கும். 100 தன்னார்வலர்களுடன் சுமார் 2000 குடும்பங்களையும் தனிநபர்களையும் அந்தத் தொண்டு நிறுவனம் தற்போது உள்ளடக்கியுள்ளது

# நடப்பு நிகழ்வுகள்

**1.அரசாங்க கடன்குறித்த நிலையறிக்கையின்படி, 2018-19ஆம் ஆண்டின் முடிவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய அரசின் கடனளவு எத்தனை சதவீதமாக உள்ளது?**



அ. 67.1%

ஆ. 57.1%

**இ. 45.7% ☑**

ஈ. 5.7%

❖ இந்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கடன் நிலை குறித்த விரிவான பகுப்பாய்வை வழங்கும் அரசுக் கடனின் நிலை ஆய்வறிக்கையின் ஒன்பதாவது பதிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. 2010-2011 முதல் மத்திய அரசு அரசின் கடன் குறித்த ஒரு நிலையறிக்கையை வெளியிட்டு வருகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையின் ஒன்பதாவது பதிப்பின்படி, 2018-19 ஆண்டுகளில் மத்திய அரசின் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45.7 சதவீதமாக உள்ளது. இது முந்தைய ஆண்டின் கடனான 45.8 சதவீதத்திற்கு எதிராக ஓரளவு குறைவாகும். மொத்த மத்திய அரசின் கடனில், 94.1% உள்நாட்டுக் கடனாகவும், நாட்டின் மொத்தக்கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7 சதவீதமாகவும் உள்ளது.

**2. நடப்பாண்டு (2020) வரும் உலக அளவீட்டியல் (Metrology) நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Precision in Measurement

**ஆ. Measurements for global trade ☑**

இ. Accuracy Matters

ஈ. Measurement for Science



❖ கடந்த 1875ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட மீட்டர் சாசனத்தை நினைவுகூரும் வகையில், ஒவ்வோர் ஆண்டும், மே.20 அன்று உலக அளவீட்டியல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அறிவியல் கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கம், தொழிற்துறை உற்பத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகம் அத்துடன் வாழ்க்கைத் தரம் மற்றும் பன்னாட்டுச் சூழலின் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் ஓர் சீரான அளவீட்டு முறையை இந்தச் சாசனம் வழங்குகிறது. "Measurements for global trade" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்தச் சிறப்பு நாளுக்கான கருப்பொருளாகும்.

**3.உலக வங்கியின் தெற்காசியாவிற்கான காலநிலை மாற்றம் & பேரிடர் அபாய மேலாண்மைக்கான பயிற்சி மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. அபிஜீத் பானர்ஜி

**ஆ. அப்பாஸ் ஜா ☑**

இ. அமர்த்தியா சென்

ஈ. உர்ஜித் படேல்



❖ மூத்த இந்திய பொருளாதார நிபுணர் அப்பாஸ் ஜா, உலக வங்கியால் அதன் காலநிலை மாற்றம் மற்றும் தெற்காசியாவிற்கான பேரிடர் அபாய மேலாண்மைக்கான பயிற்சி மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவில் ஒரிசா, மேற்கு வங்கம் மற்றும் வங்கதேசத்தில் உம்பன் புயல் தாக்கிய ஓர் இக்கட்டான நேரத்தில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளின் சிக்கல்களுக்கு, சிறந்த தீர்வுகளை வழங்குவதற்காக, தகுதிவாய்ந்த நிபுணர்கள் அடங்கிய குழுவை கட்டமைப்பது, வழிநடத்துவது மற்றும் ஊக்குவிப்பது ஆகிய பணிகளில் இவர் ஈடுபடவுள்ளார்.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இந்திய தகராறு தீர்க்கும் மையத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் எது?**

Indian Dispute Resolution Centre
Helping Good People Resolve

அ. மும்பை

ஆ. சென்னை

**இ. புது தில்லி ☑**

ஈ. அகமதாபாத்

❖ முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும், சிங்கப்பூர் பன்னாட்டு வணிக நீதிமன்றத்தின் பன்னாட்டு நீதிபதியுமான நீதிபதி A K சிக்ரி, அண்மையில், இந்திய தகராறு தீர்க்கும் மையத்தை (Indian Dispute Resolution Centre) மெய்நிகராக திறந்துவைத்தார். IDRC ஆனது சில மென்பொருள், இணையதளங்கள் மூலம் தாள் பயன்பாடற்ற தகராறு தீர்க்கும் சூழலை வழங்குகிறது. IDRC'இன் நடுவர் குழுவில் உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்களில் பணியாற்றிய முன்னாள் நீதிபதிகள் மற்றும் மூத்த வழக்குரைஞர்கள், முன்னாள் அதிகாரிகள், பட்டய கணக்காளர்கள் போன்ற உள்ளனர். IDRC'கள் நாட்டின் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த வணிக இடங்களில் அமைந்துள்ளன. அதன் தலைமை அலுவலகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

**5.புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் திறன்களை அடையாளங்காணவும், வேலைவாய்ப்பு வழங்கவும், இடம்பெயர்வு ஆணையத்தை (Migration Commission) அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

அ. இராஜஸ்தான்

**ஆ. உத்தரபிரதேசம் ☑**



இ. மேற்கு வங்கம்

ஈ. பீகார்

❖ திரும்பிவரும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் திறன்களை அடையாளங்காணவும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் இடம்பெயர்வு ஆணையத்தை அமைப்பதாக உத்தரபிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது. திரும்பிவரும் தொழிலாளர்களுக்கு காப்பீடு & பணியுறுதித் திட்டத்தை வழங்கவும் அம்மாநில அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த அறிவிப்பின்போது, 23 இலட்சம் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் மாநிலத்திற்கு திரும்பியிருந்தனர். அறிவிக்கப்பட்ட இடம்பெயர்வு ஆணையமானது புலம்பெயர்ந்தோரின் விவரங்கள், அவர்களின் திறன்கள் ஆகியவற்றை சேகரித்து அவர்களுக்கு பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் கடன் வசதிகளை வழங்கும்.

**6.நடப்பாண்டு (2020) வரும் பன்னாட்டு மகப்பேறியல் புழை ஒழிப்பு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. End gender inequality! End health inequities! End Fistula now! ☑

ஆ. Save women from Obstetric Fistula

இ. Medical check-up amidst pandemic

ஈ. Health care amidst pandemic




❖ ஐ.நா அவையானது கடந்த 2013ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மே.23 அன்று மகப்பேறியல் புழை ஒழிப்பு நாளை (International Day to End Obstetric Fistula) அனுசரித்துவருகிறது. இந்த விவகாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உலகம் முழுவதுமிருந்து ஆதரவைத் திரட்டுவதற்கும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

❖ மகப்பேற்றின்போது ஏற்படக்கூடிய மிகக்கடுமையான காயங்களுள் ஒன்றுதான் மகப்பேறியல் புழை. இந்நிலை பாதிக்கப்பட்ட பெண்கள், தொற்றுநோய்களுக்கோ அல்லது பிற உடல்நலச்சீர்கேடுகளுக்கோ எளிதில் ஆளாகிறார்கள். மேலும், சமூக களங்கத்தையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர். "End gender inequality! End health inequities! End Fistula now!" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**7.லிச்சி மற்றும் மாம்பழம் ஆகிய கனிகளின் போக்குவரவு மற்றும் வீடுகளுக்கேச் சென்று விநியோகிப்பது ஆகியவற்றுக்காக இந்திய அஞ்சல்துறையுடன் ஒப்பந்தம் செய்துள்ள மாநில அரசு எது?**

அ. மத்தியப் பிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. ஹிமாச்சல பிரதேசம்

ஈ. உத்தரபிரதேசம்



❖ 'சாஹி லிச்சி' மற்றும் 'ஜர்தாலு மாம்பழம்' ஆகியவற்றை பொதுமக்களின் வீடுகளுக்கேச் சென்று விநியோகிக்க தபால் துறையும், பீகார் தோட்டக்கலைத்துறையும் ஒப்பந்தம் செய்துள்ளன. COVID–19 பரவலால் விளைந்த முடக்கம் காரணமாக, லிச்சி மற்றும் மாம்பழங்களைக் கொண்டுசென்று விற்பது விவசாயிகளுக்கு சிரமமாக இருந்தது. பொதுமக்களின் தேவையை நிறைவேற்றவும், விவசாயிகளுக்கு இடைத்தரகர்களின்றி நேரடி சந்தை வாய்ப்பை வழங்கவும் பீகார் தோட்டக்கலைத்துறையும், தபால் துறையும் கைகோர்த்துள்ளன. பீகார் மாநிலம் முசாபர்பூரின், 'சாஹி லிச்சி' மற்றும் பகல்பூரின் 'ஜர்தாலு மாம்பழம்' ஆகியவை தனது சிறப்பு நறுமணத்தால் உலகப்புகழ்பெற்றவை.

**8.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'பறக்கும் தோட்டாக்கள் – Flying Bullets' என்பதுடன் தொடர்புடைய இந்திய ஆயுதப்படை எது?**

அ. இந்திய இராணுவம்

ஆ. இந்திய கடற்படை

**இ. இந்திய வான்படை ☑**

ஈ. இந்திய கடலோர காவல்படை



❖ இந்திய விமானப்படையின் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் மேலும் ஒரு முக்கிய நடவடிக்கை –யாக, கோயம்புத்தூரின் சூலூரில் உள்ள இந்திய வான்படை தளத்தில், சமீபத்தில் மறுசீரமைக்கப்பட்ட 'பறக்கும் புல்லட்டுகள் – Flying Bullets' எண் 18 படையணிப்பிரிவு தேஜஸ் Mk–1 FOC விமானம், இந்திய விமானப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டது. இது நாட்டின் உள்நாட்டு போர்விமானத் திட்டத்தின் முக்கிய மைல்கல்லாகும். விமானப்படை தலைவர் RKS பதோரியா, இதனை இயக்கிவைத்தார்.

❖ ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் உருவாக்கியுள்ள இந்நான்காம் தலைமுறை சூப்பர்சோனிக் நவீன இலகுரக தேஜாஸ் போர்விமானத்துடன் செயல்படும் இரண்டாவது இந்திய விமானப்படை படை அணிப்பிரிவு இதுவாகும்.

**9.ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும், "ஆப்பிரிக்கா நாள்" கொண்டாடப்படுவது எப்போது?**

**அ. மே 25 ☑**

ஆ. மே 26

இ. மே 27

ஈ. மே 28




❖ 57 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட 'ஆப்பிரிக்க ஒற்றுமை' அமைப்பின் நிறுவுநாளை நினைவுகூரும் வகையில், 'ஆப்பிரிக்கா நாள்' கொண்டாடப்படுகிறது. அவ்வமைப்பானது கடந்த 1963ஆம் ஆண்டு மே.25 அன்று நிறுவப்பட்டது. அதன்பின்னர், 2002ஆம் ஆண்டில் அவ்வமைப்பு, 'ஆப்பிரிக்க ஒன்றியம்' என்று நிறுவப்பட்டது. ஆப்பிரிக்காவின் வலிமை மற்றும் பன்முகத்தன்மையையும் ஆப்பிரிக்க ஒற்றுமையை வளர்ப்பதற்கும் இந்த நாள் சிறப்பித்துக் கொண்டாடுகிறது.

❖ COVID–19 பெருந்தொற்றுநோய் காரணமாக, அந்நாள் மெய்நிகராக கொண்டாடப்பட்டது. தற்போதைய நிலவரப்படி, உலகில் COVID–19 பாதிப்புக்குள்ளானவர்களில் 1.5 சதவீதம் பேரும், அந்நோய்த்தொற்றால் உலகில் இறந்தோரில் 0.1 சதவீதம் பேரும் ஆப்பிரிக்காவைச் சார்ந்தோராவர்.

**10.ஒவ்வோர் ஆண்டும் மே.25 அன்று நாளமில்லா சுரப்பிச் சீர்கேடுடன் தொடர்புடைய எந்தச் சிறப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?**

அ. உலக நீரிழிவு நாள்

**ஆ. உலக தைராய்டு நாள் ☑**

இ. உலக எலும்புத்துளை நோய் நாள்

ஈ. உலக அடிசன் நோய் நாள்




❖ 2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மே.25 அன்று, உலக தைராய்டு நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. தைராய்டு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய தைராய்டு சங்கம் & அமெரிக்க தைராய்டு சங்கம் உலக தைராய்டு நாளை நிறுவின. தைராய்டு என்பது மிகப்பொதுவான நாளமில்லா சுரப்பிச்சீர்கேடாகும். தைராய்டின் அறிகுறிகளுக்கு சிகிச்சையளிப்பதிலும் எடை குறைக்க உதவுவதிலும் நீர் முக்கியப்பங்கு வகிப்பதாக ஜல் சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.உலக எஃகு சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

அ. இத்தாலி

ஆ. ஸ்பெயின்

**இ. பெல்ஜியம் ☑**

ஈ. சுவிச்சர்லாந்து

❖ "உலக எஃகு" என அழைக்கப்படும் உலக எஃகு சங்கம் என்பது இரும்பு மற்றும் எஃகு தொழிலுக்கான ஓர் உலகளாவிய வர்த்தக அமைப்பாகும். இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரஸல்ஸில் உள்ளது. இச்சங்கத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, ஏப்ரல் மாதத்தில் இந்தியாவின் கச்சா எஃகு உற்பத்தி 65 சதவீதம் சரிந்து 3.13 மில்லியன் டன்னாக குறைந்துள்ளது.

❖ 2019ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், 9.02 மெட்ரிக் டன் கச்சா எஃகு உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. பொது முடக்கமானது, இந்தியாவில் எஃகின் தேவை மற்றும் அளிப்பை வெகுவாக பாதித்துள்ளது. இந்த அறிக்கையின்படி, உலகளாவிய எஃகு உற்பத்தியும் 13 சதவீத அளவுக்கு குறைந்துள்ளது.

**2.ஐக்கிய நாடுகளின் பெருமைமிகுந்த, இராணுவப் பாலின சமத்துவ ஆதரிப்பாளர் விருதுக்கு (2019) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய இராணுவ அதிகாரி யார்?**

**அ. மேஜர் சுமன் கவானி ☑**

ஆ. மேஜர் அனூப் மிஸ்ரா

இ. மேஜர் அபிநந்தன்

ஈ. மேஜர் M M நரவனே



❖ 2019'இல் தெற்கு சூடானில் ஐக்கிய நாடுகள் அவை மிஷனில் (UNMISS) பெண் அமைதிக் காப்பாளராகப் பணியாற்றிய இந்திய இராணுவ அதிகாரி மேஜர் சுமன் கவானிக்கு பெருமை மிகுந்த, "ஆண்டின் சிறந்த ஐ.நா அவை இராணுவப் பாலின சமத்துவ ஆதரிப்பாளர் விருது" அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஐ.நா அவை அமைதிக்காப்பாளர்கள் நாளன்று நியூயார்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்படும் ஆன்லைன் நிகழ்ச்சியில் ஐ.நா தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டரசிடமிருந்து மேஜர் சுமன் கவானி இந்த விருதைப் பெறுவார். மேஜர் சுமன் கவானி, பிரேசில் கப்பற்படை அதிகாரி கர்லா மோன்டீரோ தெ காஸ்ட்ரோ அரௌஜோ என்பவருடன் சேர்ந்து இந்த விருதைப்பெறுவார்.

**3.மசாலா நிறுவனமான, 'சன்ரைஸ் புட்ஸ்'ஐ வாங்குவதாக அறிவித்துள்ள பல்தொழில் நிறுவனம் எது?**

**அ. ITC ☑**

ஆ. இந்துஸ்தான் யூனிலீவர்

இ. டாபர்

ஈ. மேரிகோ

- ❖ முன்னணி இந்திய பல்தொழில் நிறுவனமான ITC நிறுவனம், மசாலா உற்பத்தி நிறுவனமான சன்ரைஸ் உணவுகள் நிறுவனத்தின் 100% பங்குகளை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது. ஒப்பந்த அளவு சுமார் ₹2000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. கொல்கத்தாவை தளமாகக் கொண்ட, 'சன்ரைஸ் புட்ஸ்' கடந்த ஆண்டு சுமார் ₹600 கோடி வருவாய் ஈட்டியது. இந்நிறுவனம், கிழக்கு இந்தியா முழுவதும் விரிவான சந்தை இருப்பைக் கொண்டுள்ளது.

**4.வள மேலாண்மை சேவைகளை வழங்குவதற்காக, அவலோக்குடனான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாண்மையை அறிவித்துள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ. விப்ரோ

**ஆ. இன்போசிஸ் ☑**

இ. HCL

ஈ. டெக் மஹிந்திரா

- ❖ இந்திய தொழில்நுட்ப நிறுவனமான இன்போசிஸ், டிஜிட்டல் தளங்களின்மூலம் செல்வ மேலாண்மை சேவைகளை வழங்குவதற்காக சுவிச்சர்லாந்தைச் சார்ந்த மென்பொருள் நிறுவனமான அவலோக் உடன் ஒரு முக்கியத்துவம்வாய்ந்த கூட்டாண்மையை அறிவித்துள்ளது. அவலோக் (Avaloq) என்பது ஒரு வளமேலாண்மை மென்பொருளும் டிஜிட்டல் தொழில்நுட்ப வழங்குநரும் ஆகும். ஒப்பந்தத்தின்படி, அவலோக்கின் செல்வ மேலாண்மை தீர்வுகளுக்கான ஒரு முக்கியத்துவம்வாய்ந்த செயல்படுத்தல் கூட்டாளராக இன்போசிஸ் இருக்கும். இந்தக் கூட்டாண்மை, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு தொழில் சார்ந்த செல்வ மேலாண்மை தீர்வுகளை வழங்குவதில் கவனம் செலுத்தும்.

**5. AR500C என்பது எந்த நாட்டின் முதல் ஆளில்லா உலங்கூர்தியாகும்?**



அ. வட கொரியா

ஆ. அமெரிக்கா

**இ. சீனா ☑**

ஈ. இஸ்ரேல்

- ❖ 'AR500C' என்றழைக்கப்படும் தனது முதல் ஆளில்லா உலங்கூர்தியை, சீனா அண்மையில் இயக்கி பரிசோதித்துள்ளது. இது, பீடபூமி பகுதிகளில் பறப்பதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் அதிக உயரத்திலிருந்து துப்பாக்கிச்சூடு மற்றும் கண்காணிப்பை மேற்கொள்ளும் திறன்கொண்டது. திபெத்தின் தென்மேற்கு எல்லைகளை பாதுகாப்பதற்காக இந்தியாவுடனான நாட்டின் எல்லைகளில் இந்த ஆளில்லா உலங்கூர்தி நிறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'மாலதியான் தொழில்நுட்பம்' என்றால் என்ன?**




**அ. பூச்சிக்கொல்லி ☑** ஆ. மலேரியா எதிர்ப்பு மருந்து

இ. காசநோய் எதிர்ப்பு மருந்து ஈ. ஆல்கஹால் அல்லாத சானிடைசர்

❖ COVID–19 முடக்க நிலையால் ஏற்பட்டுள்ள மூலப்பொருட்கள் பிரச்சனை மற்றும் இதர சவால்களுக்கு மத்தியில், இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின்கீழுள்ள இரசாயனங்கள் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் துறையின்கீழ் செயல்படும் HIL (இந்தியா) லிட் என்ற பொதுத்துறை நிறுவனம், உரியகாலத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளை உற்பத்திசெய்து வேளாண்மை சமுதாயத்தினருக்கு அளிப்பதை உறுதி செய்துள்ளது.

❖ வெட்டுக்கிளிகள் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக, 'மாலதியான் தொழில்நுட்ப' மருந்தை இராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு வழங்குவதற்கு வேளாண் மற்றும் உழவர் நலன் அமைச்சகத்துடன் HIL ஒப்பந்தம் செய்துள்ளது. கடந்த வாரம் வரையில் இந்த நிறுவனம், 67 MT அளவுக்கு, 'மாலதியான் தொழில்நுட்ப' மருந்தை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

**7.சம்பா சுரங்கப்பாதையுடன் தொடர்புடைய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. உத்தரகண்ட் ☑



ஆ. ஜம்மு & காஷ்மீர்

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. சிக்கிம்

❖ மத்திய சாலைப்போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் நிதின் கட்கரி, சார்தாம் பரியோஜனா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சம்பா சுரங்கப்பாதையை காணொலிக்காட்சிமூலம் தொடங்கிவைத்தார். ரிஷிகேஷ் – தராசு தேசிய நெடுஞ்சாலையில் (NH94) பரபரப்பான சம்பா நகருக்கு கீழே 440 மீட்டர் நீளத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் முக்கிய மைல்கல் இலக்கை எல்லைப்புறச் சாலைகள் நிறுவனம் (BRO) சாதித்துள்ளது.

❖ பிரபலமான சார்தாம் திட்டத்தின்கீழ் சுமார் ₹12,000 கோடி செலவில் 889 கி.மீ தூரத்துக்கு சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதில் BRO, புனிதத்தலங்களான கங்கோத்ரி மற்றும் பத்ரிநாத்துக்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 250 கி.மீ தூரத்துக்கு சாலை அமைக்கிறது.

**8. CSIR–IIIM (இந்திய ஒருங்கிணைந்த மருந்து நிறுவனம்) ஆனது எந்த நிறுவனத்துடன் கூட்டிணைந்து புதிய RT–LAMP அடிப்படையிலான COVID–19 நோயறி கருவியை உருவாக்கவுள்ளது?**

அ. டாடா குழுமம்

ஆ. ரிலையன்ஸ் தொழிற்துறைகள் ☑

இ. TVS மோட்டார்ஸ்

ஈ. லார்சன் & டூப்ரோ

Reliance
Industries Limited
Growth is Life

❖ ஜம்முவில் அமைந்துள்ள அறிவியல் & தொழிலக ஆய்வுமன்றத்தின் அங்க ஆய்வகமான அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுமன்றம் – இந்திய ஒருங்கிணைந்த மருந்து நிறுவனம் (CSIR–IIIM), ரிவெர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ் – லூப் மீடியேட்ட் ஐசோதெர்மல் ஆம்ப்ளிபிகேஷன் (RT–LAMP) சார்ந்த COVID–19 நோயறி கருவியை தயாரிக்கும் முயற்சியில் ரிலையன்ஸ் தொழிற்துறையுடன் இணைந்துள்ளது. இதற்கான புரிதல் ஒப்பந்தம் ஒன்றும் தொழிலக ஆய்வுமன்றம் – இந்திய ஒருங்கிணைந்த மருந்து நிறுவனம், ஜம்மு மற்றும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இடையே கையெழுத்திடப்பட்டுள்ளது.

- நோயாளிகளின் மூக்கு / தொண்டையிலிருந்து எடுக்கப்படும் மாதிரிகளிலிருந்து செய்யப்படும் நியூக்ளிக் அமிலம் சார்ந்த சோதனையே COVID–19 RT–LAMP சோதனையாகும். இது ஒரு துரித, மலிவு விலையிலான, துல்லியமான சோதனையாகும். RT–LAMP சார்ந்த COVID–19 அறிசோதனைக் கருவியின் பாகங்கள் எளிதாகக் கிடைப்பதும், அதனை முழுவதும் இந்தியாவிலேயே தயாரிக்கலாம் என்பதுவும் இந்த அறிசோதனையின் சாதகமாகும்.

**9. 'அரக்கு வேளாண்மை'யை ஒரு விவசாய நடவடிக்கையாக அறிவிப்பதற்கு முடிவு செய்துள்ள மாநில அல்லது யூனியன் பிரதேச அரசு எது?**



அ. பீகார்

ஆ. புதுச்சேரி

**இ. சத்தீஸ்கர் ☑**

ஈ. ஒடிசா

- 'அரக்கு வேளாண்மை'யை ஒரு விவசாய நடவடிக்கையாக அறிவித்தற்கான மாநில வனத்துறையின் முன்மொழிவுக்கு, சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் அண்மையில் ஒப்புதல் அளித்தார். இது, விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெறவுள்ளது. அரக்கு என்பது பல்வேறு விதமான அரக்குப்பூச்சிகளால் சுரக்கப்படும் பிசுபிசுப்பான ஒரு திரவமாகும். நாட்டில் இதுபோன்ற அரக்கு உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களுள் சத்தீஸ்கரும் ஒன்றென உள்ளது. இந்நடவடிக்கை, 'அரக்கு வேளாண்' மேற்கொள்ளும் விவசாயிகளின் உற்பத்தித்திறனையும் அவர்களுக்கான கடன் கிடைப்பையும் அதிகரிக்கும்.

**10. நியூயார்க் அறிவுசார் சொத்துச் சட்ட சங்கத்தின், 'ஆண்டின் சிறந்த கண்டுபிடிப்பாளர் விருதை' வென்ற இந்திய–அமெரிக்கர் யார்?**



அ. சிவா ஐயாத்துரை

**ஆ. இராஜீவ் ஜோஷி ☑**

இ. தாமஸ் ஜஜாரியா

ஈ. மது சுதன்

- இந்திய அறிவியலாளர் இராஜீவ் ஜோஷிக்கு, நியூயார்க் அறிவுசார் சொத்துச் சட்ட சங்கம், "ஆண்டின் சிறந்த கண்டுபிடிப்பாளர் விருதை" வழங்கியுள்ளது. அவர் மும்பை IIT'இன் முன்னாள் மாணவராவார். பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் கூற்றுப்படி, இவர், 250'க்கும் மேற்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களை கண்டறிந்துள்ளார். அவையனைத்தும் காப்புரிமை பெற்றவை. தற்போது நியூயார்க்கில் உள்ள IBM தாம்சன் வாட்சன் ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றி வருகிறார். மின்னணு துறையில் அவராற்றிய பங்களிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) திறன்களை மேம்படுத்தியதற்காக இந்த விருதுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

---